
ஈழத்து ஞானி

# ஸ்ரீ இராமச்சந்திர மகரிக்ஷி..



அருட்சீடர். கலாநிதி ஜெ.குமாரசுவாமி

Dr. K. Jey...
(Kavivezham ... )
41/24, ...
Chem...
Nayanm...
Nallur, Jaffna

Dr. K. Jeyakumar
(Kavivezham Bharathibalan)
41/24, Bharathi Lane
Chemmani Road
Nayanmarkaddu
Nallur, Jaffna

# ஈழத்து ஞானி
# ஸ்ரீ இராமச்சந்திர மகரிஷி..

## அருட்சீடர். கலாநிதி
## ஜெ.குமாரசுவாமி

ஸ்ரீ இராமச்சந்திர மகரிஷி அறக்கட்டளை
வெளியீடு

**நூல் பெயர்:** ஈழத்து ஞானி ஸ்ரீ இராமச்சந்திர மகரிஷி...

**ஆசிரியர்** : கலாநிதி ஜெ.குமாரசுவாமி ( பாரதிபாலன் )
Dr.Jeyakumar Kumarasamy ( Bharathibalan )
E.mail.bharathibalan@hotmail.com

**மொழி** : தமிழ்

**பொருள்** : ஆன்மீக வரலாறு

**பக்கம்** : 112

**முதல் பதிப்பு** : 2012

**விலை** : ரூ 200/=

**அச்சாக்கம்** : Caxton

**வெளியீடு** : மகரிஷி பதிப்பகம்,
55 ஆடியபாதம் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தொ..பே. 0094 - 0773629781

# உள்ளே....

கலாநிதி ஜெ.குமாரசுவாமி


பதிப்புரை - 05

ஈழத்தின் ஓர் அற்புத ஞானியார்! - 06

வையம் தழைக்க வந்த சமரசஞானி! - 09

இராமச்சந்திர இலிங்கேஸ்வரர் காக்க! - 11

**Sacred life of Maharishi Sri Ramachandra - 14**

**මෙම පොතෙන් විග්‍රහ කරනු ලබන්නේ - 15**

என்னுரை - 16

இறைவனின் மானிட அவதாரம் - 26

பூலோகத் தந்தையர் சங்கரப்பிள்ளை - 26

புனித அன்னையாரும் அவரது பின்னணியும் - 33

அன்னையின் சகிப்புத் தன்மை - 35

பிள்ளை வரம் வேண்டி - 36

அவதார சொப்பனம் - 37

திரு அவதாரம் - 38

'இராமச்சந்திரன்' திரு நாமம் - 39

மகிமை வெளிப்பாடு - 40

அற்புத அறிவாற்றல் - 42

பண்டிதராதலும் பணிக்கெனச் செல்லலும் - 44

'வெள்ளை அண்ணை' எனும் திருநாமம் - 44

இலண்டனும் வியந்தது - 50

ஈழத்து அறிவுலகம் மெச்சியது - 50

மனித உரிமை - 52

திருக்கேதீச்சர புராணம் - 55

செவ்விளநீர் கேட்டார்! - 56

இளைப்பாறலும் சமுதாயக் கடமையும் - 57

குழந்தைகள் தோழர் - 58

சோதிட வல்லுனர் - 58

விஞ்ஞான மகரிஷி - 59

கிறிஸ்தவர் உறவு - 60

இஸ்லாமிய உறவு - 62

எம்பெருமானும் தாவீது அடிகளாரும் - 62

ஒன்றேகுலம், ஒருவனே தேவன்! - 64

எம்பெருமானும் தமிழக ஆன்மீக வாதிகளும் - 65

ஈழத்து ஞானி ஸ்ரீ இராமச்சந்திர மகரிஷி...
பகவான் சத்யசாயிபாபாவுடன் எம்பெருமான் - 66
சப்த கன்னியருக்குத் தாகசாந்தி! - 67
இறைமைந்தரும், தேவலோகத்தினர் சஞ்சாரமும் - 69
அடியவர்க்கு இனியவர் எம்பிரான் - 71
இலவச பாடநூல் - 72
எம்பெருமான் பாட நூல்கள் - 73
இனிக்கும் யாப்பு - 74
அன்னையார் மறைந்தபோது - 80
மகரிீ தந்த ஒரு நெறி! - 81
சமண முனிவராக முன் பிறவி - 83
ஓருவனே தேவன் - 88
எம்பிரானும் யோக சுவாமிகளும் - 90
'வெள்ளை அண்ணை' தெய்வ வடிவம் - 91
ஆலயமானார் - 92
ஸ்ரீ இராமச்சந்திர இலிங்கேஸ்வரர் மகிமை - 96
கண்கண்ட தெய்வம் - 97
ஜேர்மனியில் புத்தர் விகாரத்தில் மகரிீ தரிசனம் - 98
**யாழ்ப்பாணம் கொழும்புத்துறை ஸ்ரீ இராமச்சந்திர இலிங்கேஸ்வரர் பக்திப் பாமாலை**
அருள்மழை பொழியவே. - 107
முந்தை வினை தொலைக்க - 108
சொந்த மண்ணின் பாசம் - 109
மனிதனை மனிதன் - 110
அன்பு நம்பிக்கை - 112
பூரண நிலவொளியில் .. - 113
இமைப் பொழுதும் என்நெஞ்சில் - 115
உத்தமர் உறவு - 117
ஓம் நம சிவாய! - 118
சீர் பரவும் ஈழமணித் திருநாடு! - 120

# பதிப்புரை

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவ மரபை மீளவும் 'சமரச சைவ மரபு' என நிலை நிறுத்த ஈழ நல்லூரில் திரு அவதாரம் புரிந்தவரே இராமச் சந்திர மகரிஷி.. ஈழ நல்லூரில் எமது மகரிஷி தாம் வாழ்ந்து கொண்டிருந்த காலத்திலேயே இனம், மதம், மொழி, சாதி கடந்து அனைத்து மானிட வர்க்கத்தையும் நேசித்தவர். ஈழ மக்கள் அனைவராலும் மெய்யன்போடு வணங்கப் பெற்றவர்.

உலக மாந்தர் ஓரினம் எனவும், அவர்கள் பேசுகின்ற அனைத்து மொழிகளும் ஆரியம், திராவிடம் என்ற பேதமையற்ற ஒரே மொழிக் குடும்பம் எனவும் தமது அற்புத ஆய்வுகளால் நிருபித்து உலக சமரச ஒருமைப்பாடு கண்டவர்.அனைவருக்கும் பொதுவான ஏக தெய்வத்தை உணர்த்தியவர். தமிழ் நாட்டிலே சமரச சுத்த சன்மார்க்கம் உருவாக்கிய அருட்பிரகாச வள்ளலார் எனும் இராமலிங்க சுவாமிகள் பின்னால் ஈழத்தே அவதிரித்து, தமிழ்நாட்டு மக்கள் உள்ளிட்ட அனைத்துலக ஆன்மீக, ஆன்மநேயம் சார் அறிவுலக மக்களால் போற்றி வழிபடப்பெற்று வருபவரே வெள்ளை அண்ணை என அனைவராலும் அன்று அன்போடு அழைக்கப்பெற்று வந்த எமது இராமச்சந்திர மகரிீ ஆவார். அவரை இறை அவதாரம் எனக்கண்டு 1977 பங்குனி உத்தரதினத்திலே மகரிஷி மறைவின்பின் கொழும்புத்துறை சுவாமியார் வீதியில், அவர்தம் சீடர்கள் அமைத்த மடாலயமே 1984..ல் எழுந்த தையல்நாயகி சமேத ஸ்ரீ இராமச்சந்திர இலிங்கேஸ்வரர் திருத்தலமாகும்.

மேற்படி எம்பெருமான் திருத்தலம் போர் அனர்த்தத்தின்பின் இரண்டாவது கும்பாபி'ேகம் கண்டுள்ளது. இவ்வேளை எமது நல்லூர் மகரிஷி பதிப்பகம்' மகரிஷியின் அருட்சீடர் இறை வரம்பெற்ற பிரபல எழுத்தாளரும் கவிஞருமான கலாநிதி ஜெயக்குமார் குமாரசுவாமி உருாவாக்கியுள்ள ஈழத்து ஞானி ஸ்ரீ இராமச்சந்திர மகரிஷி எனும் ஆன்மீக வரலாற்று நூலை வெளியிட்டு வைக்கின்றது. இந்நூல் ஈழத்திருநாட்டிலே வாழும் அனைவருக்கும், இன்றைய சூழ்நிலையில் இறை நம்பிக்கை,மனித நேயம் உருவாக வழிசமைக்கும் ஔடதமாக அமையும் என்பது திண்ணம்.

மகரிஷி பதிப்பகம்
55,ஆடியபாதம் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்
இலங்கை

## ஈழத்தின் ஓர் அற்புத ஞானியார்!

'ஈழத்து ஞானி இராமச் சந்திர மகரிஷி' எனும் ஆன்மிக நூல்மூலம் பண்டிதர் இராமச்சந்திரனாரின் தூய வாழ்க்கை வரலாற்றினை வெளிக்கொணரும் அவர் சீடர் கலாநிதி. ஜெயக்குமார் குமாரசாமியின் பணி வரவேற்கத் தக்கது. பண்டிதர் கலாநதி இராமச் சந்திரனாருடன் (வெள்ளை அண்ணை மகரிஷி) 30 ஆண்டுகட்கு முற்பட்ட அனுபவம் என்னுடையது.

எங்கள் இராமச்சந்திர ''மகரிஷி''யுடன் அமைந்த அறிவியல் ஆன்மிக சந்திப்புக்கள் ஒவ்வொன்றும் பசுமரத்தாணிபோல் என்னகத்தே இன்றும் பதிந்துள்ளது.

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் நூற்றாண்டுவிழா, நான்காவது உலகத் தமிழராய்ச்சி மாநாடு நடந்த 1974.. காலப்பகுதியில் எனது சந்திப்புக்களில் சில சுவாமி ஞானப்பிரகாசரின் மொழியியல் ஆராய்ச்சித் தொடர்புப் பாலமாகவும் எமது மகரிஷி அவர்களுடன் அமைந்தது.

சுவாமி ஞானப்பிரகாசர், ஜேர்மன் மொழி வல்லுனர்கள் முதலான மொழியியல் வல்லுனர்களுக்குப் பின்தோன்றிய ஆய்வினருள் இராமச்சந்திரனார் ஆய்வுகள் தனி இடத்தை வகிக்கக்கூடியது.

அவருடைய ஆய்வுகள் மிகவும் சிறப்பும், முக்கியத்துவமும் வாய்ந்தவை.

’ ’கற்றாரைக் கற்றாரே காமுறுவர்.'' என்பதற்குப் புறநடையாக , மனித ஈடேற்றத்திற்கு வழி வகுக்கவல்ல சில அறிவு ஜீவிகளது ஆக்கங்களையும் ஓரங்கட்டுவதாய் இலங்கைப் பல்கலையின் விற்பன்னர்கள் விளங்கியபோதும் இராமச்சந்திரர் விரிந்த மனம் ஆழ்ந்த, அகண்ட அறிவு அவற்றினை விளங்கி ஏற்பதாயிற்று.. இராமச்சந்திரர் என்னும் வெள்ளை அண்ணை

ஓர்அறிவுக்கடல்.,சர்வகலாசாலைகளில் பல ஏரிகள் உண்டு. அவைகளால் அவற்றிற்கு வெளியே உள்ள அறிவுச் சுனைகள் ஏற்புரிமை பெறுவதில்லை.

ஞானப்பிரகாசர்,தாவீது அடிகளார், இராமச்சந்திரனார் முதலிய அறிவுக்கடல்கள்,அதிலும், இராமச் சந்திரனார் எழுதிய சில கட்டுரைகளும், மொழியியல் சொற்பொழிவுகள், உரையாடல்களும் மொழியியலில் மாத்திரம் அல்லாது, மருத்துவம்,கணிதம் சமய இலக்கியங்களிலும் அவரைப் பேராசான் ஆக்கிற்று..
1974..ல் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிற்கு அவர் சமர்ப்பித்த மொழியியல் கட்டுரையும்,பின் ஞானப்பிரகாசர் மொழியியல் ஆய்வுச் சிறப்புப் பற்றிய எழுத்துப்பிரதிகளும் அன்று பிரபலங்களாகி நின்ற சில தீரக்க தரிசனமற்ற அறிவு வட்டங்களால் மறைக்கப் பெற்றாலும் ஈழத்தில் தோன்றிய அந்த அற்புத ஞானியரது அறிவின் உன்னத நிலையையே அவை உணர வைத்தன..

இவற்றிற்கெல்லாம் அடிநாதமாக அமைந்த அம் மகரிசியின் ஆன்மிகச் செறிவே அவரது பயன்தரு அறிவியல் வெளிப்பாட்டின் உள் இரகசியம் என்பது சிலருக்கே தெரிந்த உண்மை.

அனுபூதிநிலையில் அவரைச் சில தடவைகள் சந்தித்ததுண்டு. அது, பின்னால் எனக்கு திருவண்ணாமலையில் ரமண மகரிஷியின் பிரசன்னத்தையே நினைவூட்டிற்று. அங்கே,ஆணவம் கன்மம்,.மாயை அற்ற நிஷ்ட நிலைக்குள் புகும் ஒருவரின் பிரகாசம் தென்பட்டது. அதன் ரிஷிமூலம் தெரிவது அரிதாக இருந்தது.
அது, அம் மகரிஷி கூற்றின்படி சமண முனிவர்களின் ஊற்றில் இருந்து ஓடிய தெளிநீர்தான். பின்னர் 1977.. ல் அவர் மறைவின்முன்

ரமணமகரிஷியின் முற்றும் துறந்த "நான்" அற்ற நிர்மலமான நிர்வாணநிலையில் இறுதித் தரிசனத்தில் என் கிறிஸ்தவ செபநாத ஒலியுடன் இராமச்சந்திர மகரிஷி கலக்கும் சமரசபூமிப் பிரபஞ்சத்தின் வெட்டவெளி அடிவானம் தென்பட்டது.

பிரபஞ்ச ஒளியில் கலந்த வள்ளலார்,சித்த ஞானிகளில் ஒரு தனித்துவ ஒளிப்பிளம்பின் சுவாலை இராமச்சந்திர மகரிஷி.. இன்று, அந்தத் திவ்யஒளி கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் ஸ்ரீ இராமச் சந்திர இலிங்கேஸ்வரராக ஆனந்த சமாதி நிலையில் பிரகாசிக்கத் தொடங்கிவிட்டது..

அருட்திரு. கலாநிதி ஜே.ஈ.ஜெயசீலன்
யாழ்ப்பாணம்
19.01.2012

கலாநிதி ஜெ.குமாரசுவாமி

## வையம் தழைக்க வந்த சமரசஞானி!

யாழ்ப்பாணத்து நல்லூர் சமரசஞானி இராமச்சந்திர மகரிஷி அவர்களின் அருளாலயம் யாழ். கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் ஸ்ரீ இராமச் சந்திர இலிங்கேஸ்வரர் ஆலயமாக அமைக்கப்பட்டு இன்று அதன் நிருவாகத்தினரால் இரண்டாவது மகா கும்பாபிஷகம் நடைபெற இருப்பதை அறிந்து மட்டற்ற மனமகிழ்வு அடைகின்றோம்.

யாழ்ப்பாணத்தில் வாழையடி வாழையென வந்த சித்த, ஞான பரம்பரையுள் தவத்திரு. இராமச்சந்திரன் எனும் மகரிஷியும் ஒருவராவர். இவர், சேர்.பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் செயலாளராக இருந்த சங்கரப்பிள்ளை என்னும் தவசீலரின் தவப் புதல்வராவார்.

ஈழத்து தவஞானி யோக சுவாமிகளின் ஞானப் பார்வை அன்று இவரை சிவாம்சம் பொருந்திய மகரிஷி என இனங்கண்டுள்ளது. நல்லூர் இராமச்சந்திர மகரிஷி ஈழத்து அநுபூதிமான்களில் தனிச் சிறப்புடையவராக மதிக்கத்தக்க பெருமைக்குரியவர். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற தமிழ்ப்பண்பாட்டிற்கு ஓர் உதாரண புருஷராக நைஷ்டிகப் பிரமச்சாரியாக வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய மகாவீரராவார்.

இவர் உலக சமயங்களிடையே காணும் ஒருமைப்பாட்டின் ஊடாக இறைவன் ஒருவனே என்பதை உலகிற்கு உணர்த்தி சமரச சிவமார்க்கத்தை உலகிற்களித்த மகாஞானி.. தமிழ் மந்திரம் எனும் திருமந்தரம் தந்த திருமூலரின் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பதை வாழ்ந்து காட்டி வடிவம் கொடுத்த பெருமஹான்.

உலகை ஒரு குடும்பமாக்கிய இவரின் மொழியியல் சிந்தனைகள் ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்தினரால் வியந்து பாராட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.திருக்கேதீஸ்வர புராணத்தை இயற்றிய தனிச்சிறப்பும் இவருக்கு உண்டு.

உபதேசத்துடன் மட்டும் நில்லாது கல்வி,உணவு, மருத்துவ உதவி முதலான மனித அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்து தம்மை நாடிவந்தோர் குறை தீர்த்த பெருவள்ளலார்.. பிற சமயிகளாலும் போற்றி வணங்கப்படும் பெருமைக்குரியவர்..இவ்வாறு, மகரிஷியின் அற்புத வாழ்க்கை வரலாறு கூறும் இந்நூல் அவர் பெருமை தாங்கும் பக்திப்பாமாலை இணைந்து வெளிவருவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம. மேற்குலகிலே மகரிஷி மறைந்த பங்குனி உத்தர நாளிலே விசேட வானொலி நிகழ்வுகள் நடைபெறுவதாகவும் அறிந்து உவகை பூத்து நிற்கிறோம்.

இத்திருப்பணியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, அதன் இயக்க சக்தியாக விளக்கும் அருட்சீடர் கலாநிதி ஜெயக்குமார் குமாரசுவாமி (கவிவேழம் பாரதிபாலன்) அவர்கள் உருவாக்கி இருக்கும் இராமசச்ந்திர மகரிஷியின் பெருமை உரைக்கும் 'ஈழத்து ஞானி ஸ்ரீ இராமச் சந்திர மகரிஷி' எனும் இந்த அருள்நூலும் பக்திப்பாமாலை இறுவட்டும் ஆன்ம சுகம் இழந்து தவிக்கும் எமது மக்களுக்கு அருமருந்தாக அமையும். உலகம் சகோதர உறவாய் ஆக்கம் பெற வேண்டும் என்ற வையம் தழைக்க வந்த இராமச் சந்திர மகரிஷியின் அருளாணையை ஏற்று அருட்சீடராய் இறை வரம் பெற்ற ஜெயக்குமார் அவர்கள் ஆற்றிவரும் ஆன்மிக ஆத்மநேயப் பணிகளைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். வையம் தழைக்க வந்த சமரசஞானி எழுந்தருளும் ஸ்ரீ இராமச்சந்திர இலிங்கேஸ்வரர் அருட்கடாட்சத்தால் அனைவரும் இன்புற்று வாழ்வோமாக!

டாக்டர் மா. வேதநாதன் M.A. ph.D,
போராசிரியர் & தலைவர்
இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்,
இலங்கை

கலாநிதி ஜெ.குமாரசுவாமி
அரியரத்தினம் அன் கோ,
215,கொழும்பு வீதி,
கண்டி,
09.12.2011

**இராமச்சந்திர இலிங்கேஸ்வரர் காக்க!**

நாங்கள் "வெள்ளை அண்ணை" எனப் பாசமுடன் அழைத்துவந்த இராமச் சந்திர மகரிஷி அவர்கள் திரு அவதாரம் புரிந்த நல்லூர்,கலைமகள் வீதியிலே நானும் பிறந்து வளர்ந்தவன்.

ஐயாத்துரை வாத்தியார் என ஊரவர் அழைத்துவந்த எனது தந்தையார் வெள்ளை அண்ணை அவர்களின் அற்புத ஆற்றல்களை சிறு வயதிலே எனக்குச் சொல்லி வந்திருக்கின்றார்.

எமது உறவினர் பலர் மகரிஷியின் ஆன்மிக உறவிலே திழைத்தவர்கள்.. அவரது, அரவணைப்பினால், அறிவுக் கொடையால் வளர்ந்தவர்கள்..
நானும், சிறுவனாக இருந்தபோது மகரிஷியின் இல்லம் சென்றவன். வெள்ளை அண்ணை என்று பாசமுடன் அழைத்து அவரது தூய்மையான அன்பு மழையிலே நனைந்தவன்.

எனது அரியரத்தினம் அன்கோ தொழில் நிறுவனமும் எனது வாழ்வும் பின்னர் கண்டியிலே நிரந்தரமாக அமைந்ததால் எப்போதாவது யாழ்ப்பாணம்,நல்லூர் செல்லும்போது வெள்ளை அண்ணை அவர்களை தரிசித்துத் திரும்புவேன்.

1970..ம் ஆண்டில் 'வெள்ளை அண்ணை' அவர்களை அவரது தந்தையாரும் அவரது மருமகனான இந்நூலாசிரியர் அருட் சீடர் ஜெயக்குமாரும் கண்டியில் எமது இல்லம் அழைத்து வந்தனர். வெள்ளை அண்ணை அவர்கள் கண்டிக்குவந்து எமது இல்லத்தில் இருநாட்கள் எம்மோடு தங்கி இருந்தது நாங்கள் செய்த புண்ணியமே. அவரது வேண்டுதலின் பேரில் பேராதனைக்கு அழைத்துச் சென்று அவரது அன்புக்குப் பாத்திரமான பல்கலைக்கழக நூலகர் முருகவேள் அவர்களது

விடுதியில் விட்டு விட்டு வீடு திரும்பினேன் . வெள்ளை அண்ணை அவர்கள் நூலகர் முருகவேள் விடுதியில் இருந்து கொண்டு பேராதனைப் பல்கலைக் கழகம் சென்று மொழி ஆராய்ச்சியை மேற்கொணடார்.. அப்போது, பேராதனையில் உள்ள குறிஞ்சிக்குமரன் கோயிலில் பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைமையில் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை இடம் பெற்றது. அதிலே வெள்ளை அண்ணை அவர்கள் சொற்பொழிவாற்றினார். அதற்கு அங்குள்ள இந்து மாமன்றத்தின் கணக்குப் பரிசோதகராக இருந்த நானும்,முன்னர் வெள்ளை அண்ணையின் மாணவர்களாய் இருந்த பல்கலைக் கழக மாணவர்களும், விரிவுரையாளர்களும் ஒழுங்கு செய்தோம். வெள்ளை அண்ணை அவர்கள் அப்பர் சுவாமிகளைப் பற்றி சொற்பொழிவாற்றிய போது, அதிலே இன்றைய விஞ்ஞான தத்துவங்களை இணைத்து மிகவும் அற்புதமாக சொற்பொழிவு ஆற்றினார். அங்கே வந்திருந்த பல்கலைக்கழகப் பேராசிரியர்கள்,மாணவர்கள் தம்மை மறந்து அதனை ஆவலாக உள்வாங்கினார்கள். விரிவுரையாளரகள், மாணவர்கள் அவரை வணங்கினார்கள். வெள்ளை அண்ணை அவர்கள் ஆன்மிக உபதேசங்களுடன் நில்லாது உலக மக்களின் விரிசல்களையும் துன்ப துயரங்களையும் நீக்கும் வழிமுறைகளையும் வகுத்த பெரு ஞானி. எமது மத்தியிலே வாழ்ந்த அதி அற்புத ஆற்றல் படைத்த அவதார புருஷரை எமது ஈழ மக்கள் அனைவரும் அன்றே ஏற்றிருந்தால் நாங்கள் கடந்து வந்த பாதைகளில் கல்லோ, முள்ளோ வருத்தி இருக்காது. அத்தகைய வெள்ளை அண்ணை அவர்கள் 1977..ம் ஆண்டிலே மறைந்தபின் அவருக்கு சீடர்கள் கொழும்புத்துறையில் சிவாலயம் அமைத்துள்ளாரகள் என்ற செய்தி அறிந்தபோது உள்ளம் சிலிர்த்தது. நாட்டின் அவலமான சூழ்நிலையால், யாழ்ப்பாணம் கொழும்புத்துறையின் அச் சிவாலயத்தை மீண்டும் புனருத்தாரணம் செய்து 2..வது கும்பாபிசேகமும் இடம்பெற வகை செய்துள்ளனர்.

இவ்வேளை வெள்ளை அண்ணை மகரிஷியைப் பற்றிய ஆன்மிக நூல் ஒன்றை வெள்ளை அண்ணை மகரிஷிக்கு

அப்போது, குருசேவை செய்து கொண்டிருந்த ஜெயக்குமார் அவர்கள் வெளியிடுவது மிகவும் பொருத்தமானதே. ஜெயக்குமார் 1970..ம் ஆண்டில் கண்டி, பேராதனைக்கு வெள்ளை அண்ணை அவர்களோடு வந்தவர். குருசேவையில் ஈடுப்பட்டவர். தமிழ்ப் புலமை மிக்க இலக்கியப் படைப்பாளி.

மகரிஷி மறைவின் பின்னரும் ஜெயக்குமார் அவர்கள் தமது ஆன்மீக, மனிதநேயத் தொண்டென எமது மக்களுக்கு பயன்தரும் நூலகளைப் படைத்துவருவது மனதுக்கு நிறைவினைத் தருகின்றது. இன்றைய காலப்பகுதியில் நிம்மதி இழந்து தவிப்போருக்கு இத்தகைய நூல்களே தேவை..உலகம் சமரசத்தில் வாழ இத்தகைய தொண்டினில் ஈடுபடும் நல்ல உள்ளங்களாலேயே இப்பூமி வாழும்.. அந்த வகையிலே ஜெயக்குமார் அவர்களது தூய்மையான தொண்டிற்கு எமது தமிழ் மக்கள் என்றும் கடமைப்பட்டவர்கள். இராமச்சந்திர இலிங்கேஸ்வரர் ஆலயத்தின் இரண்டாவது கும்பாபிஷேகம் இடம்பெறும் இவ்வேளை இறைவன் இன்னருளால் ஈழம்வாழ் அனைத்து மக்களும் தமது அனைத்துப் பேதங்களும் நீங்கி சகோதரர்களாக ஒருங்கிணைந்து இன்புற்று வாழ இராமச்சந்திர இலிங்கேஸ்வரர் துணை நிற்பாராக..!
”மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்”

ஐ.அரியரத்தினம்.
கண்டி

103, Ganeshapuram,
Andankulam,
Trincomalee
15.03.2012

**Sacred life of Maharishi Sri Ramachandra**

This valuable book tells the life of Ramachandra Maharishi who is fondly called "Vellai Annai" by his disciples and others.

His incarnation and his love and compassionate life towards his fellow beings have been clearly recorded by Kavivezham Bharthibalan, one of Maharishi's favourite disciples.

This book is the need of the present when we all live in distress because of selfishness and flare up petty differences concerning language, religion and race. And thus cause enmity.

Maharishi's life is guidance to all who yearn for peace and harmony.

I recommend this sacred book to all and want them to read it and lead a meaningful life.

A.J.Pushparajah
Retired Instructor
in English visiting Teacher open university Srilanka

මෙම පොතෙන් විග්‍රහ කරනු ලබන්නේ
වෙල්ලෙල අන්නෙසී යන අන්වර්ථ නාමයෙන්
හඳුන්වනු ලබන රාමචන්ද්‍ර මහා රිෂිගේ
ජීවිත අන්දරය යි.

ඔහුගේ පුනුරුත්පත්තිය සහ ජීවිතය ද
අන්‍ය මනුෂ්‍යයින් කෙරෙහි ඔහු තුළ වූ
අපරිමිත ආදරය ද කවි වේෂන් "භාරතී බාලන් ම
කවියා විසින් මෙම පුස්තකයෙහි මනාව සඳහන් කර ඇත.

මෙම පොත භුදු ආත්මාර්ථය හා ජාති ආගම්
භාෂා වැනි පටු සීමා තුළ හිර වීඅසහනයෙන් පෙළෙන
වත්මන් සමාජමය අවශ්‍යතාවන් සම්පූර්ණ කරයි.

සාමය හා සංහිඳියාව අගයන සැමට මහා රිෂිගේ
ජීවිතය මහඟු ආදර්ශයකි"
අර්ථවත් දිවියක් පතන සියළුම දෙනා මෙම පුස්ථකය
කියවනු ඇතැයි උදක්ම බලාපොරොත්තු වේ.

එච්.පී.ඩී.පී. උදයසිරි
ඉංගිලීසි ගුරුවරයා

# என்னுரை

எமது ஈழத் திருநாடு, உலகிலே முதல் மனிதன் தோன்றிய மலையாக மேற்குலக ஆய்வினரால் கூறப்படும் Adams Peak எனும் சிவனொளிபாதபாதமலையைக் கொண்டது. அதனால், உலகின் அனைத்து மதங்களையும் தன்னகத்தே பொதிந்துள்ளது.

அத்தகைய எமது சிவபூமி பஞ்ச ஈஸ்வரங்கள் கொண்டதாய் பூர்விக புராண வரலாற்றுச் சிறப்புத் தாங்கியது.அருள்நிறைந்த இப்பூமிக்கென இறைவனால் படைக்கப்பெற்ற மனித குலத்தினர் வசதி வாய்ப்புக்கள் பெற்றதும், தான் என்ற ஆணவம் தலைக்கேறத் தலைமை வெறி கொண்டு இப் பூமியைக் காலங்காலமாகச் சின்னாபின்னப் படுத்தி வந்தனர்.

இறைவனோ மனிதர்மீது கொண்ட கருணையினால் தமது அருள் அம்சம் பொருந்தியவர்களாய்க் காலத்திற்குக் காலம் இப் பூமிக்குச் சித்தர்களையும், ஞானிகளையும் அனுப்பி வைத்தார்.

ஈஸ்வரன் எனச் சிறப்பிக்கப்பெற்ற ஈழத்து மன்னனான சிவபக்தன் இராவணனுக்கும், குபேரனுக்கும் தந்தையான புலஸ்தியர் என்ற ஈழத்துச் சித்தரே முதன்முதலாக புராணத்தை உருவாக்கினார் என்பதை மதுரைப் பேரகராதி குறிப்பிடுகின்றது.

இவ்வாறு, இறைவனின் மூத்த இச் சிவபூமியின் நாலா திசைகளிலும் இறைவனால் கருணை உள்ளத்தோடு அனுப்பப்பெற்ற சித்தர்கள் ஞானியர், பிளவுகளும் பிரிவினா பேதங்களுமாய்க் குழப்பங்கண்டு நின்ற மனித சமுதாயத்தைக் கருணை உள்ளத்தோடு அரவணைத்தனர்.

தமது கல்வி அறிவால், அருள்வாக்கால், நல்லுபதேசங்களால், அவரவர்தம் குறை களைந்து ஒருங்கிணைத்தனர். அற நூல்கள் பல படைத்து, ஆணவம் களைந்து சமத்துவம் உபதேசித்து தருமவான்களாய், நீதிமான்களாய் மனித குலத்தினரைச் செம்மைப்படுத்தினர்.

நோய்நொடிகளால் மடியும் மனிதரை தமது மூலிகை மருத்துவக் கண்டுபிடிப்புக்களால் குணமாக்கி மீள்பிறப்பு எய்த வகை செய்தனர்.

•

உயிர்களைக் கொல்லுதல், பிறர்பொருளை அபகரித்தல் முதலான பாவகாரியங்களைத் தொடராது வாழ ஆன்மீக ஆன்மநேய நீதி நெறிமுறைகளை வகுத்தனர்..

இவ்வாறு, இறைவன் மனிதர் மீது கொண்ட கருணையினால், காலத்திற்குக் காலம் அனுப்பி வைத்துக்கொண்டிருக்கும் சித்தர்கள் ஞானியராலேயே பூர்விக வரலாற்றுச் சிறப்புத் தாங்கிய இப் பூமி இன்றும் வாழ்ந்து கொண்டு இருக்கின்றது. இறையம்சம் பொருந்திய அத்தகு சித்தர்களை, ஞானியரை வழிபடு தெய்வங்களாய் சமாதிக்கோயில்கள் அமைத்து வழிபடும் மரபு ஈழத்தே காலங்காலமாக இருந்து வருகின்றது.

வடக்கே கடையிற் சுவாமிகள், கிழக்கே சித்தானைக்குட்டி, தெற்கே பெரியானைக்குட்டி, மேற்கே நவநாதச்சித்தர் என்பதாய் அத்தகு சித்தர்கள், ஞானியரின் சமாதிக்கோயில் வழிபாடுகள் பிற்காலத்தேயும் எழுந்து எமது ஈழ நாட்டிற்கு ஆன்மீக அணி சேர்த்துக் கொண்டு இருப்பது இறைவன் இப் பூமி மீது கொண்ட கருணையினாலேயே..
ஈழத்தின் வடபாகமான யாழ்ப்பாணத்தில் சமாதிக்கோயில்கள் பல எழுந்து பிரபல்யம் பெற்றன.

சடையம்மா சுவாமிகள், தேரடிச் செல்லப்பா சுவாமிகள், யோக சுவாமிகள், குழந்தைவேல் சுவாமிகள், நல்லூர் சிவன்கோயிலடி செல்லம்மா சுவாமிகள், குடையிற் சுவாமிகள் முதலானோர் நல்லூர் இராஜதானியுடன் தொடர்பானவர்கள். 19ம், 20ம் நூற்றாண்டுகளில் பிரபல்யம் பெற்றவர்கள்.

அத்தகு சித்தர்கள்,ஞானியர் வரிசையிலே 20..ம் நூற்றாண்டில் வாழ்ந்த நல்லூர் பண்டிதர் இராமச்சந்திரனார் எனும் வெள்ளை அண்ணை மகரிஷியின் வரவு அதி அற்புதம் வாய்ந்தது..

'பிளவுண்ட மனிதரின் ஒருங்கிணைப்புக் கருதி இறைவனே ஈழத்தே மானிட அவதாரம் எடுத்து வந்தார்' அவர், தனித்துவமானதும், ஆன்மீக,ஆன்மநேய, அறிவியல் சார்ந்ததுமாய் அனைவரும் ஏற்றுக்கொளள்ளத் தக்க வழிபடுமார்க்கம் ஒன்றை ஏற்படுத்தித் தந்தார்.

அத்தகைய எம்பெருமான் வழிமுறைமையை,வழிகாட்டலை இன்றும் அனைத்துலக அறிவியல் சமுகம் போற்றித் துதித்து வருகின்றது..

அறிவியல் விஞ்ஞான மயக்கினால், ஆணவம் தலைக்கேற ஆன்மீக நாட்டம் குறைந்தும், வன்முறை, குரோத உணர்வுகள், இனவெறி, மொழி வெறி, மதவெறி முதலானவை மெல்ல மெல்லத் தலைதூக்கியும், சமுதாய ஏற்றத்தாழ்வுகளால் மதமாற்றம், நாஸ்திக வாதம் எழுந்து மனிதரைப் பிளவுபடுத்தி அனைவரையும் தடுமாற்றங்காண வைத்துக்கொண்டும் இருந்த மிகவும் சோதனை நிறைந்த காலப்பகுதியில் இறை மைந்தராக திரு அவதாரம் எடுத்து அனைத்து உறவுகளும் வெள்ளை அண்ணை என அன்று அன்போடு அழைக்க நின்றவரே இராமச்சந்திர மகரிஷி..

இன்று கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் ஸ்ரீ இராமச் சந்திர இலிங்கேஸ்வரர் எனச் சிவனாக அருள்பாலித்து வரும் எம்பெருமான், அன்று நல்லூரில் மானிட வடிவிலே எளிமையாக வாழ்ந்து காட்டி உபதேசித்து நின்ற போது, அவரை நாடிவந்த அனைவரும் தம்மகத்தே நிழற்படமாக இன்றும் ஏற்றி வைத்திருப்பவையோ..

'மனித சமுதாயத்தில் தாமும் ஓர் அங்கமாய் நின்று எளிமையாக வாழ்ந்து வழிகாட்டிய புதுமையும் அதியற்புதமும் வாய்ந்த அறிவு வளன்படைத்த பெரும் மகரிஷி..

திருமூலர் செய்த திருமந்திரத்தின் வழி, 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பதை நிலைநாட்டி முன்னெடுத்து இந்து, பௌத்த,சமண, கிறித்தவ, இஸ்லாமியரால் மதித்து வணங்கப்பெற்ற மகாஞானி..

"அவனின்றி ஓர் அணுவும் அசையாது" என்பதை நாஸ்திகவாதிகள் உள்ளிட்ட அனைவரும் ஏற்றுக் கொள்ளும்வகையிலே இன்றைய அறிவியல் விஞ்ஞான தத்துவங்கள் ஊடாக உலகினருக்கு உணர்த்தி,உபதேசம் புரிந்த பெரு மகான்..

உணவு,உடை,மருத்துவம், கல்வி என தம்மை நாடிவந்த ஏழை எளியோர் உள்ளிட்ட அனைவரினதும் குறை தீர்த்தருளிய பெரு வள்ளலார்..

இளையவர், மூத்தவர் அனைவரும் 'வெள்ளை அண்ணை' என்று சகோதர உறவு சொல்லி அழைக்க, அவர்களை கருணை உள்ளத்துடன் அரவணைத்து உபதேசம் புரிந்த குருமகான்..

அனைத்து உறவுகளும் போற்றி வணங்க ஒழுக்கமுறை பேணி எம்மத்தியில் வாழ்ந்து உபதேசித்து நின்ற துாய பிரமச்சாரி...

அனைத்து மதப்பிரிவுகளையும் ஒருங்கிணைத்து அறநெறிசார் சமரச சிவமார்க்கம் வகுத்த 20..ம் நூற்றாண்டு மகாவீரர்..

உலக மொழிகளின் அதிசயிக்கப்படும் ஒற்றுமையை தமது பன்மொழி ஆற்றலால் நிறுவி ஆரிய,திராவிடபேதமை ஒழித்து உலகை ஒரு குடும்பம் ஆக்கிய அறிவுலக மேதை..

படித்தோரும்,பாமரரும்,சிறுவர்களும் விளங்கத் தக்க வகையிலே, அனைத்துலகோரும் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையிலே பொது அரங்குகளிலும் நகைச்சுவை ததும்ப தமது ஆன்மிகச் சொற்பொழிவுகளையும், இலக்கியச் சொற்பொழிவுகளையும், கவியரங்குகளையும் ஆற்றி அனைவருக்கும் ஆன்மிக ஆன்மநேய பாட போதனை புரிந்து உலக வாழ்விலே மக்களுக்கு பிடிமானம் தோன்ற வகை செய்த பெருமகான்..

அதி அற்புத மனிதராய்...

நம்முடன் நடமாடிய தெய்வமாய்...

சிவஞானம் முதிரப்பெற்றவராய்,...

பரிநிர்வாண நிலையில் சிவ ஐக்கியமாகி அனுபூதியைப் பெற்று உலகிற்கு உவந்தளித்தவராய்..'

இவ்வாறு எம் பெருமான் அன்று தமது அவதார மகிமையினை உணர்த்தி நின்ற சம்பவங்களை நிழற்படமாக இன்றும் நினைவு கூரும் அவர்தம் அடியவர்கள் தமது மத, இன, மொழி, சாதிய பேதம் நீங்கி அவர்தம் திருவடியே தஞ்சம் என ஏற்று எம்பெருமானை வழிபாடு இயற்றி நின்றனர்..

எம்பெருமான் 'வெள்ளை அண்ணை' மகரிஷியின் அவதார மகிமை..

அற்புத அறிவாற்றல்..

ஆற்றிய சித்துக்கள்..
தேவலோகத் தொடர்புகள்..
முன்பிறப்பு உணர்த்தியமை...
தீர்க்கதரிசனம்..
எளிமையாக சகோதர உறவு தந்து ஞான குருவாக உபதேசித்து நின்ற மகத்துவம்...

பட்டம் பதவிகளைத் துறந்து எளிமையாகவே, வெள்ளை அண்ணையாய் மட்டுமே உலகம் பாசமுடன் அழைக்க வகை செய்து அனைத்துலக சமுக உறவு பேணிய முறைமை..

ஏழை எளியவர் கல்வி அறிவு பெற இலவச பாடநூல்கள், பாடபோதனை, உணவு,உடை மருத்துவம் முதலானவை வழங்கிக் காத்தமை..

அனைத்து மதப்பிரிவுகளையும் அரவணைத்து அவரவர் வளர்ச்சி பக்குவத்திற்கு ஏற்ப கல்வி அறிவால் உபதேசம் புரிந்து சமரசசிவ தத்துவவழி ஏக தெய்வத்தை உணர்த்தி நின்ற முறைமை..
இன்னோரன்னவை பின்வரும் கருத்துக்களை அவரை அறிந்த மக்கள் மனதில் தோற்றுவித்தது...

'இறைவனே மானிட வடிவில் ஈழத் திருநாட்டிலே வெள்ளை அண்ணை என்ற சகோதர உறவு காட்டி ஞான குருவாக உபதேசம் புரிந்து இன்றும் எம்மோடு வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்.'

'அத்தகைய எம்பெருமானே தமது அருள் பார்வையால் எமது இப் பிறப்புப் பாவங்களை நீறாக்கி எம்மைக் கடைத்தேற்றுகின்றார்.'
'தெய்வத்திற்கு ஒரு தோற்றம் இருக்குமானால் அனைவரையும் கடைத்தேற்ற எளிமையே வடிவாக ஈழ நல்லூரில் திரு அவதாரம் புரிந்த எங்கள் வெள்ளை அண்ணை, இராமச்சந்திர மகரிஷியே...'

இவ்வாறு,எம்பெருமான் வெள்ளை அண்ணை சீடர்கள் உள்ளிட்ட அன்பர்கள் அனைவரும் இந்த உலக வாழ்விலே பிடிமானங் கொண்டு அறப்பணிகள் ஆற்றி பேரானந்தத்துடன் அமைதியாக வாழ்ந்து வந்த காலை வெள்ளை அண்ணை மகரிஷி 03.04.1977.. பங்குனி உத்தர பௌர்ணமி புனித தினத்திலே இந்த உலக வாழ்வை விட்டு நீங்கி ஜோதியில் கலந்தார்.

'எம்பெருமானே உலகம்!' என வாழ்ந்த அடியவர்களுக்கு அப்போதுதான் உலகம் இருள் சூழந்துபோனதான ஏக்கம் தலை தூக்கியது.. கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் எம்பெருமான் அஸ்தியில் இராமச் சந்திர இலிங்கேஸ்ரர் ஆலயம் எழுந்து அனைவருக்கும் அபயமளித்தது.

தற்போது, கொழும்புத்துறை சீடர்கள் போர் அனர்த்தத்தால் பாதிக்கப் பெற்ற மேற்படி சிவாலயத்தை பல இலட்சம் ரூபாய் செலவிலே மீளவும் புதுப்பொலிவு பெற புனரமைத்துள்ளனர். தமது இல்லத்தையும் மேற்படி திருத்தலத்திற்கே வழங்கவும் முன்வந்துள்ளனர்.. உலக சமுதாயத்தின் ஈடேற்றம் கருதிய அத் திருத்தொண்டர்களின் காலத்தால் செய்த இப் புனிதத் திருப்பணிக்கு இந்த உலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது.
எம்பெருமானின் எளிமை மிகுந்த வாழ்வு முறைமையும், உபதேசங்களுமே அனைத்து மக்களது உள்ளங்களையும் ஈர்த்து இப் பூமியை சொர்க்க நந்தவனம் ஆக்கவல்லது.

அந்த வகையிலே எம்பெருமான் பெருமை கூற எழுந்திருப்பதே 'ஈழத்து ஞானி இராமச்சந்திர மகரிஷி' எனும் இந்த அருள்நூலாகும்..

இதில் எம்பெருமான் அற்புதம் உணர்த்தும் பக்திப்பாடல்களும் இடம்பெற்றுள்ளன. பாடல்கள் இந்தியாவின் பிரபல பாடகர்களால் பாடப்பெற்று இறுவட்டாக வெளி வந்துள்ளது.

அனைத்து ஆன்மாக்களிடமும் ஆரோக்கியமான தூய சிந்தை எழுந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் யாழ்ப்பாணம் கொழும்புத்துறை எனும் புண்ணிய பூமியில் உள்ள சுவாமியார் வீதியில் ஸ்ரீ.. இராமச்சந்திர இலிங்கேஸ்வரர் ஆலய புனருத்தாரணத்துடன், 25.03.2012 இல் இரண்டாவது மகா கும்பாபிஷேகம் இடம்பெறுகின்றது..

அத்தகு புனிதமிகு நன்னாளிலே எம்பெருமான் மகிமை கூறும் இந்த ஈழத்து ஞானி இராமச்சந்திர மகரிஷியின் பெருமை கூறும் அருள்நூலினை வெளியிட்டு வைக்வேண்டியது எம்பெருமான் சீடரான அடியேன் கடமை..

இந்நூலைச் சிறப்பிக்க உரை வழங்கியுள்ள கிறீஸ்தவ திருத்தந்தை ஜெயசீலன் அவர்கள் 1977 இல் எம்பெருமான் தம் மனித சரீரத்தை உதறும் இறுதி நேரத்தை அறிந்து தமது கிறீஸ்த்தவ பக்தர்கள் புடைசூழ வந்து இறைதோத்திரம் ஆற்றித் திரும்பியவர்கள்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைப் பேராசிரியர் ப.வேதநாதன் அவர்கள் எம்பெருமான் மகிமையை உணர்ந்து 2005..ம் ஆண்டு அடியேன் சமரச பூமி நூல் யாழ் பல்கலைக் கழகத்தில் வெளியீடு செய்யப்பெற்ற போது அற்புதமாக அறிமுக உரை பகர்ந்தபின் மேற்படி எனது அறிவியல் ஆன்மீக நூலினால் உந்தப் பெற்று எம்பெருமான் மகிமையை உணரந்து கொழும்புத்துறை சென்று சேவித்தவர்கள்..

எமது மகரிஷியின் அயலிலே வாழ்ந்தவரும், கண்டியில் அரியரத்தினம் அன்ட்கோ எனும் தொழில்நிறுவனத்தின் உரிமையாளராய் மலையகத்தே இந்து அறப்பணிகள் பல ஆற்றி வருபவருமான சிவத்திரு. ஐ.அரியரத்தினம் அவர்கள் எம்பெருமான் பெருமை கூறும் இந்நூலை மகிமைப்படுத்தி உள்ளார்.

மேலும்,கோயில் திருப்பணிகளில் ஈடுபாடு கொண்ட பட்டதாரி ஆசிரியரான சி.பத்மராஜா (ஜே.பி) அவர்கள் இந்நூல் உருவாக்கத்தின் போது தம்மாலான சில ஆலோசனைகள் தந்து உதவியவர்.இவர் எம்பொருமான் திருத்தலத் புனருத்தாரணப் பணிகள் செவ்வனே இடம்பெற தம்மாலான பங்களிப்புக்களை அடியேன் டென்மார்க்கில் இருந்து தொலைபேசி வழி வழங்கிய அன்பு வேண்டுகோளை ஏற்று ஆற்றி நின்றவர். 30.01.2011 இல் எம்பொருமான் பெருமையுரைக்கும் திருவருள்வாசகம் நூலும் பக்திப்பாமாலை இறுவெட்டும் நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் வெளியிடப்பெற்ற போது தமது மேலான உதவிகளை நல்கியதோடு அவ் ஆண்டின் நல்லைக்குமரன் மலரிலும் எம்பொருமான் பற்றி சிறு அறிமுகமும் செய்தவராவர். அத்தகைய அருமை இளவலுக்கும், சிறந்த முறையில் இந்த அருள்நூலுக்கு அட்டை ஓவியம் அமைக்கக் காரணமானவரும், மேற்படி கொழும்புத்துறை திருத்தலத்திலே மிகச் சிறந்த முறையில் எம்பெருமான் அற்புத அவதாரத்தையும் அவரது திரு அவதார மகிமையையும் தத்ரூபமாக வரைந்த இறை வரம்பெற்ற ஓவியர் திலகம் மேரு கிரீஷ்வரன் அவர்களுக்கும், இந் நூலிற்குச் சிறப்புச் சேர்க்கும் வகையில் ஆங்கிலத்திலே எம்பெருமான் மகிமை உரைத்து, அச்சுப்படி பார்த்து, ஆலோசனைகள் வழங்கிய கிழக்கு திறந்த பல்கலைக்கழக பகுதி நேர விரிவுரையாளர் யூலியன் புஸ்பராஜா அவர்களுக்கும் அதனை மொழி பெயர்த்த சிங்கள ஆன்மீக வாதியும் ஆங்கில போதனாசிரியருமான எச்.பி.டி.பி.உதயஸ்ரீ அவர்களுக்கும், பல சிரமங்களுக்கு மத்தியில் இந்நூலை துரித கதியில் அழகுற கணனி மயப்படுத்தித் தந்த மகரிஷி பதிப்பகத்தின் கணணி நூல் வடிவமைப்பாளரும் ஆலோசகருமான அருமைத்தம்பி திரு.தயாபரன் அவர்கட்கும், மகரிஷி பதிப்பகத்தினருக்கும், இந்நூலினை வெளிக்கொணரும் ஸ்ரீ இராமச்சந்திர மகரிஷி அறக்கட்டளையினருக்கும், நூலினை அழகுற அச்சுவாகனம் ஏற்றிய கக்ஸ்ரொன் அச்சகத்தாருக்கும், எம்பெருமான் திருத்தலத்தினை பக்தி சிரத்தையோடு புனரமைத்து நின்ற அனைத்து ஊழியர்களுக்கும், அவ்வப்போது பல வகையானும் உதவிய கொழும்புத்துறை சுவாமியார் வீதி மக்களுக்கும்

எம்பெருமான் திருவருள் கடாட்சம் கை கூடுவதாக.. அதி அற்புதம் வாய்ந்த எம்பெருமான் தரிசனத்தால் அனைவரும் சகல வளமும் பெற்று இன்புற்று பல்லாண்டு வாழ்வார்களாக..

இன்பமே சூழ்க!

எல்லோரும் வாழ்க!!

சிவதொண்டில்
ஜெ.குமாரசுவாமி
(அருட்சீடர்)

# இறைவனின் மானிட அவதாரம்

ஈழத்து நல்லூாரிலே அந்த அற்புதம் நிகழ்ந்தது.. எமது தமிழர்தம் சைவமும், தமிழும் தழைக்க, சமரசநெறியில் தமிழர்தம் வாழ்வு செழிக்க, தமிழர்களாகவே உள்ள இசுலாமிய, கிறித்தவ, தமிழ் அன்பர்களையும் கவர்ந்து, பௌத்த சிங்கள அன்பர்களுக்கும் தமது தெய்விகத் தன்மையை உணர்த்தி மதவெறி என்பது நீங்கி 'சமரசசைவம்' தாங்கிய அன்பான அருளாட்சி ஒன்று உதயமாக வேண்டியதன் அவசியத்தை உலகிற்கு உணர்த்துவாம் வேண்டி இறைவனே மானிட அவதாரம் ஏற்று எங்கள் ஈழ பூமியிலே தோன்றி அருளியதே அந்த அற்புதம்.

அதற்காக, யாழ்ப்பாணம் நல்லூர் கலைமகள் வீதியில் அமைந்த 'சபாமாளிகை' என்னும் பேரில்லத்தில், பூர்விக வரலாறு தாங்கிய சத்திரிய ஆசார சைவர் மரபுவழி வந்த சபாபதிமுதலியார், பார்வதி அம்மா ஈன்றெடுத்த சிவநெறிச் சீலர் சங்கரப்பிள்ளை அவர்களைப் பூலோகத் தந்தையாகவும், அவ்வூரில் அவர்களது உறவினராய் சைவாசாரத்தோடு கனவானாக வாழ்ந்த 'கோணரப்பா' என ஊரவர் அன்போடு அழைத்து வந்த சபாபதிமுதலியர், மனோன்மணியம்மாள் ஈன்றெடுத்த சிவசிந்தை மிகுந்த அருந்தவப் புதல்வி மீனாட்சி அம்மா அவர்களைத் தமது பூலோக அன்னையாகவும் எம்பெருமான் தேர்ந்தார்.

## பூலோகத் தந்தையர் சங்கரப்பிள்ளை



தந்தை சங்கரப்பிள்ளை

நல்லூர் சங்கரப்பிள்ளை அவர்கள் தமிழிலே சிறந்த பாண்டித்தியம் பெற்றவர். சைவாசாரம் மிக்கவர்.. தமது பெற்றோருக்கு ஏகபுத்திரனாய்ச் செல்வச்செழிப்போடு வாழ்ந்தவர்.

'யாழ்ப்பாண வைபவமாலை' தந்த மயில்வாகனப் புலவர், ஆறுமுகநாவலரின் தந்தையான கந்தப்பிள்ளை, , இருபாலை சேனாதிராஜமுதலியார், வில்வராஜமுதலியார் முதலானோர் தமிழிலே சிறந்த பாண்டித்தியம் பெற்று குருசீட பரம்பரையாய் ஈழத் தமிழர் பரம்பரை கல்வியறிவில் மேம்பாடடைய வகை செய்ய தமிழ்நாடு காஞ்சிபுரத்தில் இருந்து யாழ்ப்பாணம் வருகை தந்த 'கூழங்கைத் தம்பிரான்' எனும் வீர சைவரான கனகசபாபதி யோகி அவர்களிடம் கல்வி பயின்று பெரு விற்பன்னராக விளங்கிய பாட்டனார்

கார்த்திகேசுமுதலியாரும், இருபாலை சேனாதிராஜ முதலியாரிடம் தமிழ் பயின்ற தந்தை சபாபதி முதலியாரும் சங்கரப்பிள்ளை அவர்களுக்குத் தமிழ் அறிவையும், சைவநெறியையும் ஊட்டி வளர்த்ததோடு தமிழ்நாடு சென்று மேற்கல்வி தொடரவும் வகை செய்தனர்.

கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய சங்கரப்பிள்ளை அவர்கள் தமிழ் மொழி தவிர வடமொழி, ஆங்கிலம், இலத்தீன் மொழிகளிலும் சிறந்த பாண்டித்தியம் பெற்று ஊர் திரும்பினார். ஊரின் சிவத்தமிழ்ப் பணிகளால், பொதுத் தொண்டுகளால் அனைவரையும் கவர்ந்தார். பொறுமையும், அனைவரையும் நேசிக்கும் தயாளகுணமும் படைத்த தலைமகனாக சங்கரப்பிள்ளை அவர்கள் ஊரவர் பெருமையுடன் போற்ற வாழ்ந்து வரலானார்.

(பின்னாளில், சங்கரப்பிள்ளை அவர்களது முதுமைக் காலத்தின்போது,நல்லூர் கிராமசபைத் தேர்தலில் யாரும் எதிர்த்துப் போட்டி இடாது தமக்கு தொண்டாற்ற வரும்படி ஊர் மக்கள் அனைவரும் தமது பேதமை மறந்து இப்பெரியவரை அன்புடன் அணுகி நின்றமை அவர்தம் ஆரம்பப் பெருமை உரைக்கப் போதிய சான்றாகும்.)

அத்தகைய நற்குண நற்செய்கைகள் நிறைந்த சிறந்த கல்விமான் ஒருவரையே தமக்கு உதவியாளராக நியமிக்க அன்றைய ஈழத்து ஆங்கில அரசின் பிரபல்யம் மிக்க தமிழ்த் தலைவர் ஒருவர் தேடிக்கொண்டிருந்தார். அவரே சேர்.பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள்.

மானிப்பாயில் செல்வாக்கான குடும்பம் ஒன்றிலே பிறந்த இராமநாதன் அவர்கள் இலங்கையில் தேசிய ஒற்றுமை வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தவர். இராமநாதன் அவர்களை தமிழ்த் தலைவராக அன்றைய ஆங்கில அரசுக்கு ஈழத்து நல்லூர் ஆறுமுகநாவலர் அவர்களே சிபார்சு செய்தார்.



சேர்.பொன்.இராமநாதன்

இராமநாதன் அவர்களுக்கு அன்றைய ஆங்கில அரசு சேர் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. அவர் சிங்கள மக்களதும், சிங்களத் தலைவர்களதும் நன்மதிப்பைப் பெற்ற பெருந் தமிழ்த் தலைவர் என்பதை ஈழ வரலாறு எடுத்தோதும்.

அத்தகைய சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் நல்லூர் சங்கரப்பிள்ளை அவர்களது புலமை சிறப்புக்கள் பற்றிக் கேள்வியுற்றார். அவர்களது நல்லூர் சபாமாளிகை வந்தார்.. தமது செயலாளராக சங்கரப்பிள்ளை அவர்களை நியமிக்க விரும்புவதாகவும், அவரைத் தம்முடன் அனுப்பும்படியும் தந்தை சபாபதி முதலியாரைக் கேட்டுக் கொண்டார்.

சங்கரப்பிள்ளை தமக்கு ஒரே மகன் என்பதால் பெற்றோர் பின்வாங்கினர். இராமநாதனது செல்வாக்குப் பற்றி உணர்ந்த சங்கரப்பிள்ளை அவரகளோ தமது சிவத் தமிழ்ப்பணியை ஆற்றக் கிடைத்த பெரு வாய்ப்பாகக் கருதி பெருந்தலைவர் இராமநாதனுடன் செல்லப் பிடிவாதமாக இருந்தார். ஒருவாறு

பெற்றோரின் சம்மதத்தைப் பெற்றார். சேர்.பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் செயலாளராகி அவருடனே சென்றார்.

தன்னலம் கருதாத சங்கரப்பிள்ளை அவர்களது பெரும்பொழுதும் இராமநாதன் பணிகளிலேயே மூழ்கிக் கிடந்தது. இராமநாதன் அவர்களின் பெருஞ்சுமை அகல உற்ற துணையாக இருந்து தொண்டாற்றிய சங்கரப்பிள்ளை அவர்களோ அந்நாட்களில் இராமநாதனின் சிற்சில நடவடிக்கைகளை மறுதலிப்பவராகவும் விளங்கினார்.. சிலவற்றை எடுத்துக் கூறி இராமநாதனின் சீற்றத்திற்கும் உள்ளாகி இருக்கின்றார். இருந்தபோதும் எசமான விசுவாசம் சங்கரப்பிள்ளை அவர்களைப் பற்றிக் கொண்டே இருந்தது.. அதுபோலவே இராமநாதனும் சங்கரப்பிள்ளை அவர்களது அறிவுக்கூர்மை, நேர்மைத்திறன், தமது எண்ணத்தை எடைபோட்டு துரிதகதியில் செயலாக்கும் இலாவகம், பெற்றோருக்கு ஏகபுத்திரனாய் சொகுசாக வாழ்ந்த வாழ்வைத் துறந்து ஓய்வொழிச்சல் இல்லாது இரவுபகல் தமக்காக ஆற்றி நின்ற இன்னோரன்ன பணி கண்டு சங்கரப்பிள்ளை அவர்கள் மீது அளவு கடந்த பாசமும் மதிப்பும் வைத்திருந்தார்.

அன்றைய பிரித்தானிய காலனித்துவ நாடான ஈழத்தே கிறித்தவ கல்லூரிகள்வழி யாழ்ப்பாணத் தமிழர் கல்வி பயின்று வருங்கால், இராமநாதன் துரை என அன்றைய தமிழினத்தால் போற்றப்பெற்ற அப் பெருந் தலைவர் சைவமும், தமிழும் தழைக்க, ஆங்கிலம், அறிவியல் புலமையில் தமிழ் மாணவரும் மாணவியரும் சிறந்தோங்க இரு பெருங் கல்லூரிகளை யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலும் மருதனாமடத்திலும் முறையே பரமேஸ்வராக்கல்லூரி, இராமநாதன் மகளிர் கல்லூரி என நிறுவினார்.

தமிழ் நாட்டில் இருந்து துறைபோன பேரறிஞர்களை வரவழைத்து ஈழத்தே தமிழர்தம் கல்வி அறிவு மேம்பாடடைய வகைசெய்தார்.

இராமநாதன் அவர்களின் அத்தகைய கல்விச் சாலைகள் உருவாக்கத்திற்கு ஆலோசனைகள் கூறி இரவுபகல் உழைத்து உறுதுணை புரிந்தவர் எம்பெருமான் தமது பூலோகத் தந்தை என ஏற்ற செயலதிபர் சங்கரப்பிள்ளை அவர்களே! இராமநாதனின் அக்கல்லூரிகள் பிரசித்தி பெற்ற கல்லூரிகளாய் மிளிர்ந்தன.

இராமநாதன் அவர்கள் முதுமையில் மரணப் படுக்கையில் இருந்தபோது சங்கரப்பிள்ளை அவர்களைத் தமதருகே அழைத்து அவர்தம் கரங்களைப் பற்றினார். தன்நலம் கருதாது தம்மோடு இருந்து சகல துறைகளிலும் ஆற்றிய அளப்பரிய சேவையினாலேயே தமது சாதனைகளை எளிதாக்க முடிந்தது என்பதாக தளதளத்த குரலிலே கண்ணீர் வழிந்தோட நன்றியறிதலுடன் கூறி, தமது மறைவிற்குப்பின் பரமேஸ்வராக் கல்லூரியில் பணியாற்றி வரும்படி சங்கரப்பிள்ளை அவர்களைக் கேட்டுக் கொண்டார். சிலநாட்கள்பின் இவ்வுலகை விட்டு மறைந்தார்.

யாழ்ப்பாணத்தே தமிழருக்கென பல்கலைக்கழகம் உருவாக வேண்டும் என்ற திட்டத்துடனேயே சகல வசதிகளும் அமைந்ததாக தமது கல்லூரிகளை இராமநாதன் அவர்கள் அன்றைய நாட்களில் நிறுவியதாக ஊரவர் 'சங்கரம்மான்' என அன்புடன் அழைக்கும் நல்லூர் சங்கரப்பிள்ளை அவர்கள் பின்னைய நாட்களில் இந் நூலாசிரியர் உட்பட அனைவருக்கும் கூறி வந்திருக்கின்றார்.

சேர்.பொன். இராமநாதன் அவர்களது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கனவு அன்னார் மறைந்து ஆண்டுகள் பல கழிந்து நிறைவேறியது. 1972.ல் சேர்பொன்.இராமநாதன் அவர்களின் அந்த இரு கல்லூரிகளுமே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வடிவம் பெற்ற காட்சியைக் கண்ணாரக் காணும் வாய்ப்பு இராமநாதனுக்குக் கிட்டாதபோதும் அன்று அக் கல்லூரிகளை உருவாக்க இராமநாதன் அவர்களுக்கு ஆலோசனை கூறிப் பக்கபலமாக நின்று தன்நலம் கருதாது

இரவு பகல் அரும்பாடுபட்டு உழைத்து இராமநாதன் மறைவிற்குப்பின் நீண்டநாட்கள் உயிர்வாழ்ந்து, 1979-களில் இறைபதம் எய்திய நல்லூர் சிவநெறிச் சீலர் சங்கரப்பிள்ளை அவர்களுக்கே அவ்வாய்ப்புக் கிட்டியது.

நல்லூர் சங்கரப்பிள்ளை அவர்களது தயாளகுணம், நேர்மைத்திறன் முதலான வற்றிற்குப் பல உதாரணங்களைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

அன்று, யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் தமிழ் நாட்டில் இருந்து பணியாற்ற வந்த அந்தணரான நவநீத கிருஷ்ணபாரதியார் எனும் தமிழ்ப் பேரறிஞர், யாழ்ப்பாணத்தில் மாவிட்டபுரம் அந்தணர் மரபிலே மணமுடித்தவர். இவர் ஒருமுறை தாயகமான தமிழகம் சென்று திரும்பிவர நாட்கள் ஆகிவிட்டன. அவரது குடும்பத்தின் நிலவரத்தை உணர்ந்த சங்கரப்பிள்ளை அவர்கள் அரிசி, பருப்பு, சீனி மூடைகளை மோட்டார் வண்டியில் ஏற்றி மாவிட்டபுரத்திலே அவர்களது அக்கிரகாரம் சென்று அவற்றினை அன்புடன் வழங்கித் திரும்பினார். தமிழகத்திருந்து திரும்பிய நவநீத கிருஷ்ணபாரதியார் செய்தி அறிந்து நன்றிகலந்த கண்ணீரப் பெருக்குடன் சங்கரப்பிள்ளை அவர்களை வணங்கினார். 'தாம் தாயகத்தே நின்றபோது சங்கரப்பிள்ளை அவர்கள் "வருந்தவேண்டாம் குடும்பம் சேமமாகவே உள்ளது.பொறுமையாக கடமையை முடித்து திரும்புங்கள்" என தமக்கு தேறுதல் அளித்ததுபோன்று கண்ட ஒரு சொப்பனம் ஈழத்தே இவ்வாறு மெய்ப்பட்டதுகண்டு மெய்யுருகி நின்றார்..

செய்ந்நன்றி மறவாத நவநீதகிருஷ்ண பாரதியார் சங்கரப்பிள்ளை அவர்களது பெருமையை 'செங்குந்த மரபு தந்த செங்கைவேள்..' என்பது முதலாக புகழ்மாலை நூல் ஒன்றை அந்த நாட்களில் வெளியிடடிருந்திருக்கின்றார்.

தமது உயரிய பணிகளால் அனைவராலும் மதித்து வணங்கப் பெற்ற சங்கரப்பிள்ளை அவர்கள், இராமநாதன் மறைவிற்குப் பின் பரமேஸ்வராக் கல்லூரியில் பணியாற்றி ஓய்வு

பெற்றார். அவர், அந்த முதுமையிலும் இராமநாதன் அவர்களையே தமது சிந்தையில் தேக்கி ஆரம்பகாலத்தை அசைபோட்டுக் கொண்டிருப்பார்.

இராமநாதனுடனான சங்கரப்பிள்ளை அவர்களது வரலாற்றினை தமது பத்திரிகையிலே பிரசுரிப்பதாகவும், அதற்குத் தமக்குப் பணம்தந்து உதவும்படியும் ஈழத்தே வெளிவந்த ஒரு தமிழ்ப் பத்திரிகையைச் சேர்ந்தவர், 1974..ல் சங்கரரிடம் கேட்டபோது நேர்மையாளரான அவரோ மறுத்துவிட்டமையை ஆசிரியரே கண்ணூடாகக் கண்டுள்ளார்.

அத்தகைய சங்கர்பிள்ளை அவர்கள் இராமநாதன் அவர்கள் மீது விசுவாசம் கொண்டு ஆற்றிய பணிகளைச் சிறு நூலாகத் தயாரிக்கும் வகையில் இந்நூல் ஆசிரியர் 1975-ல் ஆரம்பித்தார். அதன் ஒவ்வொரு அத்தியாயத் தலைப்பினையும் தேவாரப்பாடல் ஒ்ன்றின் எதுகை அடியையும் மோனை அடியையுமே கொண்டு உருவாக்கி வந்தார்.. “முன்னர் அவருடைய நாமம் கேட்டார்... மூர்த்தி அவர் இருக்கும் வண்ணம் கண்டார்.. ' என்றவாறே அத் தலைப்புகள் கொண்டன. 36 ஆண்டுகளுக்குமுன் உருவான அச் சிறுநூலும் அந்த அருளாளர்கள் மறைவின்பின் அச்சிடப்படாமல் கேட்பாரற்று அவர்கள் வாழ்ந்த,இன்று பாழடைந்து கிடக்கும் சபாமாளிகையில் சங்கரப்பிள்ளை அவர்களது நூலக அறைக்குள் எங்காவது பதுங்கி இருக்கக் கூடும்.

அந்நாளில் நவநீதகிருஷ்ண பாரதியார் எமது அவதார இறைவனையும் அவரது பூலோகத் தந்தை சங்கரப்பிள்ளை அவர்களையும் போற்றிப் பாடியருளிய வாழ்த்துப் பாமாலை நூல்கள், எம்பெருமான் எழுதிய 'திருக்கேதீஸ்வர புராணம்' முதலானவற்றை அந்த சபாமாளிகை இல்லத்தில் இந் நூலாசிரியர் முன்னர் பார்த்துள்ளார்.

தமது வாழ்நாளில் நேர்மை நீதியை கடைப்பிடித்து வந்த உத்தமரான சங்கரப்பிள்ளை அவர்களையே எம்பெருமான் பூலோகத் தந்தையாக ஏற்கத் திருவுளங் கொண்டார்.

## புனித அன்னையாரும் அவரது பின்னணியும்

ஈழ நல்லூரில் வாழ்ந்து அற்புதம் புரிந்த சடையம்மா அவர்கள் உலகறிந்த ஈழத்துப் பெண் சித்தராவார்.



19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20ம் ஈழத்திலும் தமிழகத்திலும் முருகப்பெருமானின் சக்திமகிமையை ஒலிக்கச் செய்தவரே நல்லூர் சடையம்மா அவர்கள்.. அந்நாளிலே பல அற்புதங்கள், சித்துகள் செய்தவர். அவரது தரிசனமும் அருள்வாக்கும் பெற நாட்டின் நாலாபக்கங்களில் இருந்தும் மக்கள் நல்லூர் கந்தன் ஆலயத்தின் முன் வருகை தருவர்.

தமது தவ வலிமையால் பக்தர்களின் மாற்ற முடியாத நோய்களை மாற்றி அருளியவர். மாணவர்கள் உள்ளிட்ட பக்தர்கள் நல்லூர் கந்தன் ஆலயத்தின் முன்பாக அமர்ந்து அருள்வாக்குத் தந்த அச் சடையம்மா சித்தரிடம் பரீடசைகள், நேர்முகப்பரீட்சைகள் மற்றும் தொழில் நிமித்தம் தோற்றுமுன் பயபக்தியுடன் அவரது அருளாசி வேண்டி வருவார்கள்.

குடும்பப் பிணக்குகள், நீதிமன்றம் சென்றும் தீரா பிரச்னைகள் எல்லாம் அப் பெண்சித்தரின் அருள்பார்வையால் தீரும் என்ற நம்பிக்கை அப்போது அனைவரிடமும் குடிகொண்டிருந்தது.

சடையம்மா அவர்கள் முருகப் பெருமான்பெயரால் அவர்களது நெற்றியிலும், பேனாக்களிலும் பூசிவிடும் விபூதியால், அருள்வாக்கினால் பலன் பெறுவார்கள். அத்தகைய ஈழத்துப் பெண்சித்தர் சடையம்மா பெயரால் தமிழ்நாடு திருச்செந்தூர்,

தென் இலங்கை கதிர்காமம், நல்லூர்க்கந்தசுவாமி கோயில், திருநெல்வேலி வெள்ளைப்பிள்ளையார் கோயில், கீரிமலை நகுலேஸ்வரம் முதலான இடங்களில் மடங்கள் நிறுவப்பட்டுள்ளன.

அத்தகைய சடையம்மா அவர்களது உறவுவழி வந்தவரே, எமது ஈழத்து இறை அவதாரம் தமது பூலோக அன்னையென ஏற்ற மீனாட்சி அம்மா.

மீனாட்சி அம்மாள் சிறு வயதிலேயே தாய் தந்தையரை இழந்தவர்.உடன் பிறப்பான தமையன் தில்லையம்பல முதலியாரால் வளர்த்துவரப் பெற்றவர்.

தில்லையம்பல முதலியார் அவர்கள் அன்றைய ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தே சிங்கப்பூர் சென்று புகையிரத நிலைய அதிபராகக் கடமை ஆற்றியவர்.

அவர் தமது உறவினரான சங்கரப்பிள்ளை அவர்களுக்குத் தனது அருமைச் சகோதரி மீனாட்சி அம்மாவை மணமுடித்து வைத்தபின் தனது குடும்பத்துடன் சிங்கப்பூரில் நிரந்தரமாகக் குடியேறி முதுமையில் நாடு திரும்பியவர்.

சிங்கப்பூரில் அந்த நாட்களில் தில்லைவாசா என அன்புடன் அழைக்கப்பெற்ற அத் தில்லையம்பலம் அவர்கள் சிவநெறிச்சீலராய் வாழ்ந்து அனைவராலும் போற்றப்பெற்றவர். கடல் கடந்து சென்றபோதும், சைவாசாரத்துடன் ஒழுகியவர்.

அந்த நாட்களில் அவரது சைவ சமயச் சொற்பொழிவுகள், கூட்டுப் பிராத்தனைகள் சிங்கப்பூர் மட்டுமல்லாமல் மலேசியாவிலும், பர்மாவிலும் இந்து ஆலயங்களில், பிரார்த்தனை மண்டபங்களில் இடம்பெற்றிருந்திருக்கின்றது.

இளைப்பாறிய பின் அவர் ஈழம் வந்தபோது, யாழ்ப்பாணத்து நுங்குப் பனை மரங்களைப் பார்த்து ''கம்பங்கள் நாட்டப் பட்டிருக்கின்றன. குண்டுகள் தூக்கப் பட்டிருக்கின்றன.'' என்பதாக அன்றைய உலக மகாயுத்த காலத்து உணர்வுடன் வர்ணித்ததாக அவரது உறவினர் இன்றும் கூறுவர். ஈழம் திரும்பியபின் தமது நல்லூரிலே கோயில் திருப்பணிகள் பல ஆற்றியவர்..

அத்தகைய அருட்சீலரான தில்லையம்பலம் அவர்களுக்குத் தங்கையாக வாய்த்த மீனாட்சி அம்மா சிறு வயதிருந்தே நல்லொழுக்கமும், தெய்வ பக்தியும் கொண்டவராய் ஆசார அனுட்டானத்துடன் வளர்ந்தவர். ஏழை எளியவருக்கு உணவு,உடை தந்து ஆதரித்தவர். அவர், தாம் புகுந்த குடும்பத்தைக் கோயிலாக்கி மகிழ்ந்தவர்.

## அன்னையின் சகிப்புத் தன்மை

மீனாட்சி அம்மா தாம் கொண்ட கணவரான சங்கரப்பிள்ளை அவர்களது பணிகளுக்கு ஊக்கந் தந்தவர். கணவரோ, சேர்.பொன். இராமநாதன் அவர்களது பணிக்காகச் சென்று அங்கேயே தங்கி இருந்து தொடர்பணிகளை மேற்கொள்வார்.

விடுமுறை என எப்போதாவது வீடுவருவார். வீட்டில் சொற்பநேரமே இருந்துவிட்டு இராமநாதர் பணிக்காக உடன் திரும்பி விடுவார்.. கணவர் சங்கரப்பிள்ளையின் இலட்சியங்களைத் தனது சகிப்புத் தன்மையால் காத்து நின்ற அந்த உத்தமி கண்டிப்பு நிறைந்த தனது கணவரின் பெற்றோருக்குப் பொறுமையுடன் பணிவிடை புரிந்து, ஆசார அனுட்டானங்கள், தான தருமங்கள் ஆற்றி தனது இல்லற வாழ்வை நல்லறமாக்கி தங்கள் சூழலில் உள்ள ஆலயங்கள் சென்று சேவித்து வரலானார். மீனாட்சி அம்மாவை அவரது

மாமன் மாமியர் உட்பட உறவினர்கள் 'குட்டிப்பிள்ளை' என வீட்டுப்பெயரில் அழைப்பர். அவர்களது உறவுவழி வந்த இளஞ்சந்ததியினர் அனைவரும் அவரை "குட்டிமாமி" என்று அழைத்து வரலாயினர். அந்த அன்னையார் உறவு முறை வந்த இந்நூலாசிரியரும் அவ்வாறே அழைத்து வந்துள்ளார்.

எம்பெருமான் தமது மானிட அவதாரத்திற்காக பொறுமையில் பூமியை விஞ்சத்தக்க மீனாட்சி அம்மாவை பூலோக அன்னை என இவ் உலகிற்கு உணர்த்தப் பல சோதனைகளுக்கு உட்படுத்தினார்.

## பிள்ளை வரம் வேண்டி

சங்கரப்பிள்ளை அவர்களும் மீனாட்சி அம்மாவும், நீண்ட காலம் குழந்தை பாக்கியம் இன்றி நோன்புகள் நோற்றனர். சங்கரப்பிள்ளை அவர்களது மனக்குறை உணர்ந்த இராமநாதன் ஒருதிங்கள் விடுமுறையில் புண்ணியபாரதம் சென்றுவரும் அனுமதியினை அவர்களுக்கு அளித்தார். சங்கரப்பிள்ளை அவர்களும் தமது பத்தினியை அழைத்துக் கொண்டு புண்ணிய பாரதம் சென்றார். கூடவே சங்கரப்பிள்ளை அவர்களது பெற்றோரும் சென்றனர்.

அவர்கள் காசி முதலான வடநாட்டு திருத்தலங்களையும், அனைத்து தென்நாட்டு திருத்தலங்களையும் சேவித்தனர்.. கங்கை, முக்குளநீர், சேதுதீர்த்தம் முதலாக பல புண்ணிய தீர்த்தங்கள் ஆடி தமக்கோர் தவப் புதல்வன் வேண்டி நோன்பு நோற்றபின் அச் சிவ தம்பதியர் ஈழநல்லூர் திரும்பினர்.

ஈழத்திருநாட்டில் சங்கரப்பிள்ளை,மீனாட்சி அம்மா எனும் பரோபாகார சிந்தை கொண்ட தூய நெறியாளர்கள் ஊடாகவே ஒருங்கிணைந்த உலகினைச் சமரச சிவநெறியில் வகுக்க எம்பிரானும் திருவுளங்கொண்டார்..

எல்லாம் வல்ல எம்பிரானின் கருணைக்குப் பாத்திரமான ஈழ நல்லூரின் அந்த மானிடப் பெற்றோர் பாக்கியம் பெற்றவர்கள்.

## அவதார சொப்பனம்

எம்பெருமான், தமது பூலோகத் தாயார் என ஏற்ற மீனாட்சி அம்மாளிடம் தமது அவதார மகிமையினைச் சொப்பனத்திலே உணர்த்தத் திருவுளங் கொண்டார்..

இவ்வாசார சைவ மரபினருக்குச் சொந்தமான, பிரம்ம முகூர்த்தத்தில் தேவர்கள் வந்து பூசனை இயற்றிச் செல்வதாகக் கூறப்படும் அற்புதம் நிறைந்த சிவத்தலமே நல்லூர் இராஜதானியில் உள்ள தையல்நாயகி சமேத சட்டைநாதர் சிவாலயமாகும்.

அச் சட்டைநாதர் சிவாலயம் முன்பாக யானை அம்பாரியில் சிவனும் மகாவிஷ்ணுவும் எழுந்தருளும் காட்சியே மீனாட்சி அம்மாளுக்கு இறைவன் அருளிய அந்த சொப்பனம்..

அந்த யானை அம்பாரியில் சிவனது திருக்கரத்திலே தெய்வீக ஒளிபொருந்திய அழகிய ஆண் குழந்தை ஒன்று இருந்தது. அக்குழந்தையை சிவனார் மகாவிஷ்ணுவிடம் வழங்கினார். அத் திவ்ய ஒளி பொருந்திய குழந்தையைப் பெற்ற மகாவிஷ்ணுவானவர் அங்கே பக்த கோடிகளுக்கு நடுவே நின்ற மீனாட்சி அம்மாவை வாவென அருகழைத்தார். மீனாட்சி அம்மாவும் "சிவாய நமஓம்! ஓம் நமசிவாய.." என கைகளால் தாழம் போட்டுப் பாடிக்கொண்டே அந்த யானை அம்பாரிக்கு அருகே சென்றார்.. மகாவிஷ்ணுவானவர் "சிவசேது பந்தனம்" என திருவாய் மலர்ந்து அத் தெய்வீகக் குழந்தையை யானை மீதிருந்தபடியே கீழே நின்ற மீனாட்சி அம்மாவின் கரத்திலே வழங்கினார். பக்தகோடிகளின் "அரோகரா!" ஓலம் வானைப் பிளந்தது.

அந்தக் தெய்விக சொப்பனத்தில் திழைத்த அம்மாள் அரோகரா" என ஒலித்தபடியே கண்விழித்தார். அத் தெய்வீக சொப்பனத்தின் பின்னர் மீனாட்சி அம்மாள் தேவ மைந்தரைக் கருத்தரித்தார்.

## திரு அவதாரம்

ஈழ நல்லூரிலே 1926-ம் வருடம், வைகாசி மாதம் 29-ம் நாள் மூல நட்சத்திரத்துடன் கூடியதான சூரியன் உச்சிக்கு வரும் ஒரு புண்ணிய தினத்திலே எமது இறைமைந்தர் திரு அவதாரம் புரிந்தார்.
என்றுமே இல்லாதவாறு எம்பெருமான் அவதாரம் புரிந்த அந்த வைகாசி மாத உச்சிப்பொழுது, சூரியன் வெம்மை வருத்தாத சிறுமழைத் துாறலுடன் குளிர் தென்றல் வீசி அனைவரது உடலையும் தடவிச் சென்றது.. இயற்கை தந்த ஏதோ இனம் புரியாத இன்ப அனுபவத்தில் அனைவரும் திழைத்தனர்.

இறைமைந்தர் திரு அவதாரம் புரிந்த சபாமாளிகை இல்லம் புத்தொளிவீசிப் புதுப்பொலிவு காட்டி நின்றது. அந்த சபாமாளிகையிலே வீசிய தெய்வீக வாசனை வந்திருந்த அனைவரையும் களிப்பிலே ஆழ்த்தியது. மகிழ்ச்சிப் பிரவாகம் எங்கும் அலைமோதியது..

அங்கே எமது இறை மைந்தரை அணைத்தபடி பிரசவ களைப்புடன் கண்ணுறங்கிய அன்னையார் திடீரெனக் கண்விழித்தபோது, அந்த அறைக்குள் ஒரு நாகம் அவதார இறை மைந்தன்முன் படம் எடுத்தபடி நின்றது. அது கண்ட அன்னையார் பயத்துடன் 'பாம்பு! பாம்பு!!' என்று அலறவே வெளியே நின்ற உறவினர் ஓடி வருவதற்குள் அந்த நாகம் ஓடி மறைந்தது.

## 'இராமச்சந்திரன்' திரு நாமம்

நல்லூர் சபாமாளிகையில் தெய்வீக கடாட்சத்தால் அவதரித்த செல்வருக்குப் பெயர் சூட்டும் நாள் வந்தது.

முன்னர், சங்கரப்பிள்ளை குடும்பத்தினர், பிள்ளை வரம்வேண்டி வட நாட்டிலே காசியில் ஒரு மடத்தில் தங்கி இருந்தபோது காவி உடை சடாமுடியுடன் அங்கே வந்த சந்நியாசி ஒருவர் சங்கரப்பிள்ளை அவர்களுக்கு திருநீறு தந்து ஹிந்தி மொழியில் ஏதோ கூறிநின்றார். கூறியதில் 'ராமச்சந்திரா' என்பதே சங்கரப்பிள்ளை அவரகளுக்குப் புரிந்தது. அச் சந்நியாசி அதன்பின் அங்கே காணப்படவில்லை.

அன்றிரவு, அம்மடத்திலே படுத்துறங்கிய சங்கரப்பிள்ளை அவர்கள் கண்ட ஒரு சொப்பனத்திலே அதே சந்நியாசி புன்னகை புரிந்தபடியே "ராமச்சந்திரா!" எனக் கூறிக்கொண்டே அம் மடத்திலே அநாதரவாய்க் கிடந்த ஒரு குழந்தையைக் காண்பித்தார். வெள்ளை வெளேர் வடிவத்தில் திவ்ய ஒளி பரப்பி அநாதரவாகக் கிடந்த அக்குழந்தை கைகால்களை அசைத்து சங்கரப்பிள்ளை அவர்களிடம் வரத் துடிப்பதுபோல் காணப்பட்டது. அக் குழந்தையைச் சங்கரப்பிள்ளை அவர்கள் ஆவல் பொங்கத் தூக்கி அணைத்தார். தனது பத்தனியார், தம்முடன் கூட வந்த பெற்றோரிடம் அக் குழந்தையைக் காண்பிக்கத் தேடிக் கொண்டிருந்தபடியே கண்விழித்தார். அங்கே காசி மடத்திலே தாம் கண்ட இனிய சொப்பனத்தை அதிகாலையில் ஆவல் பொங்கத் தமது குடும்பத்தினரிடம் தெரிவித்து மகிழ்ந்தார்.

மேற்படி, பிள்ளை வரம் வேண்டிச் சென்ற வட நாடடு காசி மடத்து சொப்பன சம்பவத்தை ஈழ நல்லூர் சபாமாளிகை இல்லத்தில் அப் பெயர் சூட்டு வைபவத்தின்போது, வந்திருந்த அனைவருக்கும் சங்கரப்பிள்ளை அவர்கள் கூறி நின்றார். அச் சொப்பனத்திலே கண்ட தெய்விகக் குழந்தையை அச்சிலே வார்த்தாற்போலவே தமது குழந்தை இருப்பதாகக் கூறியபடியே


"என்ரை ராமச்சந்திரா!" என ஆனந்தம் மேவ தமது தெய்விகக் குழந்தையைத் தூக்கி அணைத்து உச்சிமோந்தார்.

அன்னை மீனாட்சி அம்மாவும் தங்கள் சட்டைநாதர் சிவாலயத்தின் முன்பாக யானை அம்பாரியில் அமர்ந்திருந்த சிவனும் மகாவிஷ்ணுவும் பக்த கோடிகளுக்கு நடுவே நின்ற தன்னை அருகழைத்து "சிவசேதுபந்தனம்" எனத் திருவாய் மலர்ந்து திவ்ய ஒளி பொருந்திய குழந்தையை வழங்கி நின்ற சொப்பன சம்பவத்தை நினைவு கூர்ந்தார். "சிவபெருமானே! சட்டைநாதா! தையல்நாயகி அம்மா,வல்லிபுரத்தானே! உங்கள் கருணையோ கருணை" என மெய் உருகி பிஞ்சுக் கை கால்களை அசைத்தபடி தனது அருகிலே கிடந்த அத் தெய்வீகக் குழந்தையை அணைத்தபடி ஆனந்தக் கண்ணீர் சிந்தினார்.

'சபாமாளிகை' எனும் அவர்களது பேரில்லத்தில் தவழ வந்த அவதார இறைமைந்தர் இராமச்சந்திரனாருக்கு அவரது தூய வெண்ணிறத்தால், பெற்றோர்கள் 'வெள்ளைத் தம்பி' எனச் செல்லப் பெயர் சூட்டி அழைத்தனர்.

## மகிமை வெளிப்பாடு

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் அந்த மழலை தெய்வீகப் பொலிவுடன் தனது மகிமையினை அங்கே வெளிப்படுத்தி வளர்ந்து வரலாயிற்று. தூர இடங்களில் இருந்தும் தந்தை சங்கரப்பிள்ளை அவர்களையும் பாட்டனாரையும் சந்திக்க அவர்தம் நல்லூர் சபாமாளிகை வரும் அன்பர்களுக்குத் தமது தெய்விக மகிமையினை உணர்த்தி வியப்பிலே ஆழ்த்தியது அந்தத் தெய்வீகக் குழந்தை.



நல்லூர்,
சட்டைநாதர்
சிவன்
கோவில்

அது ஒரு சிவராத்திரி தினம். அப்போது மைந்தன் இராமச்சந்திரனுக்கு மூன்று வயதே நிரம்பி இருந்தது. அன்னை மீனாட்சி அம்மாள், அச் சிவராத்திரி தினத்திலே நித்திரை விழித்து நோன்பு நோற்பதற்காக தங்கள் சட்டைநாதர் சிவாலயத்திற்கு தமது தெய்வ மைந்தரையும் அழைத்துச் சென்றார். ஏனைய பக்தர்களுடன் அந்த சிவதினத்திலே நித்திரை விழித்து கொண்டிருக்கையில் அன்னை மடியிலே கிடந்த மூன்று வயதே நிரம்பிய அம் மழலை திடீர் என்று எழுந்து நின்று அன்னையிடம் ´´நான் பிறந்த அறைக்குள் ஒரு நாகம் வந்து படமெடுத்ததே அம்மா! அங்கே அறைக்குள்ளே அதைக் கண்டு 'பாம்பு! பாம்பு!!' என்று கத்தினீங்களே அம்மா´´ என்று மழலையாக கூறி கலகல வென்று கேலிநகை புரியவே, அன்னையார் உட்பட அந்த ஆலயத்திற்கு வந்திருந்த அனைவருமே மெய்சிலிர்த்தனர்.. குழந்தையின் தெய்விக கடாட்சம் கண்டு ஆரத் தழுவி உச்சி மோந்து சிவநாமம் உச்சரிக்கத் தொடங்கினர்..

இறைமைந்தர் தமது வயதோடு ஒத்த சிறுவர்களுடன் ஓடி ஆடி விளையாடும்போது, அச்சிறார்கள் அதிசயிக்கும்படியாக திடீர் என தின்பண்டங்களை கொண்டுவந்து கொடுத்து அச் சிறுவர்களை மகிழ்விப்பார். 'வெள்ளைத்தம்பி தனக்கென இல்லாமல்



பிள்ளைப் பராயத்து
மகரிஷி

அனைத்தையும் தமக்குத் தருகின்றாரே!' என ஏனைய சிறுவர்கள் தாம் பெற்றுக் கொண்ட தின்பண்டங்களை வெள்ளைத் தம்பிக்குத் தங்கள் பற்களால்கடித்துப் பிரித்துப்

பங்கு கொடுக்கும்போது அதனை மகிழ்வுடன் ஏற்றுண்டு கண்ணீர் சிந்துவார்.

பெற்றாரோ, ''எப்படி உனக்கு வீட்டில் இல்லாத இந்தத் தின்பண்டம் கிடைத்தது?'' என்று கேட்டால் "அது சும்மா!" என மழலைச் சிரிப்பால் மழுப்பிவிடுவார். அத் தின்பணடங்களோ உள்ளூர்க் கடைகளிலே வாங்க முடியாதவை..

தந்தை சங்கரப்பிள்ளை அவர்களுடன் வீட்டிற்கு வரும் அறிஞர்களும், பாட்டனாரைச் சந்திக்க ஈழத்தின்பிற மாவட்டங்களில் இருந்து வரும் பிரமுகர்களும் வெள்ளைத் தம்பியின் மழலையில் திளைத்தனர்.

திடீர் என அம் மழலை கூறும் விடயம் தமக்கு நடக்க இருக்கும் நன்மை தீமைகளுடன் தொடர்பு பட்ட அருள்வாக்காகக் கண்டு அத் தெய்வீக மைந்தரின் மழலைக்காக ஏங்கி அடிக்கடி சபாமாளிகை வந்து போயினர்.

பாட்டன் சபாபதி மடியிலே பாடங் கேட்க அமர்ந்து அவரே வியக்க பாடம் சொல்லி அனைவரையும் திகைப்பிலே ஆழ்த்தினார் அந்தச் சின்னஞ்சிறு இறை மைந்தர்.


மாணவப் பருவத்து மகரிஷி

## அற்புத அறிவாற்றல்

பாட்டனார் வியக்க அவரது மடியில் அமர்ந்து பாடம்சொன்ன கருவிலே திருவுடைய அந்த இறை மைந்தரை அவ்வூரில் பிரபல்யம் மிக்க தமது சைவ மரபினர் பாடசாலையான

செங்குந்த இந்துக் கல்லூரியில் 6-ம் வகுப்பிலே பாட்டனார் சேர்த்தார்.

அப்போது அக் கல்லூரி அதிபராக இருந்தவர் சுன்னாகம் குமாரசாமிப் புலவரின் மைந்தரான முத்துக் குமாரசுவாமிப்பிள்ளை.. அவர் சிறு குடுமி வைத்திருப்பார். மிகவும் கோபக்காரரான அவருக்கு 'ஊசிக் குடும்பி வாத்தியார்' என அன்றைய மாணவர் பட்டப்பெயர் சூட்டவே அதுவே ஊரிலே நிலைத்துவிட்டது.

ஒழுங்காகக் கல்வி கற்காத,பாடசலைக்கு வராத,வகுப்பிலே படிக்காது விளையாடிக்கொண்டும் தங்களுக்குள் பேசிக் கொண்டும் இருக்கும் மாணவரைப் பிரம்பால் தாறுமாறாகத் தண்டிப்பார்.. கல்வி கற்பிக்காத ஆசிரியர்களை தாறுமாறாக ஏசிவிடுவார்.. மாணவரது பெற்றோருக்கும் அவர்மீது பயம்.

அனைவரையும் நடுங்கவைக்கும் மிகவும் கண்டிப்பான சிடுசிடு முகத்தினரே அந்த ஊசிக்குடும்பி வாத்தியார் எனும் அக் கல்லூரி அதிபர் முத்துக்குமாரசாமிப்பிள்ளை.. அதனை, வயோதிபர்களாகி நல்லூரிலும், கள்ளியங்காட்டிலும், திருநெல்வேலியிலும் ஏனைய அயலூர்களிலும் வாழும் அக்கல்லூரி பழைய மாணவர்கள் இன்றும் கூறி நிற்பர். அந்த அதிபர் எமது இறை மைந்தரின் வகுப்பிலே பாடம் நடத்தச் செல்லும்போது, இறை மைந்தரின் அற்புத அறிவாற்றலால் ஈர்க்கப்பெற்று தம்மையே மறந்து சிரித்தவிடுவார். அந்த அதிபர் வேண்டுமென்றே தொடுக்கும் கடுமையான வினாக்களுக்குத் தடுமாறாது, அதற்கு ஏற்ற பதிலை வினாத் தொடுத்த அந்த அதிபரே நாணும்படியாக அந்த இறைமைந்தர் துரிதகதியில் பதிலாகத் தந்து அனைவரையும் வியப்பிலே ஆழ்த்திவிடுவார். இறைமைந்தர் தரும் இலகுவான உடன் பதில்கண்டு ஊசிக்குடும்பி வாத்தியரும் திகைத்துவிடுவார்.

அத்தகைய எமது மகரிஷி இரண்டிரண்டாக வகுப்பேற்றம் பெற்று அவர்களது கல்லூரிப் பெருமை எங்குமே ஒலிக்கக் காரணமானார்.

## பண்டிதராதலும் பணிக்கெனச் செல்லலும்



ஆசான் மகரிஷி

கல்லூரிப் படிப்பை முடித்தபின் கல்வி கேள்விகளில் சிறந்த இறை மைந்தர் பண்டித பரீட்சைக்குத் தோற்றி 14-வயதுப் பண்டிதர் ஆனார்.. அனைவரும் வியக்கும் வண்ணம் தாமாகவே பயின்று பல மொழிகளிலும் பாண்டித்யம் பெற்றார். கணிதம், அறிவியல், மருத்துவ, விஞ்ஞான ஆற்றலால் அனைத்துத் துறையையும் சேர்ந்த அறிவுலக மேதைகளையும் கவர்ந்தார்..

யாழ்பாணத்துக் கல்லூரிகள் பல அவரது ஆசிரியப்பணியை ஏற்க தயாரானபோதும்,பரமேஸ்வராக் கல்லூரியில் போதனை புரியும் அழைப்பை ஏற்று அங்கே சென்று போதனை புரிந்து வரலானார்.. அவரது நினைவாற்றலும், போதனை முறைமைகளும் சக ஆசிரியர்களையும் கவர்ந்தது.

## 'வெள்ளை அண்ணை' எனும் திருநாமம்

அப்போது, பரமேஸ்வராக் கல்லூரியில் பயிற்றுவித்துவந்த அனைவரும் எம்பெருமான் மகிமையினை உணர்ந்தவர்கள். அந்த ஆசிரியர்கள் வயது வேறுபாடின்றி எமது இறைமைந்தரை சரஸ்வதி கடாட்சமாகக் கருதி 'வெள்ளை அண்ணை' எனப் பாசமுடன் அழைத்துவந்தனர்.

சக ஆசிரியர்கள் தமக்குக் கிடைக்கின்ற புதிதுபுதிதாக வந்த ஆங்கில,தமிழ் அறிவியல் ஆய்வு நூல்களை வெள்ளை அண்ணை அவர்களிடம் கொண்டு வந்து காட்டுவர்.. இறை மைந்தரோ அவர்கள் முன்னே அந் நூல்களை ஒருதரம் புரட்டிப் பார்த்துவிட்டு அவர்கள் வியக்கும் வண்ணம் அந்நூலில் இன்னென்ன பக்கத்தில் இன்னென்ன தகவல் என உரைத்து அவற்றிற்கு சுருக்கமான விளக்கமும் வழங்கி அவர்களைத் திகைக்க வைப்பார்.

அப்போது பரமேஸ்வராக்கல்லூரி அதிபராக இருந்த சிவபாதசுந்தரம் எனும் மிகவும் கண்டிப்பான அதிபர் மாணவர்களைக் கடுமையாகத் தண்டிப்பவர்.. ஆசிரியர்களுக்கும் அவர்மீது பயம்.

ஒருமுறை குருமகான் 'வெள்ளை அண்ணை'அவர்கள் உயர்தரவகுப்பு மாணவருக்கு அமைதியாக பாடபோதனை புரிந்து கொண்டு இருந்தபோது அப்பக்கமாக வந்த அதிபர் சிவபாதசுந்தரம் அவரகள் அமைதியாக பாடபோதனை நடந்த வகுப்பறையின் மறைப்புப் பலகையில் மும்முறை பெரிதாகத் தட்டிவிட்டுப் போயிருக்கின்றார்.

அன்று மாலை அவ்வதிபர் அக் கல்லூரிக்குள் அமைந்த ஆலயத்தருகே இருந்த உதைப்பந்தாட்ட விளையாட்டரங்கின் ஓரமாக நின்றபோது அவ்விடத்திற்கு வருகைதந்த 'வெள்ளை அண்ணை' அவர்கள் அந்த அதிபரின் தோளிலே தமது சுட்டு விரலினால் மூன்றுமுறை தொட்டழுத்தியபடியே ''எனது கட்டுப்பாட்டில் அமைதியாகப் பாடம் நடத்திக் கொண்டு இருந்த வகுப்பறைக்குக் கிட்ட வந்து எனது அனுமதி இன்றி அவ்வாறு செய்தது சரியா..'' எனக் கேட்டுவிட்டுச் சென்றார்.. அனைவரும் 'கண்டிப்பான அதபர்' எனப் பயந்து நின்ற அந்த அதிபரோ பதில் கூறமுடியாது திகைத்துப்போய் நின்றார்.

அப்போது பரமேஸ்வராக் கல்லூரியில் பயிற்று

வித்துக் கொண்டிருந்த சக ஆசிரியர்களில் பலர் தத்தம் மனக்குறைகளை எம்பெருமானிடம் எடுத்துரைத்து அவர்தம் ஆன்மிக உபதேசங்களால் தீர்வு கண்டிருக்கின்றனர்.

தமிழகத்திருந்து பரமேஸ்வராக் கல்லூரியில் கல்வி போதிக்க வருகை தந்த பேரறிஞர் நவநீத கிருஷ்ண பாரதியார் எனும் அந்தணர் இளம் வயதினரான இராமச்சந்திரனாரின் அறிவுக் கூர்மையையும் தெய்வீக இயல்புகளையும் மெச்சி அந்நாளில் புகழ்மாலை நூல் ஒன்றை வெளியிட்டிருந்தார். அப் பாமாலையை இந்நூலாசிரியர் நுகர்ந்து இன்புறும் வாய்ப்பு 1969..ல் இறையவர்தம் சீடராக இருந்த அந்தக் காலப் பகுதியில் எம்பெருமான் வாழ்ந்த அவரது சபாமாளிகை இல்லத்திலே கிட்டியது.

பரமேஸ்வராக் கல்லூரியில் பின்னைய காலப் பகுதியில் சிங்களம் போதிக்க வந்த பௌத்த தேரர் இறைமைந்தரின் பெருமைகளால் ஈர்க்கப்பெற்று சுது ஐயா ( வெள்ளை அண்ணை)எனச் சிங்களத்திலே அழைத்து வந்துள்ளார். அச்சிங்கள தேரர் தமது சிங்கள அறிஞர்கள் ஏனைய தேரர்களுக்கு எம்பெருமான் சிறப்பம்சங்களைக் கூறிவைக்கவே அவர்கள் எமது இறைமைந்தர்மீது பயபக்தியுடன் தொடர்பு கொண்டு பழகிவரலாயினர்.

பெற்றோரால் 'இராமச்சந்திரன்' எனப் பெயர் சூட்டப்பெற்று, செல்லமாக 'வெள்ளைத்தம்பி' என வீட்டிலேஅழைக்கப்பெற்றவர், பரமேஸ்வராக்கல்லூரியிலே சக ஆசிரியர்களால் சரஸ்வதி கடாட்சமாக கண்டு 'வெள்ளை அண்ணை' எனப் பெருமையுடன் அழைக்கப்பெற்றவர், இளைப்பாறிய பின்னர் ஈழத்து தமிழ் சமுகம் உட்பட அனைத்து உலக உறவுகளையும் சகோதரத்துவப்படுத்தும் இறைவன் திரு நாமமாக வெள்ளை அண்ணைத் திருநாமத்தை ஏற்றுக் கொண்டார். குழந்தைகளும் பெரியவர்களும் எமது இறை அவதாரத்தை மிகவும் அன்போடு ´வெள்ளை அண்ணை´ எனவே அழைத்தனர். குருவானவரின் உபதேசங்கள் 'வெள்ளை

அண்ணை' என்ற சகோதர உறவுடனேயே அனைவரையும் சென்றடையவே அனைவருக்கும் சுமை நிறைந்ததாகத் தென்பட்ட உலகம் இலகுவாகத் தோன்றியது. அவர்களது வாழ்விலே பிடிமானம் தோன்ற வெள்ளை அண்ணைத் திருநாமமே வகை செய்தது. தாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்ற இவ்வுலகம் அர்த்தம் நிறைந்ததே என்ற நம்பிக்கை அவர்களுக்கு உதயமானது.. எம்பெருமான் வாழ்ந்துவந்த இல்லம் 'சமரசசைவம்' உரைத்து அனைவருக்கும் சொர்க்கம் காண்பித்தது.

எமது ஈழ அவதாரம் கல்லூரிப்பணிகளில் இருந்து இளைப்பாறிய பின், ஏனையோருக்கு அனுப்பும் கடிதங்களுக்கும், விசேட கட்டுரை கவிதைகளுக்கும் கை எழுத்தாகவும் பெயராகவும் 'வெள்ளை அண்ணை' என்று, அனைவரையும் சகோதரப்படுத்தும் திருப்பெயரையே உபயோகித்தார்.

ஒருமுறை அவர்தம் சீடரான இந் நூலாசிரியர் ''வெள்ளை அண்ணை, நீங்கள் ஏனையோருக்கு கடிதம் அனுப்பும்போது சாதாரணமாக 'வெள்ளை அண்ணை' என்று கை ஒப்பம் இடுகிறீர்களே .. உங்களுக்குத்தான் கலரிநிதி, பண்டிதர், வித்வான்,பன்மொழிப்புலவர் என்று பல பட்டங்களும் இராமச் சந்திரன் பெயரும் இருக்கிறதே.. அதனை எல்லாம் பயன்படுத்தாது இப்படி சாதாரணமாக 'வெள்ளை அண்ணை' என இட்டால் உங்களது பெருமை ஏனையோருக்குத் தெரிய வாய்ப்பில்லாமல் போய்விடுமே..''என அறியாமையினால் கேட்டகவே ''எனது குழந்தைகளான நீங்கள் எல்லோருமே என்னை 'வெள்ளை அண்ணை' என்று அழைக்கிறீர்கள். நான் உங்கள் எல்லோருக்குமே வெள்ளை அண்ணைதான்.. எனது குழந்தைகள் எனக்கு வைத்த பெயரை ஒருபோதும் மாற்றமாட்டேன்!'' என புன்னகையுடன் கூறி நின்றார்..

எம்பெருமான் சீடரான நூலாசிரியரும், சிவனும், மகாவிஷ்ணுவும் சட்டைநாதர் சிவாலயத்தின் முன் யானை அம்பாரியில் சிவசேதுபந்தனம் எனத் திருவாய் மலர்ந்து அன்னையாருக்கு வழங்கிய அத் தெய்வீகக் குழந்தையே

ஐயப்பன் சுவாமிகளின் வடிவமாக ஈழத்தே வெள்ளை அண்ணை என தோன்றி அனைவரையும் கவர்ந்து கொண்டிருக்கின்றார் என்பதாக எண்ணினார்.

தமது எண்ணத்தை வெள்ளை அண்ணை அவர்களிடம் எப்படிக் கேட்கலாம் என ஏங்கிய ஆசிரியர் ஒருமுறை திருக்கோணமலை சென்றபோது அங்கிருந்தபடி எம்பெருமானுக்கு ஒரு கடிதம் வரைந்தார்.
அதிலே எனது பாசமிகு ஐயா! என விழித்து கடிதத்தின் இடையே அப்பா(ஐயப்பர்) எனவும் தொடர்ந்தார்.

அக் கடிதத்திற்கு பதில் எழுதிய எம்பெருமான் "பிள்ளாய், என்னை ஏன் ஐயா! என விழித்துக் கடிதம் எழுதினாய்?" என ஆரம்பித்துவிட்டு அடுத்த வரியிலே மூத்தோரை விழிக்கும் ஐய என்ற தமிழ்ப் பதத்தையும் இனங்காட்டி 'அண்ணா' என்பது சிங்களத்திலே 'ஐயா' என வழங்கப்படுவதைக் குறிப்பிட்டு தமது அடுத்த கடித வரிகளை பாசமுடன் வரைந்தார்.

எளிமை வடிவமே ஆன எம்பிரான், வெள்ளை அண்ணையாய் சகோதர உறவுதாங்கி அனைவரையும் அரவணைத்தே குரு உபதேசம் புரிதலாய் இந்த உலகை அன்பு சாம்ராச்சியமாய் மலர வைக்க திரு அவதாரம் எடுத்தவர் அன்றோ!

உள்ளூரிலே மட்டுமல்ல, வேற்றூர்களிலும் இருந்துவரும் தகைமை பெற்ற .பெரும் கல்விமான்கள், பேராசிரியர்கள் எம்பெருமானிடம் வந்து "வெள்ளை அண்ணை ஆசிர்வதியுங்கள்!" எனக் கூறி எமது இறையவர்தம் திருப்பாதங்களில் வீழ்ந்து வணங்கி ஆசி பெற்றுச் செல்வர்.

1974..ல் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்பாணத்தில் நடைபெற்றபோது வருகை தந்த பேராசிரியர்கள், அறிஞர்கள் எம்பெருமான் வாழ்ந்த நல்லூர் சபாமாளிகை இல்லம்

வந்து, அளவளாவி அவர்தம் திருப்பாதம் பணிந்து ஆசி பெற்று மாநாடு சென்றனர்.



கணபதி ரவீந்திரன்

மேற்படி, ஈழ நல்லூரில் இடம்பெற்ற அத்தகைய முன்னைய சம்பவங்களை நினைவு கூர்ந்து, எமது இறைசீடரில் ஒருவராக இன்று கனடாவில் வாழ்ந்துவரும் மிகவும் பிரபலமான கலைஞரும், வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளரும்,பிரபல திரைப்பட இயக்குனருமான கணபதி ரவீந்திரன் அவர்கள் 16.10.2005..ல் 'சிவிக்சென்ரர்' என அழைக்கப்படும் பிரபல்யம் மிக்க கனடா மக்கள் பேரவையிலே இடம்பெற்ற இந்நூலாசிரியரின் உலகப் புகழ் பெற்ற 'சமரசபூமி' நூல் அறிமுகவிழாவிலே நூலாசிரியரை வாழ்த்த வந்தவேளை, அனைவரும் வியக்க நூலாசிரியரினதும் தமதும் குருவான எம்பெருமான் வெள்ளை அண்ணை மகரிஷியின் மகிமைகளை கண்கண்ட சாட்சியமாக எடுத்துரைத்து அனைவரையும் வியப்பில் ஆழ்த்தி நின்றார். அதனைக் கேட்டுக்கொண்டிருந்த பலர் எம்பெருமான் பற்றி மேலதிகமாக அறிந்துகொள்ள நூலாசிரியரை அணுகினர்.

'அறியாமை நிறைந்த உலகத்தை மீட்க வந்த அம் மகரிஷி மகிமையை அதுவரை அறியாதுபோனது தாம் செய்த பாவமே என வருந்தினர். உலகெங்கும் எம்பிரான் பெருமை ஒலிக்க வகை செய்ய முன்வந்தனர். சீடர்களுடன் இணைந்து எம்பெருமான் நாமம் ஒலிக்க தமது பங்களிப்பினை தொடர்ந்தும் ஆற்றி வருகின்றனர்.

## இலண்டனும் வியந்தது

எம் பெருமான் 'வெள்ளை அண்ணை மகரிஷி அவர்கள் அனைத்து உலக மக்களுமே ஒரு குடும்பம் என உருவாக்க ஆரியம், திராவிடம் இரண்டுமே ஒரு மொழிக் குடும்பம் என தமது பன்மொழி ஆற்றலால் நிறுவினார்.

ஒக்ஸ்போட் இலண்டன் பல்கலைக் கழகத்து சமஸ்கிருதப் பேராசிரியராக இருந்த 'பரோ' அவர்களுக்கு மேற்படி வெள்ளை அண்ணை குருமகானின் மொழியியல் ஆய்வுக் கட்டுரையை இந்நூல் ஆசிரியரே குருமகானிடம் இருந்து பெற்று இலண்டனுக்கு அனுப்பி வைத்தார்.. எம்பெருமான் மொழியியல் கட்டுரை கண்டு வியந்து இதுவரை யாரும் தொட்டிராத புதுமையான விடயம் என குறிப்பிட்டு அந்த இலண்டன் அறிஞர் ஆங்கிலத்தில் எழுதிய பதில் கடிதம் நீண்ட காலமாக ஆசிரியரிடம் இருந்தது.

அந்த ஆய்வுக் கட்டுரையையே எம்பெருமான் தமிழிலே உருவாக்கி 1974-ம் ஆண்டில் இடம்பெற்ற யாழ்ப்பாணத்தின் 4-வதுஅனைத்துலகத் தமிழராய்ச்சி மாநாட்டுக்கென சமர்ப்பித்திருந்தார், பெறுமதி மிக்க அவ் ஆய்வுக்கட்டுரை அம் மாநாட்டிலே இடம்பெறாமை என்பது பின்னர் அறிவு நிலையில் உணரப் பெற்றது.

## ஈழத்து அறிவுலகம் மெச்சியது

எம்பெருமான் அவதரித்தது இராஜவைத்திய பரம்பரையானபோதும், சித்த வைத்தியத்துடன் ஆயுர்வேதமும் யாரும் பயிற்றாமலேயே பயின்று பாடம்சொன்னார். ஆயுர்வேத மருத்துவ நிபுணர் என அரசு அவரை அங்கீகரித்தது.. ஏழை எளியவராய் தன்னை நாடி வந்தோருக்கு இலவச மருத்துவம் மற்றும் மருத்துவ ஆலோசனைகள் வழங்கினார். ஆங்கில

வைத்தியமும் கைவந்த கலையானது. அவர்தம் அலோபதி மருந்தாய்விலே நீரிழிவு பற்றிய கண்டுபிடிப்பு முறைமைபற்றிய ஆய்வுக்கட்டுரையை அமெரிக்க பென்சில்வேனியா பல்கலைக் கழகம் பாராட்டியது.

குருபகவானின் ஆய்வுகள்பற்றி ஈழத்து பிரபல எழுத்தாளரும் ஆசிரியருமான சொக்கன் எம்.ஏ. போன்ற அயலூரில் வாழ்ந்த ஈழத்து அறிஞர்கள் தமது பாட நூல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

சிறந்த வரகவி.. நினைத்த மாத்திரத்தே வெண்பா அவரது வாயிலிருந்து உதிரும்.. கல்லூரி ஆண்டு மலர், கோயில் கும்பாபிஷேகமலர்,சனசமூகநிலையக் கொண்டாட்டங்கள், திருமணவாழ்த்து, பிரியாவிடை, நினைவுமலர் முதலானவைக்காக கவிதை கேட்டு எம்பெருமானை அணுகுவார்கள். வெள்ளை அண்ணை மகரிஷி தமது படுக்கையில் இருந்தபடியே 'எழுதுங்கள்' எனக்கூறி கவிதைகளை சரமாரியாகப் பாடிக்கொண்டே போவார். எம்பெருமான் பாடும் வேகத்திற்கு எழுதமுடியாது அவர்கள் திணறுவார்கள். விடுபட்டதை மீண்டும் எழுதுவதற்காக திரும்பவும் அவர்கள் கேட்கும்போது நினைவு பிசகாது மீளவும் அதனை அற்புதமாக நினைவுகூர்ந்து கூறி அவர்கள் எழுதி முடிக்க வகைபுரிவார். அவ்வாறாக தங்கள் நல்லூர் சங்கிலியன் மன்றத்தில் இன்றும் பாடப்படும் கீதத்தை அன்று எழுதச் சென்றபோது தமக்கும் நேர்ந்ததாக, யாழ்ப்பாணம் நீதி மன்றத்தின் பதில் நீதிபதியும் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மூதவை உறுப்பினருமான சட்டத்தரணி கனககேசவன் அவர்கள் 30.01.2011..ல் யாழ்ப்பாணம் திவ்ய ஜீவன சங்க மண்டபத்திலே இந்தநூலாசிரியரின் 'திருவருள்வாசகம்' என்ற நூலை வெளியிட்டுவைத்தபோது அனைவரும் வியக்கக் கூறிநின்றார்.

10.12.1969..ல் திருநெல்வேலி கிழக்கு மாதர்,கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஆதரவில் ரோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் கல்லூரி அதிபர்கள், சமூகசேவை அமைச்சைச் சேரந்தவரகள், உதவி அரச அதிபர் கலந்து கொண்ட 'மனித

உரிமை' தினக் கொண்டாட்டம் இடம்பெற்றபோது, 'மனித உரிமை' பற்றி கவிதை பாடித்தரும்படி அதன் தலைவரான திருமதி. யோ.ஆலாலசுந்தரம், செயலாளரான செல்வி.சி.ஜெயகௌரி அவர்களுடன் சில மாணவிகளும் சென்று வெள்ளை அண்ணை மகரிஷி அவர்களை வேண்டினர்.

எமது மகரிஷியும், தமது படுக்கையிலே இருந்தபடி அப்போதைய காலப்பகுதியில் இளைஞரைக்கவர்ந்த பிரபலமான ஏதாவது பாடலை பாடிக்காட்டும்படி எதிரே இருந்த அவர்களைக் கேட்டபோது ஒருமாணவி, "அம்மா என்பது தமிழ் வார்த்தை, அதுதான் குழந்தையின் முதல்வார்த்தை" என்ற அப்போது பிரபல்யமான பாடலை பாடிக் காட்டினார். உடனே வெள்ளை அண்ணை மகரிஷி அம் மாதர்முன்னணியினரை எழுதும்படி கூறி, பாமர சனங்களும் விளங்கும்படியாக மிக எளிமையாக அந்த மெட்டிற்குப் பாடிக்கொண்டு போனார். அவரது வேகத்திற்கு எழுதமுடியாது மீளவும் அதனைக்கேட்டு எழுதி முடித்த செங்குந்த இந்துக்கல்லூரியின் உப அதிபராக இருந்து இளைப்பாறிய அன்றைய பழையமாணவி திருமதி.ரூபராணி இராஜரத்தினம் அவர்களே மேற்படி விழா அறிவித்தல் தாளின் பின்புறம் தமது கைப்பட எழுதி தமது கோப்பிலே நீண்ட நாள் இட்டு வைத்திருந்த எம்பெருமானின் அந்த மனித உரிமை பற்றிய பர்டலை நூலாசிரியரின் இந்த நூலாக்கத்திற்காக தந்துதவினார்..

பாடல் வருமாறு..

## மனித உரிமை

உலகிடை மக்கள் உரிமைகளை
பெறவே நாமும் வாழ்ந்திடுவோம்!
நிலமிசை மக்கள் உரிமை எல்லாம்
நிலைநாட்டிடுதல் உணர்ந்திடுவோம்..

யாவரும் இங்கே ஓர் குலமாம்
இனங்களின் நலமே எம் நலமாம்

பூவிடை மனிதர் சுதந்திரராய்
பொலிந்திடத் தொண்டு புரிந்திடுவோம்.

மனிதரை மனிதர் அடக்குமுறை
மறைந்திட இன்பம் வளர்ந்திடுமே
தனிஒரு மனிதன் ஆயினுமெம்
சகோதரன் எனவே சார்ந்திடுவோம்..

கல்வியில் தொழிலினில் காசினியில்
கலந்திடும் மக்கள் சமவுரிமை
சொல்லொடு செயலில் துலங்கிடவே
தொண்டுகள் புரிதல் சுகம்தருமே..

மூளை என்பது மனிதருக்கே
முந்தைய சொத்தாம் அதுபடைத்தோன்
ஏழைகள் செல்வர் எனும்பேதம்
இல்லாது உலகில் இலங்குகவே..

மாணவர்கள் தமிழ் இலக்கியப் பாடல்களை, தேவாரம்முதலிய பக்தி இலக்கியப் பாடல்களை இலகுவாக பாடமாக்க ஏற்கெனவே அவர்களது மனதைக் கவர்ந்த பாடலாக ..அது பின்நாளைய சினிமாப்பாடலாக இருந்தாலும் சரி பிள்ளைகளுக்குப் பிடித்தமான மெட்டிலேயே பக்திப்பாடல்களையும் பாடினால் அவர்களுக்கு அப்பாடல் மனனமாகும், மனம்வைத்துப் பாடமாக்குவார்கள், பாடிமகிழ்வார்கள். அவ்வாறு செய்வது தெய்வ குற்றமாகாது.. என்று இந்நூலாசிரியருக்கு மட்டுமல்ல அனைவருக்குமே எமது மகரிஷி அன்று கூறியுள்ளார்.

வித்துவான் க.வேந்தனார் முதலானோர் இந்து சமயம், தமிழ் இலக்கியம் முதலான இலங்கை பாடத்திட்ட நூல்களை உருவாக்க எமது மகரிஷியின் இல்லம் வந்து ஆலோசனை பெற்றுச் சென்றிருக்கின்றனர்.

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, வித்துவசிரோன்மணி கணேசையர் முதலான ஈழத்து தமிழ் அறிஞர்களது சந்தேகங்களையும் எமது குருபகவான் தீர்த்து வைத்திருந்தமையை அந்த நாட்களில் அந்த அறிஞர்கள் குருபகவானுக்கு தபாலில் அனுப்பிய கடிதங்கள் வாயிலாக அறிய முடிந்தது.

நல்லூாரில் எம்பிரான் இல்லம் வந்து அவர்தம் எளிமையைப் பயன்படுத்தி அவரது ஆக்கங்களைத் தமது ஆக்கங்களாக உருமாற்றி சில புகழ் விரும்பிகள் ஈழத்து பத்திரிகைகளில் வெளியிட்டுப் பிரபலமாயினர். அன்று ஈழத்தில் 'ஈழத்துக்கவிஞர் வரிசை', 'ஈழத்துப் புலவர் வரிசை' நூல்களைத் தொகுத்தவர்கள் கண்களுக்கு ஈழத்தே பிரபல்யம் பெற்ற வரகவி எமது குருபகவான் 'வெள்ளைஅண்ணை மகரிஷி' பெரும் புலவராகவோ பெருங்கவிஞராகவோ தென்படாமல் போனது தமிழினத்தின் துரதிருஷ்டமே.

யாழ்பாணத்தில் இவ்வாறான அறியாமை, போலிமைக்குள்ளும் எம்பிரானை திரு அவதாரம் எனப் புரிந்து அவர்தம் அருள் நூல்களை தாங்களே வெளியிட்டு வைத்தும்,வெளிநாடுகளில் இருந்து பெரும் மொழியியல் நூல்களை எடுப்பித்துத் தந்து எம்பிரான் ஆய்வுகளை அவர்தம் மகிமையினை உலகிடைப் பரப்பியும் பிறவிப்பயன்துய்த்த பெருந்தகைகளும் யாழ்ப்பாணத்தில் அன்று இருந்திருக்கின்றார்கள்.

# திருக்கேதீஸ்வர புராணம்



திருக்கேதீஸ்வரம்

யாழ்ப்பாணத்தில் அச்சு வேலி இடைக்காட்டில் வாழ்ந்த பண்டிதர் கணபதிப்பிள்ளை குருமகான் மீது பக்தி கொண்ட மென்மை உள்ளம் படைத்த சிவனருட் செல்வர். முன்னர் பரமேஸ்வராக்கல்லூரியின் தமிழாசிரியர்.

அவர், 1966-ல் எமது இறைமைந்தரை 'திருக்கேதீஸ்வர புராணம்' பாட வைத்து தமது ஊரின் சனசமுக நிலையத்தின் மூலமாகப் பெற்ற நிதியில் அதனை அச்சாக்கி, திருக்கேதீஸ்வரத்திலே சிவராத்திரி தின உற்சவத்தின் போது அரங்கேற்றி தேவமைந்தனின் பெருமையை உலகறியச் செய்து இருக்கின்றார். (அன்பர்கள் யாராவது எம்பெருமானின் திருக்கேதீஸ்வரபுராணத்தை வைத்திருந்தால் அதனை மீள்பதிப்பு செய்ய வகைசெய்க.)

நூலாசிரியருக்கு எம்பிரான் முதல் தரிசனம் 1966-களிலே திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் முன்பாக ஏற்படுத்தப்பெற்ற அரங்கிலே, எம்பெருமானின் திருக்கேதீஸ்வரபுராண நூல் வெளியீட்டில் எம்பிரான் உரையாற்றும்போது கிட்டியது..

இந்நூலாசிரியர் தமது தந்தையாரது அரசசேவை இடமாற்றங்களால் தென் இலங்கை முதலாக ஈழத்தின் வேறு பாகங்களில் வாழ்ந்தவர். அதனால் குருபகவான் தரிசனம், பிறந்தகமான நல்லூரில் கிட்டவில்லை. இருந்தபோதும் சொந்த ஊரில் அல்லாது மணிவாசகரை ஆட்கொண்ட திருப்பெருந்துறையான திருக்கேதீச்சரத்திலே சிவராத்திரி தினத்திலே எம்பெருமான் முதல் தரிசனம் கிடைக்கப்பெற்றதை இந்நூலாசிரியர் பெரும்பேறாகக் கருதுகின்றார்.

திருக்கேதீச்சரத்திலே எம்பிரானின் நூல் அரங்கேற்றத்தில் எம்பெருமானும் சொற்பொழிவாற்றினார்.

குருபகவான் அனைவருக்கும் வணக்கம் கூறி . "நான் இப்பொழுது பேச எடுத்துக் கொண்ட விடயம் ஒன்றுமில்லே.. என்றவாறு மொழிந்து அந்த "ஒன்றுமில்லை" என்பதையே தலைப்பாகக் கொண்டு சூனியம் என்பதாக்கி சிவனின் தத்துவத்தை மிக எளிமையாக அனைவரும் மெய்ம்மறந்து நிற்க ஆன்மீகச் சொற்பொழிவாற்றி நின்றார்.
சிறுபராயத்தினனான இந்நூலாசிரியரை எம்பெருமான் அப்போதே ஈர்த்திருந்தாலும், யாழ்ப்பாணம் வந்து மூன்று ஆண்டுகளின் பின்பேதான் ஆசிரியரின் அன்னையார் எம்பெருமான் வெள்ளை அண்ணை ஞானகுருவிடம் இந்நூலாசிரியரைச் சீடனாக அனுப்பினார்.

## செவ்விளநீர் கேட்டார்!

அவதார குருவின் சீடரான இந்த நூலாசிரியரின் அன்னையார் ஆசிரியரைக் கருத் தரிக்கும்போது ஒரு சொப்பனம் கண்டாராம். , "அழகிய செவ்விளநீர்!" என மகிழ்வுடன் ஒரு செவ்விளநீரை தெருவால் ஏந்தி வரும்போது அது பிளவு படவே அதனை 'அபிசேஷகத்திற்கு' என வெள்ளை அண்ணை மகரிசி வீட்டு வாசலில் வைத்துவிட்டு வந்ததுபோன்றதே அன்னையாரின் அச் சொப்பனமாம்.

இதனை இந்தநூலாசிரியருக்கு அவரது அன்னையார் தெரிவித்திருக்கின்றார். . 1968..ல் இந் நூலாசிரியரின் 15..ம் பராயத்தின்போது, ஏற்பட்ட வெடி விபத்தொன்றில் இருந்து உயிர் பிழைத்தபின்பு, தாயார் எம்பிரானிடம் நூலாசிரியரை ஒப்படைத்தார். .எம்பெருமான் ஜோதியில் கலப்பதற்கு முதன்நாள் நள்ளிரவு நூலாசிரியர் மிகவும் தளர்ந்த நிலையிலே கண்விழித்து குருசேவை செய்து கொண்டிருந்தார். அப்போது எம்பிரான்

"அழாதே பிள்ளாய்!ஏன் பிள்ளை அழுகிறாய்! செவ்விளநீர் தருவாயா.." எனத் தமது சீடரான இந் நூலாசிரியரைக் கேட்டுள்ளார்.

## இளைப்பாறலும் சமுகக் கடமையும்

குருநாதரான இறையவர், பரமேஸ்வராக் கல்லூரியில் சில ஆண்டுகளே பயிற்றுவித்துப்பின்பு ஓய்வு பெற்றார். 'சபாமாளிகை' எனும் பெற்றோரின் பேரில்லத்தில், சித்தாச்சிரமம் அமைத்துத்

தொண்டாற்றி அனைவருக்கும் வழிகாட்டினார்.. சீடர்களை உருவாக்கினார். சிறிய ஐந்துவும் வருந்துவது கண்டு கண்ணீர் சிந்தினார். தம்மை நாடிவந்தோர் துயர் களைந்தார். இரட்சித்தார், ஆன்மிகம் போதித்தார். மனித நேயம் வகுத்தார்.



திவ்ய தரிசன மகரிஷி

நாட்டின் நாலாபுறமும் இருந்து கோயில் உற்சவங்கள் கல்லூரி நிகழ்வுகள்,ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மற்றும் சனசமூகநிலையக் கொண்டாட்டங்கள், நவராத்திரி,சிவராத்திரி விழாக்கள், நாயன்மார் குருபூசை முதலானவற்றில் ஆன்மிகச் சொற்பொழிவாற்றவும், கவியரங்கத் தலைமைக்கும் என எம்பெருமானை அணுகினர்.

வெள்ளை அண்ணை மகரிஷியின் ஆன்மீகச் சொற்பொழிவுகள் அற்புதமானவை. மிகவும் ஆழமான விடயங்களை இன்றைய விஞ்ஞான தத்துவங்களுடன் இணைத்துப் பாமரர்களும்,குழந்தைகளும் விளங்கத்தக்க வகையிலே நகைச்சுவையும் கலந்து அவையினர் முன்னே உரை நிகழ்த்துவார். 'எம்பெருமான் வெள்ளை அண்ணை

அவையினரைக் கவரும் திறன் தனித்துவமானது. ஆழமாக சிறுவர் மனதிலே பதிய வல்லது.

இதனை 30.01.2011.ல் இந் நூலாசிரியரின் திருவருள்வாசகம் நூலுடன் எம்பெருமான் பக்திப்பாமாலை இறுவட்டும் நல்லூர் திவ்யஜீவன சங்க மண்டபத்தில் அரங்கேறியபோது நல்லூர் பாலகதிர்காம தேவஸ்தான முதல்வர் பிரம்மஸ்ரீ கு.குமாரக்குருக்கள் ஆசியுரை வழங்கும்போது குறிப்பிட்டுள்ளார்..

## குழந்தைகள் தோழர்

அறிவுலக மேதை, வரகவி, வைத்திய கலாநிதி, தத்துவஞானி, ஆன்மிக ஞானி என்பதாய் பன்முகங் கொண்ட எமது மகரிஷி குழந்தைகளைக் காண குதூகலம் ஆகிவிடுவார். குழந்தைகள் அவரைத் தோழராகக் கருதுவர். ”பிள்ளைகளே உங்களது பிரியமுள்ள வெள்ளை அண்ணை!” என வெண்பாவில் கவியரங்கை ஆரம்பிக்கும்போது, அந்த பிள்ளைகள் கைதட்டி ஆரவாரிப்பர். பிள்ளைகளோ எம்பெருமானுடன் பேசும் சந்தர்ப்பத்திற்காக ஏங்கி நிற்பர்.

அவ்வாறு பேசும் சந்தர்ப்பம் கிடைத்த பிள்ளைகளின் பெற்றோர்களும், தங்களது பிள்ளைகள் ஒரு புதிய பிறவி எடுத்து வந்ததான பூரிப்புடன் புளகிதம் அடைவர்.

## சோதிட வல்லுனர்

மகரிஷி சோதிடக் கலையிலும் பெரும் நிபுணத்துவம் பெற்றவர்.

பல ஆய்வுகளைச் செய்து அக்கலை பயின்ற தமது மாணவர்களது வானியல் கிரகநிலை அறிவையும் வளர்த்தவர்.

சோதிடத்தில் உள்ளவாறே கிரகங்களின் நிறங்கள் விஞ்ஞான நிருபணங்கள் என (செவ்வாய் ..சிவப்பு, வியாழன் ..மஞ்சள் முதலானவை)
கூறி கருத்தரிப்பதும், பிறப்பெடுப்பதுமான நேரத்தில் மனிதப் பிறவிகளின் குணநலங்கள் எவ்வகையில் அமைவு பெறும் என்பதை மாணவர்களுக்கு ஆவல் பொங்கும் வகையிலே கூறி வானியல் கற்பித்தவர்.

வெள்ளை அண்ணை மகரிஷியிடம் சோதிடம் பயின்ற மாணவரில் மகாதேவா, அமரர் திருமதி நீலாம்பிகை,ஞான பாஸ்கரன் ஆகியோர் குறிப்பிடத்தக்க மாணவராவர். மகாதேவா அவர்கள் சோதிடத்திலே மிகவும் பிரபல்யம் பெற்று அதனைத் தமது தொழில் முறையாக கொழும்பிலே மிகவும் பிரபலத்துடன் இன்றும் ஆற்றி வருவதாக அறியமுடிகின்றது.பாஸ்கரன் அவர்கள் வணிக நோககு அல்லாது அதனைக் குருபகவான் வழிமுறையில் தம்மை நாடி வருவோருக்கு அதனை இலவசமாகவே போதித்து பலன் கூறியும் வருகின்றார்.

## விஞ்ஞான மகரிஷி

விஞ்ஞான அறிவிலும் வல்லுனரான மகரிஷி கணிதம் பௌதிகம், இரசாயனத்தில் துறைபோன அறிஞர்களே வியக்கும் பெரு ஞானம் படைத்தவர். உள்ளங்கையில் உலகம் உருவாகும் என்று அன்றே கூறிநின்றவர். பார்வையாளன் புலனுறுப்பான கண்ணால் காதால் முறையே பார்த்தும் கேட்டும் இன்புறுவதுபோல, திரைப்படக் காட்சிக்கேற்ற வாசனை உணர்வையும் திரை அரங்கினுள் மூக்கினால் நுகர்ந்து அனுபவிக்கும் கண்டுபிடிப்பும் உருவாகும் என்பதை பல ஆண்டுகளுக்கு முன்பே தமது சக ஆசிரியர்களுக்கும் மாணவருக்குத் தெரிவித்திருந்திருக்கின்றார்.

மனித வேற்றுமை,விரிசல் போக்குகளால் எதிர்கால விஞ்ஞானம் நன்மைகளைவிடத் தீமைகளையே உருவாக்கப்

போகின்றது. நாடெங்கும் போர் உக்கிரமடையப் போகின்றது. அதனால் மனித சமுதாயம் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகப் போகின்றது. என்பதோடு வேற்றுமை,விரிசல் களைந்து ஒருவரை ஒருவர் நேசிக்கப்பழக வேண்டும் என்பதை விஞ்ஞானத்தில் முன்னணி வகிக்கும் நாடுகளே அனைத்துலகிடமும் எதிர்பார்க்கும் காலம் உருவாகும் என்பதையும் எம்பெருமான் அன்றே தீர்க்கதரிசனமாய் உரைத்துள்ளார்.

## கிறீஸ்தவர் உறவு

எம்பெருமான் வெள்ளை அண்ணை மகரிஷியில் யேசு நாதரின் தோற்றத்தை கிறித்தவ அன்பர்கள் கண்டு வழிபாடியற்றி உள்ளனர்.

அன்னை மாதா எம்பெருமான் சயன அறையிலே தோற்றந்தந்து அவர்தம் சிரசிலே தமது திருக்கரத்தினை வைத்து "மகனே! என ஆசீர்வதித்துச் சென்றதாக எம்பெருாமன் தமது கிறித்தவ பக்தர்கள் சீடர்களுக்கும் தெரிவித்துள்ளார்.

மானிப்பாயில் பிறந்து, எம்பெருமான் வெள்ளை அண்ணை மகரிஷி அவதரித்த நல்லூரிலே கிறித்தவ திருத் தந்தையாகத் தொண்டாற்றி தனது அறிவாற்றலால் உலகினை ஈர்த்தவரும், ஜேர்மனி தேசம் ஈழத் தமிழர் ஒருவருக்கு முத்திரை இட்டுக் கௌரவித்தது என்ற பெருமையைத் தட்டிச் சென்றவரும் நல்லூரில் உள்ள கிறித்தவ தேவாலயத்தில் பூசனை புரிந்து நல்லூர் சுவாமி என அழைக்கப்பெற்ற சுவாமி ஞானப் பிரகாசர் அவர்களது கண்களுக்கு ஈழ அவதாரமான எம்பிரான் யேசு நாதராகவே தோற்றம் தந்திருக்கின்றார்.

'வைத்திலிங்கம்' எனும் இயற் பெயர்படைத்த ஞானப்பிரகாசர் அவர்கள் ஆங்கிலேயரது ஆட்சிக்காலத்தில் மானிப்பாயைச் சேர்ந்த அவரது சைவத் தந்தை இறந்தபின் அவரது தாயார் அச்சுவேலி கிறீஸ்தவ தமிழரை மறுவிவாகம் செய்யவே அந்த வளர்ப்புத் தந்தையால் பேர-
-றிஞர் ஆனவர்.

மேற்படி ஞானப்பிரகாசர் முதலானோர் பூசனை இயற்றிய கத்தோலிக்க தேவாலயமான புனித சவேரியார் தேவாலயத்தில் பின்னாளில் பூசனை இயற்றிக் கொண்டிருந்த யாழ்ப்பாண நகரைச் சேர்ந்த திருத்தந்தை ஜெயசீலன் அடிகளார் அவர்கள் எமது இறை மைந்தரின் மகிமையால் ஈர்க்கப் பெற்று இடையிடையே எம்பெருமான் வாழும் சபாமாளிகை வந்து எம்பெருமானுடன் அறிவியல் பகிர்ந்து உரையாடி மகிழ்ந்து செல்வார்.

1977..ல் எம் பெருமான் இப்பூவுலகை விட்டு மறைவதற்கு இருநாட்கள்முன் நல்லூர் கத்தோலிக்க தேவாலயத்தில் பூசனை இயற்றிக் கொண்டு இருந்த மேற்படி வணபிதா ஜெயசீலன் அடிகளார் எம்பெருமான் இல்லம் வருகை தந்தார். தமது உள்ளுணர்வு உரைத்தவாறு தாம் பூசனை இயற்றிக் கொண்டிருந்த நல்லூர் கத்தோலிக்க தேவாலயம் சென்றார். தமது கிறித்தவ ஆண்,பெண் பக்தர்கள் பலரை அழைத்துக் கொண்டு மீளவும் எம்பெருமான் இல்லம் வந்தார்.. நிர்வாணமாய் சயனத்தில் இருந்த இறைமைந்தர் முன் அக்கிறீஸ்தவ பக்தர்கள் அனைவரும் மண்டியிட்டு மனமுருகி உரத்த குரலிலே தேவனைப் பாடித் தோத்திரம் புரிந்த காட்சி கண்டு நூலசிரியர் உட்பட அங்கே நின்ற அனைவரும் கண்கள் குளமாக மெய்சிலிர்த்து நின்றனர். மேற்படி அன்றைய சம்பவத்தை அந்தக் கிறீஸ்தவ திருத்தந்தை எம்பெருமான் பெருமை கூறும் இந்த நூலுக்கு சாட்சியமாக வழங்கி இருப்பது எமது ஏக தெய்வத்தின் மகிமையினாலன்றோ!

## இஸ்லாமிய உறவு!

யாழ்ப்பாணம் நகரைச் சேர்ந்த இக்பால் என்ற இஸ்லாமியர், சிறு வயதிலே குருபகவானிடம் பயின்ற மாணவன்.

அவர்,மாதம் இருமுறை மகரிஷியிடம் வந்தமர்ந்து அருளுபதேசம் பெற்றுச் செல்வார். எமது இறையோன் இவ்வுலகை விட்டு நீங்குவதற்கு ஒருவாரத்தின்முன் சபாமாளிகை இல்லம்

வந்து படுக்கையில் முனகிக் கொண்டு இருந்த எம்பெருமான்முன் கண்ணீர் மல்கப் பிரார்த்தித்துக்கொண்டு நின்றார். மாணவன் இக்பாலிடம் எம்பெருமான் 'பிள்ளாய் சுகமா!' என வேதனையுடன் முனகல் ஒலியில் சுகம் விசாரித்தபோது அந்த இக்பால், 'அல்லா' என கண்ணீர் மல்க விசும்பி நின்றார். அச் சம்பவம் மதம், இனம் கடந்ததாய் அனைத்து உள்ளங்களையும் அங்கே உலுப்பி நின்றது.

## எம்பெருமானும் தாவீது அடிகளாரும்

யாழ்ப்பாணத்தின் சிறந்த மொழியியல் மேதை எனப் போற்றப் பெற்ற டேவிட் எனும் கத்தோலிக்க அருட் தந்தை,தமிழிலே 'தாவீது அடிகள்' என அழைக்கப்படுபவர். அவர்,சுவாமி ஞானப் பிரகாசரின் மாணவர்.

முன்னர், ஞானப் பிரகாசர் எமது இறைமைந்தரின் பெருமை பற்றி கூறியபோதே செய்தி கேட்டு எம்பெருமானைத் தேடி வந்தவர்.

அத் தாவீது அடிகளே யாழ்ப்பாணம் பொது நூலகத்தை தெற்காசியாவிலேயே மிகவும் உயர்ந்த தரத்திலே உருவாக்க வகை செய்தவர். யாழ்பாணத்தில் அறிவியல் வளன் நிறைந்த சந்ததி தோன்ற வேண்டும் என்பதில் முனைப்பாக இருந்தவர். நூல்களைக் குழந்தைகள்போலப் பேணுபவர்.

அவர்தம் இதயத் துடிப்பான யாழ்ப்பாணப் பெர்துநூலகம் இனவெறியர்களால் எரியூட்டப்பெற்றபோது தேவாலய மணியை அடித்தபடி மாரடைப்பால் உயிர் நீத்திருக்கின்றார். அத்தகைய தாவீது அடிகள் எனும் மொழியல் மேதை எமது இறைமைந்தர் மீது ஈர்ப்புப் பெற்று அடிக்கடி சபாமாளிகை இல்லம் வந்து எம்பெருமானுடன் உரையாடிச் செல்வார்.தமது கிறித்தவ மக்களுக்கும் எம்பெருமான் பெருமைகளை உரைக்கவே யாழ்ப்பாணத்தின் பல கிறித்தவபெரு மக்கள் எம்பெருமான் இல்லம் வந்து ஆசி பெற்றுச் சென்றுள்ளனர்.

தாவீது அடிகளார் தமக்குக் கிடைக்கின்ற மேலை நாட்டவரின் மொழியியல் நூல்களை இறைமைந்தர் பார்வைக்கு என வழங்க யாழ்ப்பாணம் புனித பற்றிக்ஸ் கல்லூரியில் இருந்து நல்லூருக்கு கால் நடையாக வந்து செல்வார்.

மேலை நாட்டு அறிஞர் பலருக்கு எம்பெருமான் மகிமையினை எடுத்துரைத்துள்ளார். தவிர தபால் அட்டையில் மகரிஷிக்குக் கடிதம் தீட்டும்போதில் "அன்பான வெள்ளை அண்ணைக்கு கறுத்தத் தம்பி அன்புடன் எழுதிக் கொள்வது..' என நகைச் சுவையாக விளிப்பர்.

அத் தாவீது அடிகள் எம்பெருமான் மறைந்த செய்திகேட்டு எம்பெருமான் வாழ்ந்த சாபமாளிகைக்கு ஓடோடி வந்தார் . எம்பெருமானுக்காக பிரார்த்தனை புரிநதார். நூல்களைக் கண்ணேபோல் காக்கும் அவர், தாம் முன்னர் இரவல் வழங்கிய நைந்துபோன நிலையில் இருந்த மிகப் பழைய நூலொன்றினை எம்பெருமானின் பூலோகத் தந்தையாரான சங்கரப்பிள்ளை அவர்களிடம் இருந்து பெற்றுச் சென்றார்.

## ஒன்றேகுலம்: ஒருவனே தேவன்!

எம்பெருமானின் ஆன்மிகச் சொற்பொழிவுகள், கவியரங்க நிகழ்வுகள்,உபதேசங்கள் அனைத்துமே பெரியவர் சிறியவர், படித்தவர், பாமரர் என எதிரே அமர்ந்து கேட்டுக்கொண்டு இருக்கும் அனைத்து ருள் நெஞ்சங்களிடமும் சென்று சேர்வன.

அதனை இலக்கிய வடிவிலே பருகும் அவையினர் தமது வாழ்வுப் பாடத்தில் வெற்றிகரமாக தேறும் மனப் பக்குவத்தைப் பெற்றுவிடுவர்.

எம்பெருமான், தமது பன்மொழி ஆற்றலால் உலகை ஒரு குடும்பம் ஆக்கினார். சமய தீட்சை வழங்கும்படியாக பக்தர்கள் அவரை அணுகினர். சாதி, இனம், மொழி கடந்த அவரது

ஆற்றலால் அனைவரும் ஈர்க்கப்பெற்று எம்பெருமான் வாழந்த சபாமாளிகையின் சித்தாச்சிரமத்தில் கூடினர். எம் பெருமான் கருணையுடன் வழங்கி நின்ற சமரசசிவ மார்க்கத்தில் திளைத்தனர்.

கிறித்தவர்கள் தமக்குப் பிறக்கின்ற பிள்ளைகளுக்கு தக்க ஒரு நாமம் சூட்ட எமது இறையவரையே அணுகினர். யாழ்ப்பாண நகரம் உள்ளிட்ட பிற இடங்களில் இருந்தும் தமது பிள்ளைகளது பிறந்த நாளின்போது ஆசி பெற எமது இறையவர் இல்லம் வந்து போயினர்.

இவ்வாறாக, சமரச ஆன்மிக அரசாங்கம் ஒன்றை நல்லூரிலே தமது சபாமாளிகையில் நடாத்திய ஒரு ஞானி என்ற வரலாற்றையே இறையவர் தந்துள்ளார்.

இன்று புலம் பெயர்ந்து வாழும் அவரது சீடர்களும், அருள்ஞானம் பெற்றவர்களும் ஒருகாலத்தில் ஈழத்தில் குருவான இறையவர் தம்மை எளிமை ஆக்கி 'வெள்ளை அண்ணை' என்ற உறவு தந்து ஆட்கொண்டாரே என்பதை எண்ணி நெக்குருகுகின்றனர். "என்னே எங்கள் இறைவன் கருணை!" என மெய் சிலிர்க்கின்றனர். "எமது வெள்ளை அண்ணை மஹான்போல ஒருவரை உலகெங்கு தேடினும் கண்டுகொள்ள முடியாதே!" என அங்கலாய்க்கின்றனர்.

## எம்பெருமானும் தமிழக ஆன்மீக வாதிகளும்

கிருபானந்தவாரியார், கவியோகி சுத்தானந்த பாரதியார், குன்றக்குடி அடிகள் முதலான தமிழக ஆன்மிகவாதிகள், சிவதொண்டர்கள், பேரறிஞர்கள் இவர்தம் மகிமைபற்றி வெளிப்படையாகவே அன்று ஈழத்தே வருகை தரும் போதெல்லாம்

கலாநிதி ஜெ.குமாரசுவாமி

# எம்பெருமானும் தமிழக ஆன்மீக வாதிகளும்



திருமுருக
பானந்தவாரியார்

கிருபானந்தவாரியார், கவியோகி சுத்தானந்த பாரதியார், குன்றக்குடி அடிகள் முதலான தமிழக ஆன்மிகவாதிகள், சிவதொண்டர்கள், பேரறிஞர்கள் இவர்தம் மகிமைபற்றி வெளிப்படையாகவே அன்று ஈழத்தே வருகை தரும் போதெல்லாம் எம்பெருமான் சொற்பொழிவு ஆற்றவரும் அவையிலே கூறி நின்றவர்கள்.

தமிழ்நாடு இருந்துவரும் பல துறவிகள் எம்பெருமான் இல்லத்திலும் வந்து தங்கி தமது சிவத் தமிழ்ப்பணியை ஆற்றி எம்பெருமான் பெருமை உணர்ந்து மகிமைப்படுத்தித் திரும்பியவர்கள். அவ்வாறு வந்து சென்றவர்களில் உண்மையான சிவதொண்டர்களையும் உலக ஆசாபாசங்கொண்ட சுயநலமிகளையும் எம்பெருமான் இனங்கண்டுள்ளார். அவர்களது சிறுமை களைய தாமே அவர்களுக்கு உபதேசம் புரிந்துள்ளார். அவர்களை நல்வழிப்படுத்தி இனிமேல் அத்தகைய தவறு நேராவண்ணம் காத்து ஒழுங்குமுறை பேணும்படி கூறி பொருளுதவி செய்து அவர்கள் தமது தாயகத்திற்கு திருப்தியுடன் செல்ல அருள் கூர்ந்தும் உள்ளார்.

## பகவான் சத்யசாயிபாபாவுடன் எம்பெருமான்!



பகவான்
சாயிபாபா

எமது இறை அவதாரமான வெள்ளை அண்ணை மகரிஷி தம்மை நாடிவரும் பக்தரிடம் வழிபடுமார்க்கம் பற்றி உரைக்கும்போது, ''மனிதர் தமது சுயநல தேவைக்காக இன்னொருத்தருக்கு கையூட்டு வழங்குவதும் காக்காய் பிடிப்பதும் போன்றதல்ல இறைவன்

வழிபாடு.. அதற்கு அன்பு, நம்பிக்கை அடைக்கலம் வேண்டும்" என்பார். 'அழுதால் அவனைப்பெறலாமே' எனும் மணிவாசகர் திருவாசகத்தையும் உதாரணங்காட்டுவார்.

1970 –ம் ஆண்டில் ஒருநாள் எம்பெருமான் இல்லத்திற்கு வந்த சாயிபாபா பக்தர் ஒருவர் ஒரு துண்டுப்பிரசுரத்தைத் தந்துவிட்டுச் சென்றுவிட்டார். அதிலே ''பகவான் சத்யசாயிபாபாவின் மகிமையினை குறைந்தது 100பேருக்காவது இதுபோன்ற துண்டுப்பிரசுரத்தின்வழி தெரியப்படுத்தின் அவர்கள் வாழ்வு சுபீட்சம் காணும்" என்பது போன்ற வாசகம் இருந்தது. அதனை ஆசிரியர் வெள்ளை அண்ணை மகரிஷியிடம் வாசித்துக் காட்டியபோது, வெள்ளை அண்ணை மகரிஷி பகவான் சத்தியசாயிபாபாவுக்கு ஆங்கிலத்திலே ஒரு கடிதம் வரைந்தார். Dear Brother!(அருமைச்சகோதரரே!') என விழித்து 'உங்களது பெயரால் வழங்கப்பட்ட துண்டுப்பிரசுரம் பார்த்தேன்.. இதுபோன்ற துண்டுப்பிரசுரத்தினை அச்சிட்டு வெளியிடுவதற்கு வசதி அற்ற வறிய மக்களால் முடியாதே.. இது போன்ற பிரசுரங்கள் தொடர்ந்து வெளிவராது இருக்க தாங்கள் வகைசெய்யவேண்டும்'' அன்பான சகோதரன் வெள்ளை அண்ணை எனவும் ஆங்கிலத்திலே அக்கடிதத்தில் இட்டிருந்தார்.. அக்கடித உறையில் பகவான் சாயிபாபாவின் புட்டபர்த்தி இந்திய முகவரியையும் அவரே எழுதி இந்நூலாசிரியரிடம் கையளித்து அதனை, அப்போது யாழ்ப்பாணம் தபால் அதிபராக பணிபுரிந்தவரும் தற்போது யாழ்ப்பாணத்தின் பிரபல சட்டத்தரணியாக இருந்து வருபவருமாகிய ஆசிரியரின் தாய் மாமனார் ஆன திரு.அ.இராஜரத்தினம் அவர்களிடம் பதிவுத் தபாலில் சேர்க்க கொடுத்துவிடும்படி பணித்தார்.

அன்று நள்ளிரவிலே குருபகவான் சயன அறைக்குள் ஏதோ உரையாடலும் தொடர்ந்து குருபகவான் பாடுவதும் கேட்டது..

அப்போது, எம்பெருமான் சீடர்களான ஆசிரியரும், தற்போது கனடா வாழும் திருச்செல்வம் அவர்களும் திருசேவைக்காக எம்பெருமான் வாழ்ந்த சபாமாளிகை இல்லத்திலேயே படுத்துறங்குவதால், சப்தம்கேட்டு விழித்தனர்.. சற்று நேரத்தின்பின் வெளியே வந்த வெள்ளை அண்ணை மகரிஷி 'சாயிபாபா சயன அறைக்கு வந்தார் எனவும், தம்மிடம் துண்டுப்பிரசும் பற்றி வருந்துவதாகத் தெரிவித்தார் எனவும், "இது வீணர்களின் வேலை, ஆசைக்கோர் அளவில்லை.. தீயவரைத் திருத்துவோம்"என்ற வாக்கை தந்துவிட்டுச் சென்றார் எனவும் தெரிவித்தார். அதன்பின் பகவான் சத்யசாயிபாபா எம்பெருமான் சயன அறைக்கு அடிக்கடி வந்து உரையாடிச் செல்வதை கொழும்புத்துறை பிரதம சீடர் செல்வரெத்தினம் அடிகளார் உள்ளிட்ட தமது சீடர்களுக்கும் எம்பெருமான் தெரிவித்திருக்கின்றார்.

## சப்த கன்னியருக்குத் தாக சாந்தி!

ஒருநாள் நள்ளிரவிலே குருபகவான் தனது சீடர்களில் ஒருவரான திருச்செல்வம் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது, ´பிள்ளை எழும்பு! என அருகே வந்துநின்று கூப்பிட்டார்.

திருச்செல்வமும், ´´என்ன வெள்ளை அண்ணை!´´ என்று பதறி அடித்து எழுந்தபோது ´´பேய்களுக்கு தண்ணி வைக்க வேணும்..

அடுக்களை சென்று ஏழு சிரட்டைகளில் தண்ணீரை நிரப்பி எடுத்துவா பிள்ளாய். ´´என்றார்.. சீடர் திருச்செல்வமும் ஒன்றும் புரியாது பயத்துடன் எழுந்து, அரைத்தூக்கத்தோடு 7-தேங்காய் சிரட்டைகளில் தண்ணீரை நிரப்பி எம்பிரான் பணித்தபடி சயன அறை வாயிலில் வைத்தார்.. சில நிமிடங்களின்பின் குருமகான், அறையின் மேற்குச் சுவரைப் பார்த்து பிள்ளைகாள்! திருப்திதானே! சென்று வாருங்கள்! என்றார்..

மறுநாள் இத்தகவல் பற்றி திருச்செல்வம் எம்பெருமான் சீடரகளில் ஒருவரான இந்த நூலாசிரியரிடம் கூறினார். அதுபற்றி இந்நூலாசிரியர் மற்றும், கொழும்புத்துறை செல்வரெத்தினம் அடிகளார் ஆகியோர் குருபகவானிடம் வினவியபோது, " வந்தவர்கள் சப்தகன்னியர் என்றும் தமது சயன அறையில் வந்திறங்கி, உரையாடினார்கள் என்றும், அவர்களது தாகம் தீர்த்து அனுப்பவே அந்த சப்த கன்னியருக்கு ஏழு சிரட்டைகளில் தண்ணீர் கொண்டுவரும்படி தூங்கிக் கிடந்த திருச்செல்வத்தை எழுப்பிப் பணித்ததாகவும் தெரிவித்தார்கள்..

சப்த கன்னியர் மட்டுமல்ல மேலும் பல அதிசயங்கள் எம்பெருமான் புனித சயன அறையிலே. . .

ஒருமுறை கொழும்புத்துறை செல்வரெத்தினம் அடிகளாரின் சிறியமகளான நான்கு வயதே நிரம்பிய 'ஞானி ' வெள்ளை அண்ணை மகரிஷியின் சயன அறையிலே தாய்தந்தையருடன் இருந்தபோது திடீரரென அறையின் மூலைச் சுவரைப் பயத்துடன் சுட்டிக்காட்டி "பேய்:..பேய்" என அலறினார். வெள்ளை அண்ணை மகரிஷியோ "பயப்படாதே பிள்ளாய்.. அவை ஒன்றும் செய்யா" என்றுவிட்டு தமது இரு கரத்தையும் மும்முறை தட்டி "சூ" என்றார். அப்பேய்க் கூட்டம் கலைந்து ஓடி மறைந்ததாம். அதனை அக் குடும்பத்தினர் அன்று அனைவரிடமும் அதிசயத்துடன் கூறியுள்ளனர்.

மேற்படி எம்பெருமான் பிரதம சீடர் சிவனருட்செல்வர் செல்வரெத்தினம் அவர்களது குடும்பத்தினர் கொழும்புத்துறையில் யோகர் சுவாமிகளின் பக்தர்களாவர். அவர்கள் யோகசுவாமிகளை வணங்குவதோடு . கால்நடையாக மேற்படி யோகசுவாமிகளின் அன்புக்குப் பாத்திரமான எம்பெருமான் வாழும் நல்லூர் சபாமாளிகைக்குத் தினமும் வருகை தந்து ஆசி அருளுபதேசம் பெற்றுத் திரும்புவார்கள். பூரண கடாட்சம் கை கூடப்பெற்ற அவர்களை பல சோதனைகளில் இருந்து எம்பெருமான் மீட்டுள்ளார்.

கலாநிதி ஜெ.குமாரசுவாமி

# இறைமைந்தரும் தேவலோகத்தினர் சஞ்சாரமும்

புண்ணிய தினங்களில், நள்ளிரவு தாண்டியதான பிரம்ம முகூரத்தத்தின்போது, நல்லூர், சட்டைநாதர் சிவன்கோயிலுக்கு வந்து பூசனை இயற்றும் தேவலோகத்தவர்கள் பூசனையை முடித்து வெள்ளை அண்ணை மகரிசியின் சயன அறையிலே வந்தமர்ந்து உரையாடிச் செல்வார்கள்..அவ்வாறான சிவ தினங்களில் அப்புண்ணிய வேளையில் மணிஓசை எழும்.. எம்பெருமானின் புரியாத ஒருவகை எதிரொலியுடன் கூடிய பேச்சொலியை சில சமயம் வெளியே உறங்கிடக்கும் இந்த நூலாசிரியர் உள்ளிட்ட சீடர்களும் கேட்டிருக்கின்றார்கள். மறுநாள் இந்நூல் ஆசிரியர் அதுபற்றி கேட்கும்போது சட்டைநாதர் சிவாலத்தில் வந்து பூசனை இயற்றித் திரும்பும் தேவர்கள் வந்துபோனது பற்றி கூறுவர்.. ''குக்குடுசாமி, குடுகுடுசாமி, குடையான்சாமி என்றுவிட்டு ''துத் துது துது துது தூ..''என தமது கைகளை வீசி ஒருவகை இராகம் இசைப்பார்... சில சமயங்களில் புரியாத ஒருவகை கிரீச் ஒலியை எழுப்புவார்.

ஆசிரியரும் எம்பெருமானிடம் இருந்து பிறக்கும் விசித்திர ஒலிகளிலெல்லாம் ஏதும் தெய்விக சக்தி இருக்கலாமோ என தாமும் இடையிடையே எம்பெருமான்போல அவ் விசித்திர ஒலிகளை உச்சரித்தும் கரங்களை வீசியும் செய்து பார்ப்பதுண்டு..

அபார சக்திபடைத்த ஞானியர், அவதாரங்கள் இப் பிரபஞ்சத்தில் உள்ள சில சக்திவாய்ந்த ஒலியை தம்வசப்படுத்தி அதன்மூலம் பல அற்புதங்கள் ஆற்றியதாக ஆசிரியர் தாம் கற்ற சில ஆன்மிக நூல்கள் வாயிலாக அறிந்திருக்கின்றார். அவ்வாறே, தமிழ் நாட்டைச் சேர்ந்த அருட்பிரகாச இராமலிங்க வள்ளலார் சுவாமிகள் ''பீச்'' என்ற ஒலியைக் கண்டுபிடித்து அந்த ஒலியின் ஊடாக பல அற்புதங்கள் புரிந்தாகவும், கிரேக்க அறிஞர்கள் மொழி என்பது ஐம்பூதம் போல இயக்கம் காண்பது' எனக் குறிப்பிட்டதையும் ஆசிரியர் தமது ''சமரசபூமி'' என்ற நூலிலே (பக்.278)குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி, தேவர்கள் பூசனை இயற்ற வரும் சட்டைநாதர் சிவாலயம் முன்பாக யானை அம்பாரியில் சிவபெருமானும், ,மகாவிஷ்ணுவும் திவ்ய ஒளி பொருந்திய குழந்தையை அன்னையாரிடம் வழங்கி நின்ற சொப்பனத்தின்பின் எமது இறை மைந்தரை அவரது பூலோக அன்னையார் கருத்தரித்தார் என்பதுடன் தேவலோகத்தினர் பிரம்ம முகூர்த்தத்தே பூசனை முடித்து சட்டைநாதர் சிவாலயமிருந்து எம்பெருமான் சயன அறைக்குள் சஞ்சாரம் புரிந்து செல்வது என்பது எல்லாமே எமது அவதார இறைவனுடன்
தொடர்புபட்ட தெய்விக சம்பவங்களே.. .

ஒருமுறை நள்ளிரவுவேளை சில விசித்திர ஒலிகளைக் கேட்டு பூட்டப்படாது சார்த்தி இருந்த எம்பெருமான் சயனஅறையைத் திடீர் என திறந்து உள்நுழைந்த தந்தை சங்கரப்பிள்ளை அவர்கள் வெளிச்சத்தைப் போடுமுன் கண்களை ஏதோ மின்னல் அடித்து மறைத்தது.. எதுவித காட்சியையும் கண்டுகொள்ளமுடியாதபடிபோக, ஏதோ ஒன்று தந்தை சங்கரப்பிள்ளை அவர்களை செயலிழந்து தடுமாற வைத்து எம்பெருமானின் சயன அறைக்கு வெளியே தள்ளியது... கதவு தானே மூடியது.. உள்ளே நாகங்கள் சீறியது போன்ற ஒரு பயங்கர உணர்வு தமக்கு ஏற்பட்டதாகச் சங்கரப்பிள்ளை அவர்கள் அனைவருக்கும் அன்று தெரிவித்துள்ளார். அதன்பின் இரவு சயனம் புரியும்போது யாரும் உள்நுழையாதபடி எம்பெருமான் தமது சயன அறையைத் தாழிட்டுவிடுவார்..

எம்பெருமான் இப்பூலோகத்தில் அவதாரம் புரிந்த பிரசவ அறையிலே ஒரு நாகம் வந்து படமெடுத்து நின்ற காட்சி கண்டு அன்னை அலறியதும், அதனை மூன்று வயதே நிரம்பிய

வ மைந்தரே மழலைமொழியில் சட்டைநாதர் சிவாலயத்தின் ராத்திரி தினத்திலே தமது அன்னையாருக்கு நினைவு ந்தி நகைத்து அனைத்து பக்தகோடிகளையும் மெய்சிலிர்க்க த்து நின்றதும் இவ்வாறான தெய்விகச் சம்பவங்களுடன் டர்பானதே..

## அடியவர்க்கு இனியவர் எம்பிரான்



டபதேச மகரிஷி

எம்பிரான் தமக்கு முன்னால் நிற்பவர் நினைப்பதை மொழியும் ஆற்றல், பாவிகள் கடைத்தேற பரிகாரம்..தீர்க்க தரிசனம்..
அவை மட்டுமா? அவரது மெய்யான சீடர்கள், பக்தர்களின் கனவிலே தோன்றி,அவர்களுக்கு நடக்கவிருக்கும் சம்பவங்களை முன் கூட்டியே உணர்த்தி அதுவழி மறுநாள் அவர்களை தம்மிடம் வரவழைத்து, அவர்கள் மனவிருளை அகற்றி மாஒளி பரப்பி தீமைகள் நேரா வண்ணம் தடுத்து ஆட்கொண்டிருக்கின்றார்.

"வேண்டுவார் வேண்டுவதை ஈவான் கண்டாய்" என னைவரும் வாழ வகை செய்த சத்குரு அவரே.

ஒரு முறை அவரது தாயார் மீனாட்சி அம்மா ாங்கலுக்குச் சர்க்கரை இல்லை இரவும் ஆகிவிட்டது எனக் றிக் கொண்டிருக்க மகரிஷியோ, 'சர்க்கரை தானே வீடு தேடி ருகின்றது எனவும்; மறுநாள் பொங்கல் கொண்டாடி வருகிற ர்ளைகளுக்கும் சேர்த்து பரிமாறும்படியும் கூறினார்..

என்ன ஆச்சரியம்! எம்பிரான் கூறிய சிறிது நேரத்தால் வர்களது வீட்டு வாயிலில் இருவர் வந்து நின்றனர். அவர்கள்

ஒரு பாரவண்டியின் சாரதியும் உதவியாளருமாவர். தாம் கடைகளில் பண்டங்களை இறக்கிவிட்டு திரும்பும்போது, தங்கள் பாரவண்டி அருகே பழுதாகியதால் அன்றிரவை அவர்களது வீட்டிலே தங்க அனுமதிக்கும்படி கேட்டனர். தாங்கள் கொண்டுவந்த சர்க்கரை பொங்கல் சாமான்களை அன்னையாரிடம் பயபக்தியுடன் வழங்கி நின்றனர்.

அயலூரைச் சேர்ந்த பத்து வயது அநாதைச் சிறுமி "எனக்கு படிக்க முடியாத சூழ்நிலை! ஆனால், படிக்க ஆசை! எழுத்துவாசனை இல்லாத எனக்கு இனி எங்கே படிப்பு வரப்போகிறது வெள்ளை அண்ணை" 'என்று ஏக்கமுடன் கேட்டு நின்றபோது, அச்சிறுமியின் தலையிலே தமது திருக்கரத்தை வைத்து கல்வித்தெய்வத்தின் தோத்திரம் பாடி "உனக்குப்படிப்பு வரும்" என்று கூறிப் பாடசாலை உபகரணங்களை வாங்கித் தந்து, படிக்க வைத்து கேள்விகள் கேட்டபோது அவளிலே முன்னேற்றம் கண்டு, பள்ளிக்குத் தமது சொந்தச் செலவிலே அனுப்பி வைத்தார்.

## இலவச பாடநூல்

ஊரிலே வறிய பள்ளி மாணவருக்கு பாடப்புத்தகங்கள், அப்பியாசப் புத்தகங்கள், பேனா உபகரணங்களை இலவசமாக வழங்கி மாணவர்களின் கல்வி அறிவை ஊக்குவித்தார் எம்பிரான்.. வகுப்பேற்றம் பெற்ற அனைத்து வகுப்பு வறிய மாணவர்கள் தமது புதிய வகுப்பிற்கான புத்தகங்கள்,அப்பியாசப் புத்தகங்கள்,பென்சில் பேனா உபகரணங்கள் பட்டியலுடன் எம்பிரான் சபாமாளிகை வருவார்கள்.

அதற்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் உள்ள ஸ்ரீ லங்கா புத்தகசாலையில் எமது வெள்ளை அண்ணை மகரிஷிக்குக் கடன் கணக்கே இருந்திருக்கின்றது. எம்பெருமான் பணிப்பின்பேரில் அந்தந்த மாணவருக்கு தேவையான புத்தகங்கள்,

அப்பியாசப்புத்தகங்கள் மற்றும் பாடசாலை உபகரணங்களை அம்மாணவர் வழங்கிய பட்டியல் பிரகாரம் இந்நூலாசிரியர் உட்பட எம்பெருமானின் ஏனைய சீடர்களும் மேற்படி ஸ்ரீ லங்கா புத்தகசாலையில் இருந்து பெற்றுவந்து வறிய பிள்ளைகளுக்குப் பகிர்ந்தளித்து வந்துள்ளனர்.

## எம்பெருமான் பாட நூல்கள்

எம்பிரான் வெள்ளை அண்ணை மகரிஷி தம்மை நாடிவரும் குழந்தைகளுக்காக ´´இனிக்கும் ஆங்கிலம்´, ´இனிக்கும் சிங்களம்´ ´´மொழியியல் கற்போம்´´ "சோதிடம் கற்போம்" முதலான நூல்களை எழுதினார்.. அவரது தமிழ் மூலம் ஆங்கிலம் கற்கும் இலகுவான இனிக்கும் ஆங்கிலம் போதனை முறைமையால் ஊரிலே பல மாணவர்கள் பலர் ஆங்கிலப் புலமை எய்தினர். ஆயுர்வேத மருத்துவ நிபுணரான மகரிசி மருத்துவ மூலிகைப் பெயர்கள், அவற்றின் குடும்பம், அம் மூலிகைகள் எந்தெந்த நோய்களை நீக்கவல்லன, அம் மூலிகைகளை

எவ்வாறு இனங்காண்பது என்பது கொண்ட ஒரு ஆய்ர்வேத மருத்துவ மூலிகைப் பட்டியலை தம்மிடம் பயின்ற மருத்துவ மாணவியரைக் கொண்டு எழுதுவித்ததாக எம்பெருமானின் பெண் சீடரான யாழ்பாண போதனா வைத்தியசாலை மருத்துவ தலைமைத் தாதியான செல்வி. ஸ்ரீரங்கநாயகி அவர்கள் நூலாசிரியர் இந் நூலை எழுதிக் கொண்டிருந்தபோது நினைவு படுத்தியுள்ளார்.

தமிழிலே முதன்முதலாக மொழியியல் பற்றிய கட்டுரையை வெளியிட்டவர் வெள்ளை அண்ணை மகரிசியே என்பதையும், அவர்தம் மொழியியல் எழுத்துப் பிரதிகள் இப்போதும் தம்மிடம் இருப்பதாகவும் யாழ் பல்கலைக்கழக முன்னாள் நூலகர் முருகவேள் அவர்கள் இதனைத் தம்மிடம் முன்னர் ஒருமுறை தெரிவித்ததாக 30.01.2011-ல் நல்லூர் திவ்ய

ஜீவன சங்க மண்டபத்தில் இந்நூலாசிரியரின் எம்பெருமான் 'பெருமைகூறும் திருவருள்வாசகம்' நூல்,பக்திப்பாமாலை இறுவட்டு வெளியீட்டுவிழா இடம் பெற்றபோது யாழ்ப்பாணம் பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலைப் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா அவர்கள் எமது இறை அவதாரத்தின் மகிமை உரைத்துச் செல்லும்போது குறிப்பிட்டுள்ளார்.

## இனிக்கும் யாப்பு



நூலாசிரியருடன் மகரிஷி

எம்பெருமனிடம் யாப்புப் பயின்று கவிஞர்கள் பலர் உருவாகி இருக்கின்றனர்.

அவர்களில் தற்போது கனடாவில் வாழும் சீடர் திருச்செல்வம் யாழப்பாணத்திலே பிரபல கவிஞராக இருந்தவர். நாடகம்,மேடைப்பேச்சிலும் வல்லவராவார். அவர், வெள்ளை அண்ணை மகரிஷியின் ஆச்சிரமத்தில் தங்கி இருந்து படித்து முன்னேறியவர்

எம்பிரான் சீடரான இந்நூலாசிரியர் செங்குந்த இந்துக் கல்லூரியில் பயின்று கொண்டிருந்த 1968-ம் வருடத்தில் கவிதை எழுதும் ஆவல் உந்தவே,யாப்பு பயிலாமலே சில கவிதைகளை எழுதி வாசித்துக் காட்டி வீட்டு, ''கவிதை எழுதும் யாப்பிலக்கணத்தை எனக்குச் சொல்லித்தருவீரகளா? வெள்ளை அண்ணை!'' எனக் கேட்டபோது, ''உனக்கு இயல்பிலே பாடும் வல்லமை உண்டு.. முதலிலே படித்துப் பரீட்சையில் தேறு பிள்ளாய்! எனக் கூறினார்.. இந்நூலாசிரியரும் பரீட்சையில் தேறியபின் வெள்ளை அண்ணை மகரிஷி பணிவிடையுடன் அவர்தம் நூலகத்திலே உள்ள அரிய நூல்களை வாசிப்பதிலும் சந்தேகம் எழும்போது குருவானவரிடம் கேட்டுத் தெளிவு பெறுவதிலும், எம்பெருமான் தமது கடிதங்கள்,ஆய்வுகளை

படுக்கையில் இருந்தபடி சொல்லிக்கொண்டுபோகும் போது அதனைக் கேட்டு எழுதுவதிலும், புதிதாக வரும் ஆய்வு நூல்களை படுக்கையில் இருக்கும் எம்பெருமானுக்கு வாசித்துக் காட்டுவதிலும்,யாழ்பாணம் றோயல் டிஸ்பென்சறி சென்று மருந்துகள் வாங்கித் தருவதுமென பெருமபொழுதை எம்பிரானுடனேயே கழித்தார். இதுதவிர, எம்பெருமான் இடையிடையே சுகவீனமுற்ற வேளை மானிப்பாயில் உள்ள கிறீன் ஞாபகார்த்த வைத்திய சாலையில் தங்கிச் சிகிச்சை பெறும்போது இந் நூலாசிரியரே அருகிருந்து தொண்டாற்றி அந்த அமைதிச்சூழலில் எம்பெருமான் அறிவியல் ஆன்மிக விடயங்களை ஆவலுடன் கேட்டுப் பிறவிப்பயன் துய்த்துள்ளார்.

ஒருநாள் நள்ளிரவு வரை எம்பிரான் வெள்ளை அண்ணை மகரிஷி தமது நல்லூர் சபாமாளிகையின் சயனஅறையில் உள்ள மேசை விளக்கின்முன் ஏதோ எழுதிக் கொண்டு இருந்ததை சீடரான இந்த நூலாசிரியர் அவதானித்தார். மறுநாள் காலை நூலாசிரியரிடம் தாம் எழுதியதைத் தந்தார். எழுதி முடித்த நேரம் நள்ளிரவு 12-மணி என அதிலே இடப்பெற்றிருந்தது. ''இனிக்கும் யாப்பு'' என்ற தலைப்பிலே கவிதை எழுதுவதற்தான எளிய இலக்கண நூலாக அது ஆக்கப்பெற்றிருந்தது. ”எனது பிள்ளை ஜெயக்குமார் வேண்டிக்கொண்டதற்கமைய உருவான இந்நூல் 'இனிக்கும்யாப்பு' என வழங்கப்படுவதாக!” எனப் பொருள்படும் கவிதை அதிலே காணப்பட்டது. அந்த நூலிலே வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, விருத்தம்,ஆசிரியப்பா ஆகியவற்றிற்கு இலக்கணத்தை மிகவும் எளிமையாகவும் சுருக்கமாகவும், எழுதி இருந்தார். உதாரணம் காண்பிக்கும் செய்யுள்களில் தமது சீடரான நூலாசிரியரின் ஜெயக்குமார் என்ற பெயர் கொண்டமைந்தவையாக அவை காணப்பெற்றன.

அது கண்ட சீடரான இந்நூலாசிரியர் ”குருவே வெள்ளை அண்ணா!” என ஆனந்தக் கண்ணீர் சொரிய அவர்தம் திருப்பாதங்களில் வீழ்ந்து சமஸ்கரித்தார்.

எமது இறையவர் அருளிய இனிக்கும் யாப்பினை அங்கே குருவின் இல்லம் வரும் சில கல்லூரி மாணவர்கள் பிரதி எடுத்துச் செல்ல நூலாசிரியர் வழங்கினார்.

வெள்ளை அண்ணை மகரிஷியிடம் வரும் நூலாசிரியருக்கும் நண்பரான ஒருவர், தமக்கும் அவ்வாறே யாப்பிலக்கணம் எழுதித் தரும்படி வெள்ளை அண்ணை மகரிஷியிடம் கேட்டார். ''ஜெயக்குமாரிடம் எழுதிக் கொடுத்துள்ளேன். அதன்படி எழுதிப்பழகு பிள்ளாய்!'' என எம்பெருமானும் பணித்தார். நண்பரும் நூலாசிரியரிடம் யாப்பிலக்கணத்தைப் பெற்று தமது வீடுகொண்டு சென்றார்..

நீண்டநாள் ஆகியும் அது திரும்பி வரவில்லை. அதனைத் திருப்பித் தரும்படி கேட்க ஒருநாள் அந்த நண்பர் வீட்டிற்குச் சென்ற ஆசிரியருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. எம்பெருமான் எழுதிய இனிக்கும் யாப்பின் ஒரு பக்கம் அவர்கள் வீட்டு வெளி வராந்தா வெற்று நிலத்திலே நனைந்து அழுக்குப்படிந்து கிடந்தது. ''இது சரியில்லாத வேலை எனக் கூறி நனைந்த அந்தத் தாளை எடுத்துச் சென்று நடந்தன அனைத்தையும் கண்கலங்க ஆசிரியர் வெள்ளை அண்ணை மகரிஷியிடம் விபரிக்கவே "உனக்குத் தந்ததை பாதுகாக்காதது உனது தப்பு" என்றார்.. பின்னர் எம்பெருமான், '' வருந்தாதே பிள்ளாய் எதிர்காலத்தே உனக்கு சகல கலைகளும் கைவரும்.. உலகம் போற்ற ஓங்கி நிற்பாய்!'' என்று கூறிக்கொண்டே சீடரான இந்நூலாசிரியர் சிரசிலே தமது திருக்கரத்தை வைத்து '' கவி சொல்லவல்ல நல்வித்தையும் தந்து.. எனவரும் சரஸ்வதி தோத்திரம் பாடி ஆசி வழங்கினார்..

எம்பெருமான் தம்மை நாடிவரும் கல்விமான்களிடம் " பிள்ளாய் இவர் எனது மருமகன் " என நூலாசிரியரை அறிமுகம் செய்வார்.

ஒருமுறை தமது மொழியியல் ஆய்விற்காக தந்தை சங்கரப்பிள்ளை! உடன்வர நூலாசிரியரின் துணையுடன்

வாடகைமோட்டார் வாகனத்திலே கண்டிநகரம் சென்றார். எம்பெருமானின் அருகே இருந்து இயற்கைக் காட்சிகளை அனுபவித்த ஆசிரியர் உடனுக்குடனே சில கவிதைகளை யாத்து வெள்ளை அண்ணைமகரிஷிக்குப் பாடிக் காட்டினார். எம் பெருமானும் ஆனந்தமாக அதனை உள்வாங்கினார். கண்டிநகரை அடைய மாலைப் பொழுது ஆனது. கண்டிமாநகரின் அந்த மாலை நேரத்து அழகை நூல் ஆசிரியர், "மலையிலும் பாதை மடுவிலும் பாதை மத்தியிலிருப்பதும் பெரும்பாதை, கலைஞர்கள் உள்ளம் கவினுறச் செய்யும் கண்டிமா நகரத்து எழிற்பாதை.. என்பதாகத் தொடர்ந்து மலைத்திடும் வண்ணம் வண்டிகள் செல்லும் மத்திய நாட்டு வளைபாதை "என்பாதாகப் பாடி முடித்தார்.

எம்பிரானும் மீள அதனை இராகத்துடன் பாடியது ஆசிரியரால் மறக்க முடியாத அனுபவமாகும்.

பயணித்து வந்த மோட்டார் வண்டி, வெள்ளை அண்ணை மகரிஷியின் அருமை மாணவரும் ஊரிலே அயலவருமான சிவனருட்செல்வர் ஐ.அரியரெத்தினம் (எம்பெருமான் பெருமை கூறும் இந்த நூலினை அணிசெய்பவர்களில் ஒருவர்) அவர்களது இல்லத்துடன் கூடிய அரியரத்தினம அன்ட்கோ தாபனம் முன் நின்றது.அரியரத்தினம் அவர்கள் குடும்பத்தினர் ஆவலுடன் வரவேற்றனர். அன்றிரவு அங்கேயே தங்கினர். தந்தையார் சங்கரப்பிள்ளை அவர்கள் வந்த வாகனத்திலேயே மறுநாள் திரும்பிவிட்டார்.

அரியரெத்தினம் அவர்கள் எம்பெருமான் கேட்டுக்கொண்டபடி தமது வாகனத்திலே எம்பெருமானை பேராதனை பல்கலைக்கழகம் அழைத்துச் சென்றார். கூடவே நூலாசிரியரும் சென்றார். எம்பெருமானது அன்புக்குப் பாத்திரமான பல்கலைக்கழக நூலகர் முருகவேள் அவர்களது விடுதியிலே எம்பெருமான் வெள்ளை அண்ணை அவர்கள் சில வாரம் தங்கி மொழியியல் ஆய்வுகளை மேற்கொண்டார்.

பல்கலைக் கழகத்தில் சந்தித்த தமது மாணவரான கலையரசி வேந்தனார்,மற்றும் விரிவுரையாளர்கள், மாணவருக்கு நூலாசிரியரை தமது மருமகன் எனக் கூறிநின்றார். அங்குள்ள குறிஞ்சிக்குமரன்கோயிலில் இடம்பெற்ற அப்பர் சுவாமிகள் விழாவில் எம்பெருமானைப் பேசப்பணிக்கும்படி விழாவுக்குத் தலைமை ஏற்ற பேராசிரியர் சு.வித்தியானந்தனிடம் இந்துமாமன்ற கணக்கு பரிசோதகரான திரு.அரியரெத்தினம் அவர்களும் மற்றும் குருவிடம் பயின்று பட்டப்படிப்பு மேற்கொண்டிருந்த மாணவர்களும் வேண்டிநின்றனர். அனைவரும் கேட்டுக்கொண்டதால் பேராசிரியர் வித்தியானந்தனும் ”அப்பர் சுவாமிகள் பற்றி வெள்ளை அண்ணை மகரிஷி சொற்பொழிவாற்றுவார்!” என அவையினருக்கு அறிவித்தார்.

நூலாசிரியரும் எம்பெருமானைக் கைத்தாங்கலாக அந்த அவை முன் அழைத்துச் சென்றார்.

அறிவியல் விஞ்ஞான தத்துவங்களுடன் அப்பர் சுவாமிகளது பக்தி அனுபவங்களை இணைத்து எம்பெருமான் வழங்கிய அருஞ்சொற்பொழிவால் அனைவரும் தம்மை மறந்தனர்.

விழாத் தலைமை ஏற்ற பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களுக்கு எம்பெருமான் வெள்ளை அண்ணை மகரிஷி ” இவர் எனது மருமகன்” எனக் கூறி இந்நூலாசிரியரை அறிமுகம் செய்து நிற்க பேராசிரியர் வித்தியானந்தனும் அங்கே தலையசைத்துப் புன்னகைத்தபடி நின்றார்.

மேற்படி சம்பவம் நீண்ட காலத்தின் பின் நினைவு கூரப்பெற்றது. 20.05.2005..ல் இந்த நூலாசிரியரின் உலகப் புகழபெற்ற சமரசபூமி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரங்கேற்றங் கண்டபோது, அதனை வெளியிட்டுவைத்தவர் கலைப்பீடாதிபதி.பேராசிரியர்இரா.சிவச்சந்திரன் அவர்கள். வேலணையைச் சேர்ந்தவர். நூலின் சிறப்பினை எடுத்துரைத்தபோது,சமரசபூமி முன்னுரையிலே கண்டபடி மேற்படி பேராதனைச் சம்பவங்களையும் எடுத்துரைத்தார். நல்லூர் செங்குந்த இந்துக்கல்லூரியின் பழைய மாணவரான தாம்

அவ்வூரில் வாழ்ந்த எம்பெருமான் வெள்ளை அண்ணை மகரிஷியின் அற்புதங்களை தமது மாணவப் பருவத்தில் இருந்தே அறிந்து வந்திருப்பதாகவும் மகரிஷியுடன் பழகிய அனுபவம் தமக்கு உண்டெனவும் மேற்படி யாழ் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற நூல் அறிமுக விழாவிலே கூறி நின்றார்.

மாணவப் பருவத்தில் எம்பெருமானுடன் உறவு பூண்ட இப் பேராசிரியரே நல்லூர் செங்குந்த இந்துக்கல்லூரியில் இருந்து பல்கலைக்கழகத் தெரிவாகிச் சென்றபோது, தாம் பயின்ற கல்லூரியை மறவாதவராய் முதன்முதலாக கல்லூரி மாணவரின் குடிநீர் வசதிக்காக நீரப் பம்பியை அனபளிப்புச் செய்தவராவார். எம்பிரான் அன்பிற்குப் பாத்திரமான கலைப்பீடாதிபதி மேற்படி சமரசபூமி நூல் அறிமுகிவிழாவில் ஆற்றிய வாழ்த்துரை நூலாசிரியரின் ரிஷிமூலச் சாட்சியமாக அமைந்தது எம்பெருமான் திருவருள் மகிமையினாலேயே..

மேற்படி பல்கலைக் கழக சமரசபூமி நூல் அறிமுக விழாவில் அறிமுக உரை ஆற்றிய இன்றைய இந்துநாகரிகத்துறைப் பேராசிரியர் சித்தாந்த ரத்தினம் ப.வேதநாதன் அவர்கள், (எம்பெருமான் பற்றிய இந்த நூலுக்கு அணிசேரத்திருப்பவர்கள்)
"இராமச்சந்திர மகரிஷியின் அருள்பார்வை பெற்றதனாலேயே இத்தகைய உலகப்புகழ் பெற்ற ஒப்பற்ற நூலை அவரது சீடரான இந்த நூலாசிரியர் எமக்கு உருவாக்கித் தந்துள்ளார்" என உரைபகர்ந்துள்ளார்.

## அன்னையார் மறைந்தபோது

எம்பிரானைக் கண்ணேபோல் காத்து வந்த அவர்தம் பூலோக அன்னையார் மீனாட்சி அம்மாள் இவ்வுலகைவிட்டு மறைந்த காலப்பகுதி அது. அன்னையாரை ஊரவர்,உறவினர் அனைவரும் 'குட்டிமாமி' என அழைக்க இந்நூலாசிரியரும் அவ்விதமே அழைத்து வந்தவர். அத்தகைய தமது பூலோக அன்னையாரை மறந்துவிடாது இந்நூலாசிரியரே உறவு

சேர்ப்பதாக ஒருநாள் எம்பெருமான் நூலாசிரியருகாக ஒரு கவிதை பாடினார். "இறந்த குட்டி மாமியை மறந்திடாமல் செய்யவே பிறந்துவந்த ஜெயக்குமார் .." என வருவதே அப்பாடல்.

கொழும்புத்துறை பிரதம சீடர் செல்வரெத்தினம் அடிகளார் நூலாசிரியருடன் பேசும்போது 'ஜெயக்குமார், தம்மை ஒரு தாய்போல கவனிப்பதாக வெள்ளை அண்ணை மகரிஷி அடிக்கடி கூறுவார்.' என இன்றும் கூறி வருகின்றார். நூலசிரியர் திருக்கோணமலையில் ஆசிரியராகப் பணிபுரிந்தபோது அடிக்கடி யாழ்பாணம் வந்து செல்வார்.

1977..களில் நூலாசிரியர் திருக்கோணமலை சென்று அங்கே சில நாட்கள் தங்கி இருந்தபோது, எம்பெருமானிடம் இருந்து ஒரு கடிதம் வந்தது... அதிலே, "பிள்ளாய்! உனக்கு எல்லா நலனும் கைகூடும் மனம் தளராது உடன் வருக!" என எழுதி இருந்தார். அதுவே எம்பெருமான் எழுதிய இறுதிக் கடிதம் என்பது அப்போது நூலாசிரியருக்குத் தெரியவில்லை. அங்கே அப்போது யாழ்ப்பாணத்தில் எம்பெருமான் சுகயீனமுற்று படுக்கையிலே இருந்தபோது அவரைப் பராமரிக்கப் பலபேர் இருந்தும் தமது மானிட சரீரத்தை உதறவேண்டிய அந்த இறுதிக் காலத்தில் இந்த நூலாசிரியர் தமது அருகே இருப்பதையே எம்பெருமான் விரும்பியுள்ளமை தான் செய்த பூர்வ புண்ணியமே என நூலசரியர் இன்றும் எண்ணும்போதும் புளகிதமாகி ஆனந்தக் கண்ணீர் சிந்துகின்றார்.

எம் பெருமானால் உருவாக்கப்பெற்ற சீடர் திருச்செல்வம் (கனடாவில் வாழ்பவர்) அவர்களின் தாயார் பின்னைய நாட்களில் வெள்ளை அண்ணை மகரிஷிக்கு உள்ளன்போடு மதிய உணவினைத் தயாரித்து அனுப்பு வார்கள். அவர்கள் பற்றியும் மகரிஷி தமது சீடரான இந் நூலாசிரியருக் குத் தெரிவித்துள்ளதோடு ஒருமுறை அவரகளுக்குக் கடிதமும் வரைந்துள்ளார். தமது அருள்பார்வைால் அவர்களுக்கு நேரவிருந்த பலவகை இடர்பாடுகளை நீக்கி அபயமளித்துள்ளார்.

# மகரிஷி தந்த ஒரு நெறி!

தமிழர் ஒற்றுமையாக ஒரு தலைமைக்குக் கீழ் அமையாதவர்கள் என்பதால் இளைய சந்ததியிடம் பிரச்னையான அரசியலுக்குள் நுழைந்து தமது எதிர்காலத்தை வீணாக்கக் கூடாது என எம்பெருமான் அன்று கூறி நின்றார். இந்நூலாசிரியரும் ஆரம்பத்தில் தமிழர்தம் கல்வித் தரப்படுத்தலுக்கு எதிராக தோன்றிய 'தமிழ் மாணவர் பேரவை'யில் அங்கம் வகித்தவர். எம்பெருமான் அந்தக் காலப்பகுதியில் எதிர்காலத்தில் தமிழரிடை தோன்றப்போகும் அவலமான நிலைப்பாட்டைத் தமதுசீடரான நூலாசிரியருக்கு உணர்த்தி ஆன்மிக ஆன்மநேய பாடபோதனை மூலம் தடுத்தாட்கொண்டார். பின்னைய காலப்பகுதியில் நடந்து முடிந்த அவலங்கள்,அழிவுகள் அனைத்தும் எம்பிரான் தமது சீடருக்கு தீர்க்கதரிசனமாய் முன்னர் உணர்த்திக் கொண்டவை... இதனை அன்றிலிருந்து இன்றுவரை நூலாசிரியரின் ஆன்மிக ஆன்மநேயம் பொதிந்தவையாய் தொடரும் எழுத்தாக்கங்களைப் படிக்கும் வாசகர்கள் அனைவருமே நன்குணர்வர்.

சுயநலமான, ஒருவனை ஒருவன் குதறும் வேதனை நிரம்பிய இந்த உலகத்தில், சாதி,மத,இன,மொழி வெறியைத் தூண்டி மக்களைப் பலிக் கடாக்கள் ஆக்குகின்ற பாவகரமான இந்த உலகத்தில், இப்படி ஒரு மகானை உலகம் எங்கு தேடினாலும் கண்டு கொள்ள முடியாதே.

குருவானவரின் அற்புத அறிவாற்றல், ஆற்றிய அற்புதங்கள் அனைத்துமே அந்த நாட்களில் இந்து, கிறித்தவம்,இஸ்லாமியம், பௌத்தம் எனஅமைந்த அனைத்து மதத்தவர்களையுமே ஈர்த்தது பற்றி ஏலவே கண்டு கொண்டோம். அனைவருமே இறையம்சம் என எம்பெருமானைப் போற்றி வணங்கியதையும் கண்டு கொண்டோம். அத்தகைய எம்பிரான் ஒருமுறை தமது சீடர்களிடம் தமிழர் தற்பெருமை, பழம்பெருமை

பேசிக் கட்சி கட்டலாகாது. தமது பலவீனப் போக்குகளில் இருந்து விடுபட வேண்டும் என உரைத்துள்ளார்.

பூர்விக காலத்தில் இருந்தே மூவேந்தராய் பிளவுண்டு போரிட்டவர்கள் தமிழர். சுயநலமான அரசியல் பின்னலால் அவர்கள் வைதிக,அவைதிக அணிதாங்கி போரிட்டமை பறறியும் பிரிவினை எய்தியமை பற்றியும் சீடருக்கு எடுத்துரைத்து அவைதிகம், வைதிகம் பேதமை எனவும், அனைத்தும் சிவமே எனவும், அனைத்து மதங்களையும் நேசிக்கும்படியும் ஒரே இறைவனே காலத்திற்குக்காலம் நாட்டிற்கு நாடு வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டு வந்திருப்பதாகவும் கூறி சமரசசிவவழிபாடே தமிழர் அனைவரையும் ஒருங்கிணைக்கும் எனவும் அன்றே பெம்மான் கூறினார். பக்குவத்திற்கு ஏற்றவாறு தமது சீடர்களுக்கும் அவ்வாறே போதகம் புரிந்து வந்துள்ளார்.

## சமண முனிவராக முன் பிறவி

வெள்ளை அண்ணைமகரிஷி 1974.ல் மானிப்பாய் கிறீன் மருத்துவ மனையில் சிகிச்சைக்காகத் தங்கி இருந்தபோது அவருக்கு பணிவிடை செய்து கொண்டிருந்த இந்த நூலாசிரியரிடம் சீவகசிந்தாமணி என்ற தமிழ்க் காப்பியம் செய்த சமண முனிவரான திருத்தக்கதேவராக தமது முன்பிறவி ஒன்று அமைந்தது என்ற இரகசியத்தை வெளியிட்டார். சமணர்களை சைவர்கள் பழிப்பது எல்லாம் அறியாமை எனவும், சமணமும் சிவமதம், சைவமும் சிவமதம் எனவும் தெரிவித்தார்.

ரான ஆசிரியரிடம்,தாம் வெளியிட்ட தமது முன்னைய
ணப் பிறப்புப் பற்றிய ரகசியத்தை அப்போதைக்கு யாருக்குமே
ரிவிக்கவேண்டாம் எனத் தெரிவித்தார்.

இவ்வாறு இந்நூலாசிரியருக்கு தமது முன்பிறவியை
வளிப்படுத்திய மகரிஷி தாம் மறையுமுன் சமண முனிவரான
ருத்தக்கதேவர் தமது முன்னைய அவதாரம் என்பதை
காழும்புத்துறை சுவாமியார் வீதியில் எம்பெருமானுக்கு ஆலயம்
ழுப்பிய செல்வரெத்தினம் அடிகளார் உள்ளிட்ட தமது ஏனைய
டர்கள், அன்பர்கள் அருளாளர்கள் அனைவருக்குமே
ரிவித்தார். இது பற்றி கத்தோலிக்க திருத்தந்தை ஜெயசீலன்
டிகளார் இந்த நூலுக்கு அணிசேர்க்கத் தந்த உரையிலே
தனைக் குறிப்பிட்டுள்ளார். ”ஒருவருக்கும் சொல்லவேண்டாம்”
ன்ற எம்பிரான் பின்னர் அதனை ஏன் அனைவருக்கும
வளிப்படுத்தினார்' என இந்த நூலலாசிரியருக்கு அப்போது
ளங்கவில்லை.

இன்றைய நாட்களில் எம்பெருமானின் மகிமை உரைக்கும்
ந்நூலைப் படைத்துக் கொண்டிருக்கும்போதே நூலுக்குச்
ட்சியம் வேண்டி யாரும் கொச்சைப் படுத்தாதவாறு அவ்வாறு
னைய சீடர்கள்,அன்பர்களுக்கு எம்பெருமான் தமது பிறப்பு
ரகசியத்தை பின்னர் வெளியிட்டு நின்றது.

லக்கமாகி எனனே எம்பெருமான் கருணை என நூலசிரிருக்கு
மய் சிலிர்க்கவே செய்கின்றது.

வளர்ச்சி பெறாத பிரிவினா பேதமுரைக்கும் வைதிக
முதாயத்தில் அதனை அனைவருக்கும் வெளிப்படுத்த உரிய
ரு நேரத்தை எம்பெருமான் எதிர்பார்த்துள்ளார். தமது
டர்களிடம் சமரசசிவமார்க்கத்தை முன்னெடுக்க வேண்டி தமிழர்
ண்மை நிலைப்பாட்டை தமது முன்பிறவி வழி அறியத்
ந்துள்ளார் என்பது அதுவழி துலக்கமாகின்றது.

இந்நூலாசிரியர் பின்நாளில் சமணர்தம் அற நூல்களைப் பயின்றபோது அற்புத மகரிஷியின் வாழ்வுமுறைமை, தொண்டுகள், சமரசசிந்தை அனைத்தும் சமணர்தம் தூய நெறி போல்வதாகவே இனங்கண்டுள்ளார்

பாடசாலையைப் பள்ளிக்கூடம் என அழைக்கும் முறைமை சமணரிடம் இருந்தே பெற்றதாகும். சமணப்பள்ளி என்பது சமணத் துறவியர் தாம் துயில் கொள்ளும் மலைக்குகைப் படுக்கையிலேயே மாணவர் அமர்ந்து கல்வி பயில கல்லாசன வசதிகளை ஏற்படுத்தி வைத்திருந்ததில் இருந்து பிறந்ததாகும். எம்பெருமான் சயனகூடமே மாணவருக்குக் கல்விபோதிக்கும் பள்ளியாகும்.

சமணர்கள் சமத்துவ சிந்தனை கொண்டு வேற்றுமை பாராது அனைவருக்கும் பாடபோதனை புரிந்தவர்கள். அற நூல்கள் பல படைத்தவர்கள். உயிரக்கொலைக்கு அஞ்சுபவர்கள். அனைத்து உயிரையும் நேசிப்பவர்கள். மருத்துவமூலிகைகளால் நோய்களைக் குணமாக்கியவர்கள்.

எம்பெருமான் வெள்ளை அண்ணை மகரிஷியிதனது வாழ்வு முறைமையும் முன்னைய சமணரகளின் வாழ்வு முறைமையை ஒத்ததே என்பதை அனைவரும் அறிவர்.

திகம்பர சமணர்கள் ஆகாயம்,பாதாளம் உள்ளிட்ட பத்துத் திக்குகளையும் ஆடையாக பூணுபவர்கள். இப்பூமியில் அவர்கள் நிருவாணிகளாகவே நடமாடித்திரிவார்கள்.. சுவேதம்பர சமணர்களோ வெள்ளாடை தரிப்பார்கள்.. எம்பெருமான் தாம் வாழ்ந்த சபாமாளிகை இல்லத்திலே இருக்கும் சிலவேளைகளில் ஆடை தரியாது நிருவாணியாக இருப்பதும், வெளியே செல்லும்போது வெள்ளாடை தரிப்பதும் வழக்கம்..

அத்தகைய எம்பெருமான் தமது முன்னைய ஒரு பிறப்பாக சீவக சிந்தாமணி என்ற தமிழக் காப்பியம் செய்த திகம்பர

சமணரான திருக்க தேவர் என்பதை தமது சீடருக்கு உரைத்துள்ளமை பற்றி ஏலவே இந்நூலிலே கூறப்பட்டுள்ளது.

இன்றைய மேற்குலகம் தமிழர்தம் தலை சிறந்த தமிழச் சமண காப்பியமான திருத்தக்க தேவரின் சீவக சிந்தாமணியை தங்கள் மொழிகளிலே மொழிபெயர்த்து உயரிய பொக்கிசம் எனக் கொண்டாடுகின்றது. அந்த நூல் படித்த பிரபல்யம் மிக்க ஐரோப்பிய அறிஞரான பெர்னாட்ஷோ "எனக்கு மறுபிறப்பு என்று ஒன்று இருந்தால் சமணராகவே பிறக்க ஆசைப்படுகிறேன்" எனத் தமது ஆதங்கத்தை வெளியிட்டிருந்தமையை மேலை நாட்டு நூல்கள் தெரிவிக்கின்றன. அத்தகைய சமணத் தமிழ்க் காப்பியத்தால் தமிழர் அனைவரும் பெருமைப்பட்டே ஆக வேண்டும். ஐம்பெருங்காப்பியங்கள் எனத் தமிழர் கொண்டாடும் சிறந்த இலக்கிய நூல்கள் அனைத்தும் அவைதிகம் எனக் கூறப்படும் சமண, பௌத்த மதத்தினராய் தமிழர் முன்னர் இருந்தபோதே படைக்கப்பெற்றவை.வைதிகம் அவைதிகம் என்பது பேதமை எனவும் அனைத்தும் சிவமே எனவும் அவை ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு பெயர் பெறுவதே வழக்கம் எனவும் எம்பெருமான் உரைத்தமை இந்நூலிலே ஏலவே உரைக்கப்பெற்றுள்ளது.

திகம்பர சமண முனிவரான திருத்தக்க தேவர் சமணக்கடவுளாகக் கூறப்படும் அருகர் என்பதே சிவன் என்பதாக, ''துன்பத்தைச் சுரக்குநான்கு கதியெனும் தொழுவிற் சேர்ந்து -நின்றபற்றார்வ நீக்கி நிருமலன் பாதஞ்சேரின் அன்புவிற்றுண்டு போகிச் சிவகதி அடையலாமே'' எனத் தமது சீவகசிந்தாமணி சமண காப்பியத்திலே(பாடல் 3105) குறிப்பிட்டுள்ளார்.. தேவார முதலியான அப்பர் சுவாமிகள் எனும் திருநாவுக்கரசு நாயனார் சமணம் இருந்து சைவம் மீண்டவராக வைதிக சைவர்வழி கூறப்படுகின்றது.

வீரட்டானேஸ்வரம் எனும் சிவத்தலம் திருநாவுக்கரசருடன் தொடர்புபட்டது. இங்குள்ள சிவன் மன்மதனை எரித்தவர்.அவரது

தேவி பெயர் ஞானாம்பிகை ஆகும் என அதன் தலவரலாறு தெரிவிக்கின்றது.

இதனை தமிழர்தம் ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான சமண முனிவர் இளங்கோவடிகள் படைத்த சிலப்பதிகார காப்பியத்தின் நாடுகாண் காதையில் (194....207) சமணர்களின் அருகக் கடவுள் காமனை(மன்மதன்) வென்றவர்.. அவர் ஒலிப்பதோ ஞானபாதமாகிய திருமொழி என உரைக்கப்பட்டுள்ளதுடன் ஒப்புமை காணலாம்.

சமணர்களது அருகரே சிவன் என்பதாகவும் துறவற சமணர்தம் சிவவழிபாடே பின்னர் வீரட்டானேஸ்வரர் என்பதாக சமணத்தில் இருந்து மீண்டவராகக் கூறப்படும் திருநாவுக்கரசுநாயனாரால் பின்னர் வைதிக சைவர் வழி இல்லறம் சார் சிவழிபாட்டு மாரக்கமாக உள்வாங்கப்பட்டிருக்கின்றதெனவும் தெளியலாம்..

இவ்வாறு இந்நூலாசிரியரால் திருவருள்வாசகம் என்ற நூலிலே முன்வைக்கப்பட்டிருந்த புதிய ஆய்வினை தமிழகத்தின் பேராசிரியர்கள் பலர் ஒப்புக்கொண்டுள்ளனர்.

மேலும், பூர்விக ஈழத்தில் சமணமார்க்கமே வேரூன்றி நின்றது.

அதுவழியேதான் ஈழத்தின் சிவவழிபாடு ஓங்கி நின்றது. யாபன என்பது சிவமதம் சார்ந்த சமணப் பிரிவே. அது யாபனியஸ் எனவும் வழங்கப்படும். அதுவழியேதான் வட ஈழத்திற்கு யாழ்ப்பாணம் என்ற பெயர் பிறந்திருக்கின்றது.

இவ்வாறான புதிய ஆய்வொன்றையும் இந்நூலசிரியர் ஆதாரத்துடன் தமது திருவருள்வாசகம் (பக்.253) என்ற நூலிலே வெளியிட்டுள்ளார். வட நாட்டைச் சேர்ந்த உமாஸ்வதி அல்லது உமாசுவாமிகள் என அழைக்கப்பெற்ற சிவ நெறி தாங்கிய

கிமு. 03 மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த சமணமுனிவர் வடமொழியில் வகுத்த தத்துவார்த்த சூத்திரத்தை அடிப்படையாக வைத்து எழுந்ததே யாபனியஸ் எனும் சமணப் பிரிவாகும். ஆசிரியர் மேற்படி நூலிலே குறிப்பிட்டுள்ளார். (வட மொழியில் எழுந்த உமாஸ்வதியின் சமண தத்துவார்த்த சூத்திரமே தமிழிலே உண்மைநெறி விள்க்கமாக வைதிக சைவர்வழி தில்லைவாழ் அந்தணர் எனக் கூறப்படும் கிபி 13..ம் நூற்றாண்டு உமாபதி சிவாச்சாரியார் எனப் பெயர் தாங்கிய சைவரால் உருவாக்கப்பட்டிருக்கலாம். அத் தில்லைவாழ அந்தணருக்கு வழங்கிய உமாபதி என்பது வடநாட்டு சமண முனிவரான உமாஸ்வதியில் இருந்து வைதிகவழி உருமாறிய புனைபெயராக அமைந்திருக்கலாம். என்பதையும் இந்த நூலாசரியர் தமது ஆய்விலே குறிப்பிட்டுள்ளார்.

இதுதவிர், சாவகர் என்பது உலக நோன்பிகளான இல்லற சமணர்களைக் குறிக்கும். இதனை சமணகாப்பியமான சிலப்பதிகாரம் குறிப்பிடும். யாழ்ப்பாணத்தில் சாவகச்சேரி என்பது சமணர்தம் புனிதப் பகுதியாக முன்னர் இருந்திருப்பதையும் மேற்படி தமது ஆய்விலே ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

இராவணேஸ்வரன்,இராமேஸ்வரம் என்பதாக இராம, இராவண அணியைச் சேர்ந்த சிவ மரபுப் போராட்டம் பற்றியும், சமணக்கடவுளான அருகர் அசோக மரத்தின்கீழ அமர்பவர் என்பதால்,சீதையை அசோக வனத்திலே சிறை வைத்தல் என்பது சிவபக்தனான இராவணனது ஈழ பூமியின் தனித்துவமான யாகப்பலியற்ற ஆசார சமணம்சார் சிவவழிபாட்டு டனான அன்னைய வைதிகர்தம் போராட்டமாகலாம் என்பதையும் இந்நூலாசிரியர் தமது திருவருள்வாசகத்தில் ஆய்வு செய்துள்ளார்.

## ஓருவனே தேவன்

எம்பெருமான் இராமச் சந்திர மகரிஷி வெ்வவேறு காலகட்டங்களில் பத்து சமரச சிவமகாவாக்கியங்களை

அருளியுள்ளார்.. அப் பத்தும் 'ஒருவனே இறைவன்' என்பதையும் மதப்போராட்டங்கள் மனித குலத்தின் அறியாமை என்பதையும் உணர்த்துவன..

மேற்படி எம்பெருமான் எமது இராமச் சந்திர மகரிஷி அன்று அருளி நின்ற சமரசசிவமகாவாக்கியங்கள் பத்தும் வருமாறு...

1. மார்க்கங்களை இறைவன் படைக்கின்றான்,.மனிதனோ மார்க்கங்களைக் காப்பதற்கென மதங்களைப் படைக்கின்றான்.

2. மார்க்கத்தைக் காப்பதில் கவனம் ஊன்றும்போது மறைபொருளைத் தேடும் பயணம் தேக்கமடைகின்றது... இந்தத் தேக்கத்தைப் போக்க இறைவன் புதிய மாரக்கத்தைப் படைக்கின்றான்.

3. பழையதைக் காப்போர் மத்தியில் புதியதொன்று புகும்போது மோதல் ஏற்படுதல் இயல்பே..

4.மோதலில் வெற்றி பெற்றவர் தோல்வி அடைந்தோரின் பொருட்செல்வத்தையும்,அருட்செல்வத்தையும் தமதாக்கிக் கொள்வது வழக்கமே..

5.ஒன்றிலிருந்து பலவும், பலவிலிருந்து ஒன்றும் ஆவது பரிணாம வளர்ச்சியின் இரு கிளைகள் ஆகும்..

6. இறைவன், இயற்கை,சமுகம்,கல்வி,சிந்தனை,உறுதி,முயற்சி ஆகியன மனிதனை வழிநடத்தும் ஏழு காரணிகள் ஆகும்.

7. மனிதனுக்கு இறைவன் வழங்கிய எல்லாவற்றையும் பயன்படுத்தி மனிதன் பேதத்தை வளர்த்தானேயன்றி ஒருமைப்பாட்டை உருவாக்கவில்லை.

8. பேதங்களைத் தோற்றுவிக்கும் காரணிகளை விலக்கி மனிதனை நோக்கினால் எல்லா மனிதரும், மனிதம் எனும் ஒரே வித்தில் முளைத்த செடிகளே என அறியலாம்.

9. ஞானிகள் மனிதத்தைத் தாண்டி மெய்யை உணர்ந்தவர்கள்.

10. சொல்லையும் செயலையும் விலக்கி மனிதன் தன்னுடைய இலக்கு மரணத்தைத் தாண்டிய மெய்யே என உணரும்போது தானே உருவாகும் ஒரு நிலைதான் ஒருமை... ஒற்றுமை... சமரசம்..

பேதமை நீங்கப் பெற்ற புனித சிந்தனையாளர்களை உருவாக்கி அதுவழி உலக ஒருங்கிணைப்பை வகுக்கவே ஈழ நல்லூரில் அவதாரம் புரிந்த எமது இறையோன் வெள்ளை அண்ணை மகரிஷி அனைத்து மார்க்கங்களையும் பயிலும்படியாகவும்,அனைவரையும் நேசிக்கும்படியாகவும் தமது சீடருக்கு அன்றே கூறி நின்றார்.. அதன் அர்த்தம் அறிவியல், ரீதியாகவும், அனுபவ ரீதியாகவும் இன்றைய காலப் பகுதியிலேயே விளக்கங் காண முடிகின்றது.

## எம்பிரானும் யோக சுவாமிகளும்



யோக சுவாமிகள்

யாழ்ப்பாணத்தில் உள்ள, அறிவும் ஆன்மிகமும் கொண்ட மக்கள் வாழும் சிறந்த ஊர்களில் கொழும்புத்துறை மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது.

இக் கொழும்புத்துறையின் மகிமை பற்றித் தமிழகத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற அறிஞரும் பழம்பெரும் ஏடுகளைப் பதிப்பித்தவர் என்ற பெருமை பெற்றவருமான டாக்டர்.உ.வே.சாமிநாதையர் அவர்கள் 1915-ம் ஆண்டிலே ஒரு ஆன்மிக நூலை வெளியிட்டிருந்ததாக அறிய முடிகின்றது.

அத்தகைய பிரசித்தி பெற்ற கொழும்புத்துறைப் பதியில் வாழ்ந்து அடியவர்களுக்கு அருளிய யோக சுவாமிகள் எனும் சித்தர் நல்லூரில் எமது இறையோன் வாழ்ந்த சபாமாளிகை வந்து சிறுவயதினராக இருந்த எம்பிரானை தோழிலே தூக்கி வைத்து ராமச்சந்திரா! எந்தன் ராமச்சந்திரா! எனக் காவடி ஆடுவாராம்.

கொழும்புத்துறையிருந்து நல்லூர் வரும் யோக சுவாமிகள் பின்னைய நாட்களில் பெரு ஞானியான எம்பெருமான் சயனஅறைக்குள் நுழைந்து தனிமையில் பேசித் திரும்புவார். இவை எல்லாமே எமது ஞானிகளுக்கும், சித்தர்களுக்கும் அவதார புருஷர்களுக்குமே ஆன எம்போன்ற சாமானியரால் புரிந்து கொள்ள முடியாத பரம ரகசியம்.

யோகசுவாமிகள் தம்மிடம் வரும் அடியவர்களில் சிலரை கண்டபடி வைது துரத்துவதுண்டு. அத்தகைய அடியவரகள் தமக்கு அன்புடன் எடுத்துவரும் காணிக்கைகளை ஏற்காது பாவப்பொருட்கள் என எறிந்து விடுவதும் உண்டு.

ஆனால் எம்பெருமான் வெள்ளை அண்ணை மகரிஷியோ தம்மிடம் வரும் அத்தகைய அடியவர்களையும் மனம் நோகாது அவர்களை கருணையுடன் அரவணைத்து தமது அருளுபதேசங்களால் நெறிப்படுத்தி வந்துள்ளார். சிலரது தவறுதல்களைக் கண்டிப்பதாக இருந்தால் ஏனையோர் அறியாதவாறே தமது நல்லுபதேசங்களால் நெறிப்படுத்துவார்.

ஒருமுறை யோக சுவாமிகளுடனான தனிமை உரையாடல் பற்றி எம்பெருமானிடம் சீடரான இந்நூலாசிரியர் வினவியபோது ”ஆகுபெயரையும் அன்மொழித் தொகையையும் பற்றிப்பேசினோம் பிள்ளாய்..’என புன்னகையுடன் சுருக்கமாகக் கூறி மேலே ஒன்றும் பேசாது, ”குக்குடுசாமி குடுகுடுசாமி, குடையான்சாமி” என புரியா வகையில் பாடிக் கொண்டார்.

## ’வெள்ளை அண்ணை’ தெய்வ வடிவம்

’தெய்வத்திற்கு ஒரு வடிவம் என்றால் ’வெள்ளை அண்ணை’ என அழைக்கும் எங்கள் இராமச்சந்திர மகரிஷியே

ன்பதை,எமது இறை அவதாரம் மானிட உருவில் தம்மோடு
ழ்ந்த காலத்தே அவரைத் தரிசிக்க வரும் அன்பர்கள் மெய்
ருக மொழிந்தனர். இவ்வுலகத்தில் தாம் செய்த பெரும்
ண்ணியம் தெய்வத்தை மனித வடிவிலே தரிசித்து வருவது
ன்றே.. என்பதாகக் கூறினர். அவர்கள் பெம்மானைச் சேவித்துச்
சன்ற காலங்களில் அங்கே எம்பெருமான் தொண்டுகளில் ஈடுபட்டு
ன்ற இந்நூலாசிரியர் உள்ளிட்ட சீடர்கள் அனைவரையும்
ண்ணியவான்கள் எனப் போற்றிச் சென்றனர்.

"குழந்தைகள் ,பெரியவர்கள், படித்தவர்கள், பாமரர்கள்
ன்னாது அனைவருக்குமே வெள்ளை அண்ணையாக
ரிமையாக நின்று அரவணைத்து புனித குருவாக அருள்
மழை பெய்த எங்கள் ஈழத்தின் திரு அவதாரம் இராமச்
ந்திர மகரிஷி போல ஒரு மஹானை உலகெங்கு தேடினாலும்
ண்டுகொள்ள முடியாதே.. அத்தகைய உயரிய பொக்கிசம்
மக்குக் கிடைத்ததுபோல உலகிலே எங்குமே யாருக்குமே
டைதிருக்காது.. அந்த வகையிலே நாங்கள் கொடுத்து
வத்தவர்கள்
த்தகைய எம்பிரான் பெருமையை உணராதோர்,உணர்ந்தும்
வரது நெறிப்படி நில்லாதோர்` பாவியரே.." இவ்வாறு இன்று
ம்பெருமான் பக்தர்கள் புலம்பித் தவிக்கின்றனர்.

## ஆலயமானார்

இந்த உலகை வாழ்விக்க மானிட அவதாரம்
டுத்துவந்த இறையோன் அனைவரதும் பாவங்களைச்
மத்தலாய் உடல்`உபாதையுற்றார். தாம் ஈழ பூமிக்கு வந்த
லம் போதும் என்றாகவே 03.04. 1977- பங்குனி உத்தர
னித தினத்தில் தமது மானிட சரீரத்தை உதறி ஒளியிலே
லந்தார்.

எம்பெருமானின் பூலோகத் தந்தை சங்கரப்பிள்ளை அவர்கள் எம்பெருமான் புனித அஸ்தியை புண்ணிய பாரதம் சென்று கங்கையிலே கரைப்பதற்கென தீர்மானித்திருந்தார். ஆனால் எம்பெருமானோ அவரது சொப்பனத்திலே மும்முறை தோன்றித் தமது அஸ்தியை தமது பிரதம சீடரான கொழும்புத்துறை செல்வரரெத்தினம் குடும்பத்தினரிடம் சேர்த்துவிடும்படி அருளாணை பிறப்பித்தார்.

அவ்வாறே நல்லூர் சங்கரப்பிள்ளை அவர்களும் புனித அஸதியை ஏந்தி இறை நாமம் உச்சரித்தபடி அயலூரான கொழும்புத்துறை சுவாமியார் வீதி சென்று எம்பெருமானின் சீடர்களிடம் வழங்கினார். எமது இறையோனின் புனித அஸ்தியை அக் கொழும்புத்துறை ஆசார சீடர்கள் தமது தியான கூடத்தில் முறைப்படி மடாலயம் அமைத்து எம்பெருமான் பக்தர்கள் சூழ கூட்டுப்பிராத்தனை புரிந்து வழிபாடியற்றி வரலாயினர்.


எம்பிரானுக்கு திருத்தலம் அமைத்த கொழும்புத்துறை சீடர் குடும்பத்தினர்.

யாழ்ப்பாணம் கொழம்புத்துறையூர் சுவாமியார் வீதியைச் சேர்ந்த இறையவரின் பிரதம சீடர்களான சிவநெறிச்சீலர் த. செல்வரத்தினம் அவர்கள் குடும்பத்தினர் 1984..ம் ஆண்டு தைமாதத்தின் ஒரு புண்ணிய தினத்திலே தமது இல்லத்தின் முன்பாக உள்ள நிலப்பரப்பில் எம்பெருமான் அஸ்தியில் பல சமயச் சடங்குகளுடன் தையல் நாயகி சமேத ஸ்ரீ இராமச் சந்திர இலிங்கேஸ்வரர் சிவாலயம் எழுப்பி முதலாவது கும்பாபிஷேகம் இனிதே இடம்பெற வகை செய்தனர். அச்சீடர்கள் தாம் பெற்ற இன்பம் இவ் வையகம் பெற வகை செய்திருப்பதை இட்டு அனைத்துயிரையும் நேசிக்கும் யாழ்ப்பாணத்து ஆன்மிக சமுகம் அவர்களிடம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

எமது இறைவனின் திருத்தலமான ஸ்ரீ- இராமச் சந்திர இலிங்கேஸ்வரர் திருத்தலம் யாழ்ப்பாணம் -கொழும்புத்துறையின் நீண்ட பிரதான சாலையில் யோக சுவாமிகள் ஆச்சிரமத்திற்கு அணித்தாக உள்ள சுவாமியார் வீதியின் வலது புறமாக ஏறக்குறைய 500 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

மேற்படி திருத்தலத்தில் தையல்நாயகி சமேத ஸ்ரீ இராமச்சந்திர இலிங்கேஸ்வரராக எம்பெருமான் எழுந்தருளி அருள்பாலிக்கின்றார்.
முன்பு, கொழும்புத்துறையில் இருந்து சிவதொண்டாற்றி அற்புதங்கள் நிகழ்த்தி அருள்பாலித்து வந்த ஈழத்துச் சித்தர் யோக
சுவாமிகள் தாம் சிவதொண்டாற்றி வாழ்ந்த அந்த கொழும்புத்துறையில் தம்மை நாடிவரும் பக்தர்களிடம் "இங்கே சிவன் கோயில் ஒன்று வரப்போகுது" என மொழிந்துள்ளார். அது யோகர்தம் சமாதிக்கோயில் அமைந்த ஆச்சிரமத்திற்கு அருகாமையில் சுவாமியார் வீதியில் உருவாகியுள்ள எம்பெருமான் இராமச் சந்திர இலிங்கேஸ்வரர் சிவாலயமே.. அந்த யோகர் வாக்காக அது எப்பவோ முடிந்த காரியமாய் மெய் சிலிர்க்கவே வைக்கின்றது.

மேலும் ஒருமுறை யோக சுவாமிகள் ஒரு சிவராத்திரி தினத்தின்போது, நள்ளிரவுபோல் எழுந்து நின்று ´யாழ்ப்பாணம் பற்றி எரிகின்றது. தையல் நாயகி அம்மா நீதான்தாயே எங்கள் யாழ்ப்பாணச் சனங்களின் ஒருவேளை உணவுக்காகுதல் வழி செய்யவேண்டும்´´ எனக் கூறி நின்றதாக தமிழ்நாட்டில் இருந்து வெளிவந்த 'சிவநெறி' என்ற நூலிலே குறிப்பிடப்பட்டுள்ளது.. பின்னால் நாட்டில் நடந்து முடிந்த மக்கள் அவலமே யோகர் கண்களுக்கு அப்போது தென்பட்டிருத்தல் வேண்டும். தையல்நாயகியே யோகசுவாமிகள் வழிபடுதெய்வம்.

பின்னாளில் எம்பெருமான் இராமச்சந்திர இலிங்கேஸ்வரர் தையல்நாயகி சமேதராக யோக சுவாமிகள் ஆச்சிரமம் அருகே

இருந்து அருள்பாலிக்கும் அற்புதம்... அத் தையல்நாயகி சமேதராகவே எம்பெருமான் அவதாரத்தோடு தொடர்புபட்ட நல்லூர் சட்டைநாதர் சிவாலயம் பூர்விக காலத்திருந்து ஈழ மக்களுக்கு அருள்பாலிப்பது... இவை எல்லாமே எம்பெருமான் தெய்வீகத் தொடர்பினை உணர்த்துவன.

நல்லூர் தேரடி செல்லப்பா கொழும்புத்துறை யோக சுவாமிகள் உறவு போல நல்லூரில் திருவவதாரம் புரிந்த எம்பெருமான் திருத்தலம் அயலூரான கொழும்புத்துறையில் யோக சுவாமி சமாதிக்கருகில் அமையவேண்டும் என்பதே இறைவன் நியதி..

யாழ்ப்பாணத்திற்கும் கொழும்பிற்குமான கடல்வழிப் பயணம் மேற்கொள்ளும் துறைமுக நகரானதால் கொழும்புத்துறை எனப் பெயர் பெற்ற இப்பகுதி 'சிங்கை நகர்' எனும் நல்லூர் இராஜதானியின் பிரதான துறைமுகங்களில் ஒன்றாகும். அதனால் பொங்கொலிநீரச் சிங்கை நகர் என யாழ்ப்பாண அரசு என வரலாற்றிலே சிறப்புப் பெயர்பெற வழிகோலிற்று. யாழ்ப்பாணத் தமிழ் மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் இராமேஸ்வரத் திருத்தலத்திற்கு பூநகரிப் பூக்களும், நெடுந்தீவில் இருந்து வரும் பசும்பாலையும் சிறு கப்பல்களில் எடுத்துச் சென்ற துறைமுகம் கொண்ட நகரமே இக் கொழும்புத்துறையாக பின்னைய வரலாறுகள் உரைத்தபோதும் ஈழத்தின் பூர்விக வரலாற்றுடன் தொடர்பு பட்டதாய் ஐம்பு கோளத்துறையெனப் பெயர்பெற்ற யாழ்ப்பாணம் வேறு நாடுகளுக்கு ஆடை ஏற்றுமதி வணிகத்தால் செல்வம் ஈட்டியபோது இக்கொழும்புத்துறை நகரமும் வணிகநகரக் குடியிருப்பாக விளங்கி இருக்கின்றது. அதனை இங்குள்ள வணிகர் குடியிருப்புகளும் உணர்த்தும்.

முன்னர் யோக சுவாமிகள் கொழும்புத் துறையிருந்து வாரந்தோறும், கால் நடையாக நல்லூர், ஆடியபாதம் வீதிக்கு வருகை தரும்போது,இடையே எம்பெருமான் இல்லம் சென்று தனிமையில் அமர்ந்து பேசிச் செல்வதை ஏலவே கண்டோம்..

அவ்வாறு யோக சுவாமிகள் வந்து செல்லும்போது, எமது இறையோர் தோன்றிய குடும்பத்து உறவாக அயல்வீட்டில் வாழ்ந்த இந்நூலாசிரியரின் பூட்டியரான இராசம்மா அவர்களது இல்லத்துடன் கூடிய வியாபாரத்தலம் வந்தமர்வார். இராசம்மா அவர்களின் தந்தை கார்த்திகேசு அவர்களோ முன்னைய நாட்களில் தினமும் காலையில் அரிசி,உப்புடன் ஒவ்வொரு வீடாகச் சென்று அடுப்புப்பற்றாத வீடுகளில் அவற்றை வழங்கி அவர்கள் உண்ண வழி சமைக்கும் பெரு வள்ளலாக ஊரவர் போற்ற வாழ்ந்தவராகக் கூறப்படுகின்றது. இராசம்மா அவர்கள் 2-ம் உலக மகா யுத்தின்போது யாழ்ப்பாணம் பஞ்சத்தால் தவித்த வேளையில் தலைமன்னார் கப்பல் மூலமாக தமிழ் நாடு சென்று உணவுப் பொருள்களை வாங்கி யாழ்ப்பாணம் கொண்டு வந்து ஊரிலே மலிவு விலையில் வழங்கியவர். இல்லாது வருவோருக்கு உணவு, இருப்பிட வசதிகள் நல்குபவர் என்பதால் கடையம்மா என்று ஊரவரால் பாசமுடன் அழைக்கப் பட்டு வந்தவர். ஈழத்துப் பெண் சித்தர் எனப் போற்றப்பெற்ற அன்னை சடையம்மாவுக்கு நெருங்கிய உறவினரான அம் மூதாட்டியின் இரு சகோதரியரில் ஒருவர் துறவியாகி யாத்திரைக்காக வடநாடு அலகபாத் சென்று அடக்கமானவர். மற்றவர் சடைம்மாவின் பின் பெருஞ்சடையுடன் நல்லூர் சிவன்கோயிலில் தங்கி இருந்து அருள்வாக்குக் கூறி அடக்கமாகி செம்மணி வயல்கரையில் நின்ற பெரிய பூவரசமரத்தின்கீழ் அமைக்கப்பெற்ற கல்லறையிலே உரியமுறையில் நல்அடக்கம் செய்யப்பெற்ற செல்லம்மா சுவாமிகளாவார். அத்தகைய ஆன்மிக, ஆன்மநேய பின்னணி கொண்ட இராசம்மா அவர்கள் பக்தியுடன் செம்புப் பாத்திரத்திலே தரும் பசும் பாலினை கொழும்புத்துறையில் இருந்து எம்பெருமான் இல்லம் வந்து திரும்பும் யோக சுவாமிகள் மகிழ்வுடன் வாங்கிப் பருகும்போது, ”அன்பும் அறமும் கொண்ட உனது வம்சம் பெருகி எல்லாரையும் காக்கும்.” என ஆசி கூறிச் சென்றிருக்கின்றார். இந்த அருள் அன்னையர் அனைவரும் எமது இறைமைந்தர் திரு அவதாரத்தின்போது தோத்திரம் புரிந்து நின்றவர்கள்.

# ஸ்ரீ இராமச்சந்திர இலிங்கேஸ்வரர் மகிமை

அனைத்து ஊரவரும் ஒருங்கிணைந்து வழிபடும் யாழ்ப்பாணம் கொழும்புத் துறையில் விளங்கும் ஒப்பற்ற திருத்தலம், கொழும்புத்துறை இராமச் சந்திர இலிங்கேஸ்வர் திருத்தலம்.

அத் திருத்தலத்தினை வழிபடலான் பல அற்புத அனுபவங்கள் அந்த அடியவர்களிடம்..

இன்று, எமது இறைவனை மெய்யன்போடு பூசிப்பவர்கள் தாயகத்தில் மட்டுமல்லாமல் உலகெங்கும் பரந்து வாழ்கின்றனர். குருவானவரின் பங்குனி உத்தர தினத்தின்போது, உலக நாடுகளில் வாழும் அவர்தம் சீடர்கள் பக்தர்கள் நோன்பிருந்து தான தருமங்கள் புரிந்து தமது வாழ்வை துாய்மை ஆக்கி வாழ்ந்து வருவதோடு தமது சிக்கல், பிரச்னைகள் எல்லாம் இராமச் சந்திர இலிங்கேஸ்வரரான வெள்ளை அண்ணை குருசுவாமியை தியானித்தலால் விலகுவதாகவும், தமது வாழ்வில் துாய ஒளிபிறப்பதாகவும் உணர்ந்து தமது அனுபவத்தை ஏனைய மெய்யன்பர்களுக்கும் உணர்த்தி வருகின்றனர்.

தாம் பெற்ற இன்பத்தை இத் தரணிக்கு ஓதி வருகின்றனர். எம்பெருமான் பக்தர்கள் பலருக்குத் தமது அற்புதம் உணர்த்தியுள்ளார்.தீமை அணுகாது கவசமாகிக் காத்து நல்லருள் பாலித்து வருகின்றார். எம்பெருமானை வழிபடும் பக்தர்கள் எதுவித குறைபாடும் இன்றி பல நலனும் பெற்றுத் தன்நிறைவோடு வாழ்ந்து வருகின்றனர்.

## கண்கண்ட தெய்வம்

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில், எமது இறையவர்தம் ஆலயத்தின் மூலஸ்தானத்தில் உள்ள சிவலிங்கம்மீது 2002-ம்

ஆண்டு பங்குனி உத்தர தினமான பௌர்ணமி தினத்திலே நாகபாம்பு ஒன்று வந்து படம் எடுத்தபடி நிற்பது கண்ட அப் பகுதியில் காவலுக்கு இருந்த பௌத்த சிங்கள இராணுவம் பயபக்தியுடன் வணங்கி, அவ்வூரவரை பூசை இயற்றக் கேட்டுக் கொண்டது. அவர்கள் அவ்வாறாயின் கோயில் இருக்கும் வளவின் பின்னால் உள்ள வீட்டினை பூசை இயற்றும் அந்தணர் வந்தமர ஒதுக்கித் தருமாறு கேட்டபோது தமக்குப் பாதுகாப்பு இல்லை எனக் கருதிய அப் பகுதி இராணுவத்தினர்

தாமே எம்பெருமான் திருக்கோயிலைக் கழுவி பூக்கள் சார்த்தி பயபக்தியுடன் வணங்கி வராலாயினர். இத் தகவல் புலம் பெயர் மேற்குலகெங்கும் பரவியது. அவ்வாறான காட்சியை டென்மாக்கில் இருந்து 2005..ம் ஆண்டின் அமைதிச் சூழலில் யாழ்ப்பாணம் சென்று நேரடியாகக் காணும் வாய்ப்பு இந்த நூலாசிரியருக்குக் கிட்டியது.

.2005..ம் அண்டு வைகாசி மாதம் யாழ்ப்பாணத்தில் இந்நூலாசிரியருக்கு எம்பெருமான் திருத்தலம் உணர்த்திய அந்த அற்புத அனுபவம் மேற்படி அந்த ஆண்டின் பங்குனி உத்தர தினத்திலே மேற்குலகிலே இந்நூலாசிரியருக்கு ஏற்பட்ட ஓர் அற்புத அனுபவத்தின் தொடர்ச்சியாகும்..

## ஜேர்மனி,புத்தர் விகாரத்தில் மகரிஷி தரிசனம்



2005-ம் ஆண்டு பங்குனி மாதம் டென்மார்க்கில் இருந்து ஜேர்மனி பேர்லினில் விடுமுறைகழிக்க ஆசிரியர் தனது இளைய சகோதரர் அழைப்பின் பேரில் குடும்பத்தினருடன் சென்று இருந்தார்..

அங்கே, எமது இறையவ்ரின் புனித நாளான பங்குனி உத்தர தினத்தின்போது, விரதமிருந்த ஆசிரியர், .ஏதாவது ஆலயம் சென்று தியானித்து திரும்பலாம் என்று கருதினார்.அவரது கருத்தை உள்வாங்கிய அவர் சகோதரன் தமது இடத்திற்கு சற்று தொலைவில் ஒரு புத்த கோயில் உள்ளது என தெரிவித்தார். அது, பிரித்தானிய கொலனியாக ஈழம் இருந்துபோது ஆரம்பிக்கப்பெற்றதாகவும், .150 ஆண்டுகளுக்கு முன் ஜேர்மனியரான வைத்திய கலாநிதி ஒருவர் பௌத்தநெறி பயில வேண்டி ஈழம் சென்று தேரவாத பௌத்தம் பயின்று ஈழத்திருந்து புத்தர்சிலையையும் வரவழைத்து தமது சொத்துக்களை அவ்விகாரத்திற்கே எழுதி தியானகூடம் நிறுவியதாகவும் கூறினார்.

அதனை அறியும் ஆவல் ஆசிரியரை உந்தியது. குடும்பத்திடன் சென்றார். அந்தப் பிரதேசம் ஒரு மலைப்பாங்கானதாக இருந்தது. அமைதிச் சூழல்... படிக்கட்டுவழி மலைமேலே ஏறிச் சென்றதும் சமதரை நந்தவனத்திலே விதம்விதமான புத்த சிலைகள் ஒரு பக்திச் சூழலை ஏற்படுத்தும் வண்ணம் அமைந்திருந்தது.. உள்ளே மண்டபத்தே ஜேர்மனியர் உள்ளிட்ட ஐரோப்பிய நாட்டுப் பக்தர்களுடன் யப்பான், வியட்நாம், சீனா, ஆபிரிக்கா, தாய்லாந்து, என பல நாட்டு மக்கள் நிற இன வேற்றுமை களைந்து ஒருங்கமர்ந்து பௌத்த தியானத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அத் தெய்வீகக் காட்சி, இந்நூலாசிரியர் எழுதிய உலகப் புகழ் பெற்ற அறிவியல் ஆன்மிக புதினமான சமரசபூமியில் இடம்பெறும் ஒரு தனித்தீவிலே 5- கண்டங்களையும் சேர்ந்த அனைத்து நிற மாந்தரின் ஒருமித்த பிரார்த்தனையை ஆங்கே இந்த நூலாசிரியருக்கு நிஜக்காடசியாக கண்முன்னே நிறுத்தி மெய்சிலிர்க்க வைத்தது.

ஆங்கே பேர்லினில் அந்த பங்குனி உத்தரதினமான பௌர்ணமி தினத்திலே அவர்களது ஒருமித்த தியானம் -

ப்பகுதியின் அமைதிச் சூழல் ஒரு பக்தி மயமான புனித னுபவத்தை தந்து நின்றது. இராமச் சந்திர இலிங்கேஸ்வரர் னும் எமது இறை அவதாரமான வெள்ளை அண்ணை கரிஷியே புத்தர் வடிவாகவும் ஆங்கே ஆசிரியருக்குத் தோற்றந் ந்தார். அவரை மனமொன்றித் தியானித்து உள்ளத்தே னம்புரியாத இனிய ஒரு சுக அனுபவத்துடன் மகிழ்ச்சி பாங்க சகோதரரின் வீடு திரும்பிய மறுவாரம், ஆசிரியர் ஜர்மனியில் இருந்து டென்மார்க் பயணமானார். வீடு வந்து தவைத் திறந்து உள்ளே நுழைந்த உடனேயே ஒரு தாலைபேசி தமிழ் நாடு சென்னையில் இருந்து வந்திருந்தது. பசியவர், யாழப்பாணம் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் முதுநிலைப் பேராசிரியர் ு.சண்முகதாஸ் அவர்களாவர். .. ஒரு கல்வி மாநாட்டுக்காக சன்னை வந்திருப்பதாகவும், மறுநாள் கொழும்பு சென்று ங்கிருந்து டென்மார்க் வரவுள்ளதாகவும், டென்மார்க் பல்கலைக் ழகத்தில் ஊடகவியல் துறை கருத்தரங்கிற்காக நூலாசிரியரின் ல்லத்தில் இருவாரம் தங்கிச் செல்ல விரும்புவதாகவும் தரிவித்தார். ஆசிரியரும் மகிழ்ச்சி அடைந்தார்.. பேராசிரியரும் டன்மார்க் வந்தார். ஆசிரியருடன் தங்கி இருந்து டென்மார்க் ல்கலைக்கழக ஊடகவியல் கருத்தரங்குசென்று வந்தார்.. ட்டிலே ஓய்வானபோது அறிவியல் பகிர்ந்து கொண்டே ூசிரியர், தமது சமரசபூமி நூலை அப் பேராசிரியருக்குக் ாண்பித்தார். இந்தியா புதுவையில் 11.04.2004..ல் 9..வது னைத்துலக தமிழ்ப்பண்பாட்டு இயக்க மாநாட்டில் ரங்கேறியதே மேற்படி நூலாசிரியரின் சமரசபூமியாகும்.

அது, ஐக்கிய நாடுகள் சபையின் யுனெஸ்கோ மிழ்ப்பிரிவுப் பேராசிரியர் மணவை முஸ்தபா அவர்களால் வளியிட்டுவைக்கப்பெற்றது. மொழி பண்பாட்டுத்துறை நிறுவனர் பராசிரியர் ப.மருதநாயகம் அவர்களது அறிமுக உரையுடனும், சன்னை கிறித்தவக் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் பராசரியர் மோசசு மைக்கல் பரடே அவர்களது அற்புத ூய்வுரையுடனும் வெளியானது.

இனம், மதம், மொழி, சாதி கடந்ததாய் உலகை ஒரு குடும்பமாக்கும் அறிவியல் ஆன்மிக புதினமான மேற்படி நூலை முழுமையாக வாசித்த பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் மிகவும் திருப்தியுடன் மதிப்பீட்டுரையும் வழங்கி அதனை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அரங்கேற்றலாம் என தெரிவித்து ஈழம் திரும்பும்போது ஆசிரியரின் நூலின் இருபது பிரதிகளைத் தாமே பெற்றுச் சென்றார்.. என்னே இறைவன் கருணை! என மெய் சிலிர்த்தார்.
பேராசிரியர், டென்மார்க்கிருந்து யாழ்ப்பாணம் திரும்பிச் சென்ற இருவாரங்கள் பின் ஆசிரியரும் ஈழம் சென்றார்.. அங்கே நூல் சிறந்த முறையில் அறிமுகவிழாக் கண்டது.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா,இந்து நாகரிகத்துறை தலைவர் கலாநிதி மா.வேதநாதன்,மற்றும் விரிவுரையாளர்களான கலாநிதி விசாகருபன்,குமரன், அருட் செல்வி உள்ளிட்ட அனைவரும் ஒரு புதிய இலக்கிய வடிவமான அறிவியல் ஆன்மிகம் பொதிந்த சமரசபூமிப் புதினத்தால் உந்தப் பெற்று பாராட்டியதோடு அமையாது ஆசிரியரின் ரிஷி மூலத்தைத் தேடினர். கொழும்புத் துறையூர் இராமச் சந்திர இலிங்கேஸ்வரர் ஆலயத்தில் அருள் சுரக்கும் எம் பெருமான் நல்லூர் வெள்ளை அண்ணை மகிரிஷி பற்றி மேலதிகமாக அறிய விழைந்தனர்.

அதன் வண்ணம், மேற்படி ஆலயத்திற்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவரும் ஆன்மிக வாதியுமான பேராசிரியர் மா.வேதநாதன் அவர்களுடனும், பட்டதாரி ஆசிரியரான
திருநெல்வேலி சி..பத்மராஜா அவர்களுடனும் கொழும்புத்துறையூர் சிவனைச் சென்று சேவித்தபோது, அங்கே காவலுக்கிருந்த இராணுவத்தினரால் ஆலயம் மிகவும் சுத்தமாக கழுவப்பெற்று பூக்கள் வைத்து வணங்கப்பெற்ற அடையாளங்கள் தெரிந்தன.

வெள்ளை அண்ணை மகரிஷி முன்னர் கூறிய அனைவருக்கும் பொதுவான இறையோனின் எல்லா மதப் ரிவுகளும் கூறும் தத்துவங்களையும் பயிலுங்கள். அனைத்து தங்களையும் மதித்து ஒழுக முனையுங்கள்!'' என பதேசித்ததன் வண்ணம் இந்த நூல் ஆசிரியர் புத்தர் லயத்தை வெள்ளை அண்ணை மகரிஷி வடிவில் ஜேர்மனியில் சவித்தமை... அதே காலப்பகுதியில் எம்பெருமானான வனை யாழ்- கொழும்புத் துறையில் அங்கே காவலுக்கு இருந்த ங்கள புத்தர்களான இராணுவத்தினர் பயபக்தியோடு சித்தமையான அதிசய ஆன்மிக தொடர்பு கண்டு ன்னே இறைவன் கருணை!'' என சமரச சிவனை உணர்த்திய ம்பெருமான் கருணை கண்டு இந்நூலாசிரியர் மெய் சிலிர்த்து ன்றார். ஆசிரியர் தமது அனுபவங்களை அங்கே அப்போது காழும்புத்துறையில் நின்றவர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

அங்கே, கொழும்புத்துறையில் கோயில் கொண்ட ம்பிரான் இராமச்சந்திர இலிங்கேஸ்வரர் மகிமையினை அவ்வூர் மய்யடியார்கள் கூறினர். அற்புத சிவன் என இடையிடையே பளத்தர்கள் வெற்றிலை,,பணம் பூக்கள் வைத்து ணங்குவதாகவும், நள்ளிரவில் மணியோசை கேட்பதாகவும், ருவறைக்குள் நாகங்கள் நகர்ந்து மறைவதாகவும் சில ராணுவத்தினரும் அற்புத சிவன் என எம்பெருமானை யபக்தியுன் பூசித்து வருவதாகவும் தெரிவித்தனர்.

அதனைக் கேட்டு மெய் சிலிர்த்தபடி புகைப் படங்களை டுத்து, அங்கிருந்து யோக சுவாமிகள் ஆச்சிரமம் சென்று சவித்து திரும்பிக்கொண்டிருக்கையில் நல்லூரில் குருவானவர் ாழ்ந்த சித்தாச்சிரமம் அமைந்த சபாமாளிகை இல்லத்தையும் ாண விரும்பிய யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இந்து நாகரிகத் றைத் தலைவருக்கு, நல்லூர்,கலைமகள் வீதி வந்து, ஒரு ாலத்தில் மகரிஷி வாழ்ந்த- போர்க்காலத்தால் கட்டிட டிபாட்டுடன் கூடிய அந்த பழைய சபாமாளிகையையும் ஆசிரியர் ாண்பித்தார்.



எம்பெருமான் வாழ்ந்த சபாமாளிகை

எமது இறை அவதாரம் வாழ்ந்த சபாமாளிகையை, அங்குள்ள சித்தாச்சிரமத்தை எம்பெருமான் நினைவு மண்டபமாக அமைக்கக் கூடாதா ? என அங்கே கேட்ட பல்கலைக் கழகக் கல்விமான்களுக்கு, ஆசிரியரால் என்ன பதில் தான்கூற முடியும்.?

இதனையே அயலூரவர்களும், உலகெங்கும் வாழும் எம்பிரான் பக்தர்களும் கேட்டு வருகின்றனர்.

பிரச்னைகள் மலிந்த எமது இந்த ஈழபூமியில் அன்று அவதாரம் எடுத்து வந்து அனைத்துலகுமே அமைதிகாண வகைசெய்ய உபதேசித்து அனைவராலும் போற்றி வழிபடப்பெறும் எம்பெருமானின் உபதேசங்கள்,அவர்தம் அற்புதங்கள் அனைத்தையும் இன்றைய உலகம் கேட்டு 'அப்படி ஒருவர் வாழந்தாரா.. அதிசயமே!' என மலைத்து நிற்கும்போது..

பொறுப்பானவர்களும் தமது கடமையை மறவாது எம்பெருமான் மகிமை உலகெங்கணும் பரவ தமது பங்களிப்பினை ஆற்ற முன்வரல் வேண்டும்... அதுவே இந்நூலாசிரியரின் பிரார்த்தனையாகும்.

இது அனைத்து ஆன்மாக்களும் ஈடேறவேண்டும். அனைவருக்கும் சுபீட்சம் கிட்டவேணடும் என்ற நல்லுணர்வின் வெளிப்பாட்டாலே நூலாசிரியரின் ஆன்மா மொழிவது..

எம்மை வாழ்விக்கும் இராமச் சந்திர இலிங்கேஸ்வரரான வெள்ளை அண்ணை குருநாதரின் பங்குனி உத்தர நினைவு தினத்திலே கனடா வானொலியில் ஆன்மிகச் சிறப்புச் சொற்பொழிவுகள் இடம் பெறும்.

மேற்படி, ஆன்மிக வானொலி நிகழ்வினை நூலாசிரியருடன் இணைந்து எம்பெருமான் சீடர்களில் ஒருவரும் கனடா வானொலி அறிவிப்பாளருமான கணபதி ரவீந்திரன் பீ.ஏ. அவர்களே ஆண்டுதோறும் தமது ஒலிபரப்பால் எம்பெருமான்மகிமையினை உலகிடைப் பரப்பி வருகின்றார்..

வெள்ளை அண்ணை சுவாமிகளது புனித அஸ்தியில் கொழும்புத் துறை ஸ்ரீ இராமச் சந்திர இலிங்கேஸ்வரர் ஆலயம் எழுந்து 35 ஆண்டுகள் கழிந்துவிட்டன.

இறைவன் கருணைக்கு இன்றியமையாதது அன்பு , நம்பிக்கை, அடைக்கலம் எனப் போதித்தார் எம்பிரான்.
அதுவழி ஆண்டவரை இலகுவிலே அடையலாம் என அனைவருக்கும் உணர்த்த வந்த எம்பெருமான் கருணையை உள்வாங்கி அவர் அருளாலே அவர்தாழ் வணங்குவோம்.
பிறவிப் பயனை இங்கே வாழ்ந்து கொண்டிருக்கின்ற காலத்திலேயே அடைய எம்பெருமான் காட்டிய மார்க்கம் ஒன்றே வகைசெய்யும் என்பதுணர்வோம்.

அதுவழி அனைத்துலகும் பல நலனும் பெற்று அனைத்து உயிர்களையும் நேசித்து பல்லாண்டு வாழும். ஈழத் தமிழர்தம் வாழ்விலே நிலையான நிம்மதி,சுபீட்சம் தோன்றும். .

அன்று ஞான குருவாக ஈழ நல்லூரில் திரு அவதாரம் புரிந்து இனம்,மதம்,மொழி கடந்து அனைவரையும் ஆதரித்தவர்.. இன்று இலிங்கேஸ்வரராக கொழும்புத்துறையில் சிவனாக அமர்ந்து அற்புதம் நிகழ்த்தி அருள்சொரிகின்றார்.

தமிழர்தம் சிவ மந்திரம் எனும் திருமந்திரம் தந்த திருமூலர்தம் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பதை உலகிலே வகுக்க ஈழ பூமியியிலே தோன்றிய எம்பெருமான் கருணையோ கருணை..

அந்த இறைவனை மனமொன்றி தியானித்து, இந்த உலகம் அமைதிகாக்க, ஒருவரை ஒருவர் நேசிக்க, அனைவரிடமும் அன்பு பிறக்கக் கூட்டுப் பிரார்த்தனை புரிவோம்.

தமிழர்களான நாங்கள் எமது உள்ளக முரண்பாடுகள், இன,மத பிரிவினை பேதம் களைந்து அனைவருக்கும் வழிகாட்ட ஒன்று கூடுவோம்.!

எங்கள் ஏக தெய்வமே அனைத்து மதவடிவிலும் எனத் தெளிவோம்.!

எமக்கு குருவாக வந்து உபதேசித்து நின்ற எம்பெருமான் காட்டிய வழிமுறையாய் அன்பு, நம்பிக்கை அடைக்கலம் எய்தி அனைத்துலகின் ஆண்டவன் சந்நிதியிலும் அனைவருக்கும் பொதுவான எங்கள் ஏக தெய்வத்தையே காண்போம்.

சிவனே புத்தர், மகாவீரர், அல்லா, யேசு, அன்னை பராசக்தி,முருகன்,விநாயகன் என்பது முதலாக எம்மகத்தே எந்நாட்டவர்க்கும் இறைவனை ஒருவனாக- அந்த ஒருவனே ஒருத்தியாக ஆண் பெண் அலியென ஆன ஆங்கிலத்திலே உரைக்கும் கெவன் (Heaven)என்பதே சிவன் என்பதாகத் தெளிவோம். புதிய உலகம் உருவாகப் போகின்றது..

புரிந்துணர்வு மனித சமுகத்திடை வளர்ந்தோங்கப்போகின்றது..
வேற்றுமை விறாப்போ மனிதரைவிட்டுக் கலைந்தோடப்போகின்றது..
நம்பிக்கை மோசடியே இல்லாத அன்பான உள்ளங்களின் ஒருங்கிணைப்பால் உலகம் புதுப்பொலிவு காணப்போகின்றது..
எம்பெருமானின் கருணைத் தீபம் அக இருளை நீக்கி அனைவருக்குமே ஆனந்த .. இனிய உலகம் காண்பிக்கப்போகின்றது..

எமது இறைவன் பெருமை கூறும் இந்நூல் உலகெங்கணும் அன்பு சாம்ராச்சியம் உதயமாக நிச்சயம் வழி காட்டும்.!

அதனால், ஆளப்படுதல், அடிமையாதல் என்ற பாகுபாடுகள் நீங்க அனைத்துயிரும் பல நலனும் பெற்று பல்லாண்டு வாழும்!

எம்பெருமான் உபதேசங்கள், தீர்க்கதரிசனங்கள், வாழ்வியல் தத்துவங்கள் கொண்ட அருளுபதேசநூல் ஒன்று அனைத்து இறைசாட்சியங்கள் தாங்கி வெகுவிரைவில் வெளிவரும்.

**எம்பெருமான் ஸ்ரீ இராமச்சந்திர மகரிஷி திருப்பாதங்களுக்கு பலகோடி தோத்திரம்..!**

**"அவன் அருளாலே அவன்தாழ் வணங்கி!" — மாணிக்க வாசகர்**

ஈழத்து ஞானி ஸ்ரீ இராமச்சந்திர மகரிஷி...

# யாழ்ப்பாணம் கொழும்புத்துறை ஸ்ரீ இராமச்சந்திர இலிங்கேஸ்வரர் பக்திப் பாமாலை

## அருள்மழை பொழியவே..

ராகம் : கல்யாணி தாளம் : ஆதி

அருள்மழை பொழியவே அன்போடு அழைக்கின்ற
ஆலய மணிஒலி கேட்குதே - அதில்
அண்ணாவுன் திருமுகம் தோணுதே! - வெள்ளை
அண்ணாவின் திருமுகம் தோணுதே!
- இராமச்
சந்ரலிங் கேஸ்வரர் அருளாட்சி தருகின்ற
கொழும்புத்துறைப் பதிக்(கு) ஏகுதே!-யாழ்
கொழும்புத் துறைப்பதிக்(கு) ஏகுதே-பாதம்
சுவாமியார்வீதியில் சேர்க்குதே!- எம்மை
சுவாமியார் வீதியில் சேர்க்குதே!
(அருள்)
மானிடப் பிறவி ஏற்று உவந்தே எங்கள்
மாபாவம் போக்கிய வள்ளலார்! - அன்று
மானிடப் பிறவி ஏற்று வந்தே - எங்கள்
மாபாவம் போக்கிய வள்ளலார்! - எங்கும்
கூனல்கள் நீங்க குவலயம் ஓங்கவே
கோயில் கொண்டார் இலிங்க வடிவமாய்! - இராமச்
சந்திர லிங்கேஸ்வரர் வடிவமாய் - வெள்ளை
அண்ணாவே சிவன்கோயில் வடிவமாய்!
(அருள் மழை)

தூயவர் சந்நிதி தனில் ஒன்று கூடி
தோத்தரித்(து) அருள் பெற வருகவே!- என்றும்
தோத்தரித்தருள்பெற விரைகவே!- மன
வேற்றுமை விலக, உள் வில்லங்கம் நீங்கவே
வரம்வேண்டும் அடியவர் விரைகவே!- வாழ்வில்

வளமெல்லாம் பெற்றுய்ய விரைகவே!- வெள்ளை
அண்ணாவின் திருக் கோயில் வருகவே!!
இறைவரம் வேண்டும் அடியவர்க்காகவே
எளிதான வழிசொன்ன பெம்மானன்றோ.. அன்று
எளிதான மார்க்கத்தை தந்தாரன்றோ .. என்றும்
அன்பு நம்பிக்கை அடைக்கலம் ஏந்தி
அவர்பாதம் பணிந்துய்ய வருவீரன்றோ .. வெள்ளை
அண்ணாவின் திருப்பாதம் பணிவீரன்றோ!
..தையல்
நாயகி சமேத இலிங்கேஸ்வர்தான்
ந(ம்)மைஆள வந்துற்ற பெம்மான் அன்றோ!
வேறு,.. (அருள்)
கொழும்புத் துறைப் பதி சிவகுரு அவர்தான்!- இராமச்
சந்(தி)ரலிங் கேஸ்வரர் எனும் துறைச் சிவனார்!!-நல்லூர்
அவதார குரு வெள்ளை அண்ணாவின் அருள்தான்!- அவர்
எந்நாட்டவரும் போற்றும் தென்நாட்டுச் சிவன்தான்!- என்றும்
எந்நாட்டவரும் போற்றும் தென்நாட்டுச் சிவன்தான்!

## முந்தை வினை

**ராகம் : தர்மவதி தாளம் : ஆதி**

எடுப்பு
முந்தை வினை தொலைக்க முந்துங்கள்! - ஈசன்
முன்தோன்றி அருள் சுரந்தார் கேளுங்கள்! - ஒரு
மழலைபோல் உம்வாழ்வை மாற்றுங்கள் - தெய்வம்
வசப்படும் வழி அங்கே காணுங்கள்! - தெய்வம்
வசப்படும் மழலைக்கே காணுங்கள்!
சரணம்
முதுமைக்கும் இளமைக்கும் முடிச் சொன்று போட்டார்! - எங்கள்
முகம் தன்னை அகமாக்கி அருள்அங்கு சேர்த்தார்.
எல்லோரும் என் பிள்ளை என்றள்ளி அணைத்தார்!! - அந்த
இறையோனை ஈன்றோரும் அவர்பிள்ளை ஆனார்.!

வள்ளல் என்றாகித்தன் வளமெல்லாம் ஈந்தார்! - வெள்ளை
அண்ணாவாய் அனைவர்க்கும் உறவொன்று சேர்த்தார்! - எங்கள்
வரகவி கரைகாணா பெருங் கல்வி ஈந்தார்! - பெரும்
ஆசான்கள் தஞ்சம்என்(று) அவர்பாதம் பணிந்தார்.

அற்புத குருகண்டு அவர்சீடர் மலைத்தார் - எங்கள்
ஆண்டவர் நீரென்றே அவர்பாதம் பணிந்தார்! - தெய்வம்
அன்பாலே உயிர்காக்கும் ஆட்சி ஒன்றமைத்தார்! - அதை
அனைவர்க்கும் போதிக்க சீடர்க்கே பணித்தார்!
(வேறு)

அன்பு நம்பிக்கை அடைக்கல வாழ்வை!
அகிலத்திற்கு அறிவித்த பெம்மானே போற்றி!!
சிவனே எம் சித்தம்! பெருமானே சித்தம்!!
செகம் எங்கும் உமதாட்சி வரவேண்டுமையா! - ஒரு
சமாதான உலகொன்று வரவேண்டுமையா! - இராமச்
சந்திர லிங்கேசர் நெறி வேண்டுமையா! - உங்கள்
சமரச சிவநெறி உலகாளும் ஐயா!
உங்கள் சமரசமே இந்த உலகாளும் ஐயா!
( முந்தை)

**சொந்த மண்ணின் பாசம்**

ராகம் : பாகேஸ்ஸ்ரீ தாளம் : ஆதி

சொந்த மண்ணின் பாசம் நெஞ்சில் மாறவில்லை..- இங்கே
சொன்ன சொல்லை காக்கும் மாந்தர் யாருமில்லே
சொந்த மண்ணின் பாசம் நெஞ்சில் மாறவில்லே - இங்கே
சொன்ன சொல்லை காக்கும் மாந்தர் யாருமில்லே..

பந்த பாசம் தேடி - நல்ல
பலனை நாடக் கூடி
சிந்தை மேவும்
சுகந்தம் நாடிப் போகவா!-வெள்ளை
அண்ணன் சொன்ன மார்க்கம் ஒன்று காணவா!
(சொந்த மண்ணின்)
வந்து வந்து வணங்கி நின்று
முந்தை வாழ்வின் முறைமை கண்டு
முழுமை பெற்ற மனிதராக மாறவா! - என்றும்
வெள்ளை அண்ணன் திருவருளைத் தேடவா!

சொந்த மண்ணின் பாசம்

நெஞ்சில் மாறவில்லை - இங்கே
சொன்ன சொல்லைக் காக்கும் மாந்தர் யாருமில்லே!
ஆளுக்கேற்ற வேசம்கொண்டு
அவர்இவர்க்காய் பேசி நின்று
போலி வாழ்வு வாழுகின்ற மானிடா!.. போதும்
புனிதப்பாதை காணும் நாளைத் தேரடா!.. ஒரு
புனித மார்க்கம் காண ஒன்று கூடடா!.. இராமச்
சந்திர லிங்கேஸ் வரர் உறவை தேரடா!
(சொந்த)
சொந்த மண்ணின் வாசம் தன்னை
சொர்க்கம் என்று சொல்லி நின்று
வந்த மண்ணில் சுகந்தம் தேடி வீழ்வதா? - எங்கள்
வெள்ளை அண்ணன் அருள்மழைதான் தேனடா!
- வந்து
வரங்கள் பெற்று நின் குறைகள் தீரடா! - தெய்வம்
வகுத்து நின்ற வழிமுறைகள் பாரடா! - மனிதா!
அன்பு கொண்டு அகிலம் மீதில் வாழடா! - வெள்ளை
அண்ணன் சொன்ன மார்க்கம் எல்லாம் தேனடா!

**மனிதனை மனிதன்**

ராகம் : ஆபேரி தாளம் : ஆதி

பல்லவி
“தனக்குவமை இல்லாதான் தாழ் சேர்ந்தார்க்கு அல்லால்
மனக் கவலை மாற்றல் அரிது”
மனக் கவலை மாற்றல் அரிது!.
அனுபல்லவி
- இதை
தெய்வப் புலவோன் தீங்குரலில் பாடிவைத்தான்
திருக்குறளாம் தீந்தமிழர் நமக்கு! தெய்வத்
திருக் குறளாம் தீந் தமிழர் நமக்கு!
சரணம்
மனிதனை மனிதன் ஏய்க்கின்றான்!-தான்
வாழ்கின்ற உலகினைச் சிதைக்கின்றான்!
தனித்தனி தத்துவம் தருகின்றான்!
தானே தலைமகன் சொல்கின்கின்றான்.-இங்கு

## அன்பு நம்பிக்கை

**ராகம் : ஹரிகாம்போஜி தாளம் : ஆதி**

அன்பு நம்பிக்கை அடைக்கலமானால்
ஆண்டவர் வசப்படுவார்! -இதை
வெள்ளை அண்ணாவாய் மானிட வடிவில்
இறையவர் உணர்த்தி நின்றார்! - எங்கள்
இறைவயவர் உணர்த்தி நின்றார்!

குழந்தைகள் போலே குதூகலம் காண
குவலயம் வேண்டி நின்றார்!- வெறும்
பிரிவினை பேத மானிடப் பாவியர்
பேதமை களைக! என்றார்.
(அன்பு நம்பிக்கை)...
பெரியோர் சிறியோர் அனைவரும் வெள்ளை
அண்ணா என்று அழைக்க நின்றார்! - தன்றன்
உறவாக வகுத்தே ஊராரை இணைத்தே
உலகமே வணங்க நின்றார்.
(அன்பு, நம்பிக்கை.)
இனமத மொழி என்ற வேற்றுமை நீங்க
இறையவர் அருளினைப் புரிந்தார்!- வெள்ளை
அண்ணை என்றுஉறவை தந்தேஇப்புவியை
அன்பாலே அணைத்து நின்றார்!- சிவ
ஆனந்தம் தந்து நின்றார்!
(அன்பு, நம்பிக்கை)-
பார்வாழும் மாந்தரை பரிசுத்த நூல்களை
ஓர்முகம் ஆக்கி நின்றார்!-வெள்ளை
அண்ணாவென்று உறவை எல்லோர்க்கும் தந்தே
அகிலத்தை காக்க வந்தார்!
(அன்பு, நம்பிக்கை..)
அறிவு இச்சை செயல் ஆனதன் வண்ணம்
ஆகும் இவ் வையம் என்றார்!- இந்த
வழிமுறை தனைத் தாங்கு மானிடம் வகுத்த
பேதமை களைக என்றார்.!
அன்பு, நம்பிக்கை..

(வேறு,..)

- அவர்
பாவங்கள் தொலைத் தருள்வார்! - என்றும்
பாசமாம் மழை பொழிவார்! - வெள்ளை
அண்ணை என்(று) உறவிடுவார்! - சிவன்
சமரச நெறி அருள்வார் - என்றும்
அனைவர்க்கும் வரம் அருள்வார்

## பூரண நிலவொளியில்..

ராகம் : தேஷ் தாளம் : ஆதி

பூரண நிலவொளியில் - உலகம்
பூரித்து கிடக்குதம்மா! - கண்கள்
பார்க்கும் திசைகள் எல்லாம் - அவர்
பால்நிறம் பேசுதம்மா!
உள்ளத்தின் தூய்மைசொல்லும் - வெள்ளை
அண்ணாவின் பூவடிவம்! - அவர்
உடல்போல் ஆடையுந்தான் - தூய
வெண் நில வின் வடிவம்!
பெம்மானைப் பெற்றவர் சூட்டிய நாமம்
பெரும்பேறு பெற்றதம்மா! - இராமச்
சந்திரன் நாமம் தேயாத நிலவாம்
தெய்வீகம் வாய்ந்த தம்மா!

பங்குனி உத்தரம் பூரணை நிலவை
பெம்மான் ஏற்றுநின்றார்! - அந்த
பால்நில(வு)அமர்ந்தே பரம்பொருள் அவரே
பார்வாழ அருள்கொழிப்பார்! - இராமச்
சந்ரலிங் கேஸ்வரர் வளர்கின்ற நிலவாய்
அருள்தந்து வாழ்வளிப்பார்! - எங்கள்
வளன் ஓங்க வரம்அருள்வார்!
(வேறு)
துன்பங்கள் துயரங்கள் தோல்விகள் நீங்க
இன்பம் என்(று)எம்வாழ்வு நிலைத்திங்கு வாழ
அன்பு நம்பிக்கை அடைக்கலமாக - வெள்ளை
அண்ணாவின் திருப் பாதம் பணிந்(து)என்றும் வாழ்க!

பூரணநிலவொளியில் - உலகம்
பூரித்துக் கிடக்குதம்மா! - கண்கள்
பார்க்கும் திசைகள் எல்லாம் - அவர்
பால்நிறம் பேசுதம்மா!
(அடுத்த வரி வெள்ளை அண்ணை பேசுவது போன்ற தெய்விக குரல்)
வெள்ளை அண்ணையின் தெய்வீகக்குரல்..
"பிள்ளைகாள்! நீங்கள் சுகம்பெறவேண்டும்! - எங்கும்
பிரிவனை பேதம் மறைந்திட வேண்டும்! - நீங்கள்
அனைவர்க்கும் அன்பினை ஊட்டிட வேண்டும்! - ஒரு
அழகான உலகத்தை ஆக்கிட வேண்டும்"
(பாடல் தொடர்க!)
பூரண நிலவொளியில் - உலகம்
பூரித்துக் கிடக்குதம்மா! - கண்கள்
பார்க்கும் திசைகள் எல்லாம் - அவர்
பால்நிறம் பேசுதம்மா!
திருமூல முனிவரின் சமரசம்தனைநீங்கள்
தேடுங்கள் என்றொலித்தார் - அவர்
ஒருதெய்வம் ஒரு குலம் ஒரு நிறை எனவே
உலகத்தை தாம் வகுத்தார்!
( பூரணை)
மணத்து மார்க்க சமத்துவம் பேசஎம்
வனார் தோன்றி நின்றார்! - அந்த
திருத் தக்க முனிவர் தன்பிறப் பெனத்தன்
டர்க்கும் சொல்லி நின்றார்.
(பூரணை)
ள்ளலார் தமிழ்நாட்டில் வகுத்தஓர் நெறியை
அண்ணாவும் வகுத்து நின்றார்! - வெள்ளை
அண்ணாவும் வகுத்து நின்றார்! - இராம
லிங்க சுவாமிகள் ஈழத்தில் இராம
ந்திரன் எனப் பிறந்தார்! - இன்று
லிங்கேசர் என அருள்வார்! - சிவ
லிங்கேசர் அருள்சொரிவார்!
ன்பும் கருணையும் அவர்வடிவம் - என்றும்
ருள்தரும் ஆட்சிதான் அவர் உலகம்! .. எங்கும்
த்தமர் உறவினை உலகத்தில் தேடிடும்
மைகள் உலகத்திற்(கு) அவர் வேதம்!.. இந்த

ஊமையர் உலகத்திற்(கு)அவர்வேதம்!
(பூரணை)
ஒருதெய்வம் அவரே யாம்பெற்ற அறிவே - வெள்ளை
அண்ணாவின் வரம்பெற வாருங்களே! - இராமச்
சந்ரலிங் கேஸ் வரர் எழுந்தருள் புரியும் யாழ்
கொழும்புத் துறைப் பதி பாடுங்களே! .. தையல்
நாயகி சமேத சிறி இராமச் சந்திர
லிங்கேசர் திருவருள் பெறுவீர்களே!
(வேறு,..)
கொழும்புத் துறைப்பதி வாழ்க!.. யாழ்
கொழும்புத் துறைப் பதி வாழக!
யோக சுவாமிகள் வாழ்க!. இராமச்
சந்திர இலிங்கேஸ்வரர் வாழ்க!வாழ்க!!வாழ்..க!!!

(பூரணை)

## இமைப் பொழுதும் என்நெஞ்சில்

ராகம் : சிந்துபைரபி தாளம் : ஆதி

எடுப்பு-
இமைப் பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
இமைப்பொழும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!!
இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!!!
சரணம்
சொந்த நாடென்றும் வந்த நாடென்றும்
சொல்லி வாழ்கின்ற மானிடா - உந்தன்
சொந்த வாழ்வென்றும் சுகந்தம் வீசவே
வந்த தெய்வத்தை பாடடா!

அன்பு நம்பிக்கை அடைக்க லம் கொண்டு
அண்ணல் சந்நிதி தேடடா! - வெள்ளை
அண்ணன் உறவாக அணைத்து உபதேசம்
அருளி நின்றதெம் வாழ்வடா! - இராமச்
சந்ர லிங்கேசர் பாடடா!

சொந்த நாடென்றும் வந்த நாடென்றும்

சொல்லி வாழ்கின்ற மானிடா! - உந்தன்
சொந்த வாழ்விங்கு சுகந்தம் வீசிட
வந்த தெய்வத்தைப் பாடடா!

புத்தர் யேசுஎன்றும் புனித நபி என்றும்
நித்தம் போரிடும் மானிடா! - உந்தன்
சித்தம் மகிழ்வெய்த தோற்றம் பல தந்து
நித்தம் அருள்செய்யும் மகானடா! - வெள்ளை
அண்ணன் திருநாமம் ஓதடா! - ஏக
தெய்வம் அவரென்று பாடடா!

மனித வடிவத்தில் ஈழ நல்லூரில்
வாழ்ந்து அருள் செய்த மகானடா! - அவர்
புனிதர் தாமென்று புத்த மதத்தோரும்
புகன்ற கதை எல்லாம் தேனடா! அன்று
பிக்கு உரை செய்தார் பாரடா!

வெள்ளை அண்ணையில் யேசு வடிவத்தை
வணங்கும் கிறித்தவர் பாரடா! - சுவாமி
ஞானப்(பி)ர காசராம் தாடிக் கிறித்தவர்
வியந்த கதைஎல்லாம் கேளடா! - நல்லூர்
சுவாமி கதைஎல்லாம் தேனடா!

பள்ளி மாணவன் இக்பால் தன்னிலே
பரிவு காட்டினார் குருமகான் - முன்னர்
பாசம் சிந்தினார் அருளினால் - குரு
அடக்க நிலைகண்டு அழுது தொழுதவன்
கண்ணில் அவர் அல்லா தானடா! - வெள்ளை
அண்ணை அண்ணலைப் பாடடா!
உலகம் எங்கணும் அமைதி தோன்றவே
உழைக்கும் மானிடம் வெல்கவே! - புவி
உண்மை மார்க்கத்தில் எழுகவே! - என்றும்
உள்ளத் தூய்மைக்கோர் வடிவம் மகரிசி
வெள்ளை அண்ணைதாழ் பணிகவே! - புவி

**கொள்ளை இன்பத்தில் நிறைகவே!..இராமச்**
**சந்ர இலிங்கேசர் அருள்கவே!!!**

## உத்தமர் உறவு

**ராகம் : வகுளாபரணம்** **தாளம் : ஆதி**

பல்லவி

ஊரெங்கும் நல்லோர் உருவாக வேண்டும்!
உறவென்று கொண்டாட வேண்டும்! - நாம்
உறவென்று கொண்டாட வேண்டும்!

அனுபல்வி

- அவர்

உள்ளொன்று வைத்தே புறமொன்று பேசா
உறவோராய் உருவாதல் வேண்டும்! - நல்ல
உறவோரே உருவாக வேண்டும்!

சரணம்

உத்தமர் உறவினை உலகத்தில் தேடும்
ஊமை மனிதர்களே! - என்றும்
சத்தியம் காத்தே சமத்துவம் சேர்த்தஎம்
தெய்வத்தை பாடுங்களே! - எங்கள்
தெய்வத்தை பாடுங்களே!

பிறந்தோம் வளர்ந்தோம் வாழ்ந்தோம் என்றே
பிதற்றும் மனிதர்களே - நீங்கள்
பிறந்ததன் பயனை பெறுவழி எனஎம்
பெம்மானைப் பாடுங்களே! -எங்கள்
பெம்மானைப் பாடுங்களே!

அந்நாளில் இறைவன் எம்மோடு வாழ்ந்தே
இரட்சித்த உபதேசங் கேளுங்களே! - அந்த
சிறப்புயர் வாழ்வின் கருணைசெய் தெய்வம்
திருவாய் மலர்ந்தவை தேருங்களே!! - அன்று
திருவாய் மலர்ந்தவை கேளுங்களே!
அகமும் புறமும் தூயவெண் வடிவென

தெய்விக ஒளி தந்த பெம்மான் அன்றோ! - இந்த
செகமதில் பாவியர் பாவம் தொலைபட
அருள் மழைபெய்தன்று நின்றார் அன்றோ! - இந்த
அகிலத்தில் ஆண்டவர் அவர்தான் அன்றோ!

ால்லா உயிர்களும் தன் உயிராக
ம் தேவன் கருணையே செய்தார் அன்றோ! -அவர்
ல்லோராய் ஞாலம் நமக்காகவே ஆக்கி
ம் பாவம் எல்லாமே சுமந்தாரன்றோ - என்றும்
ம்பாவம் சுமக்கின்ற பெம்மானன்றோ!

பம்மானைத் தேடி கொழும்புத் துறைஊரின்
வாமியார் வீதிக்கே விரையுங்களே! - இராமச்
ந்திர இலிங்கேஸ்வரா! காத்தருள்வாய்!என்றே
தவன்தம் திருப்பாதம் பணியுங்களே! - எங்கள்
தவன்தம் திருப்பாதம் பணியுங்களே! -
வேறு,..)

- என்றும்
ம் பெற்ற இன்பங்கள் பெறுவீர்களே! - வெள்ளை
ண்ணாவின் அருள் வாக்கு பெறுவீர்களே! - இறை
ருளாட்சி அற்புதம் உணர்வீர்களே! - வெள்ளை
ண்ணாவாம் அவதாரம் அறிவீர்களே! - என்றும்
னந்தப் பெருவாழ்வு வாழ்வீர்களே!!

**ம் நம சிவாய!**

கம் : சாரங்கா தாளம் : ஆதி

நமச்சி வாய என்றே ஓது மந்திரம் - என்றும்
வந்து கோடி நன்மை உனக்குத் தந்திடும்! - நீயோ
ாகும்பாதை இருளே நீங்கும் பாதம் சேர்த்திடும் - இங்கே
ழும்காலம் எல்லாம் நின்றே வசந்தம் வீசிடும்! - ஆகா
ழும் காலம் எல்லாம் உன்னை வாழ்த்துப் பாடிடும்.
ஙகே வாழ்த்துப் பாடிடும்.
நம சிவாய என்றே ஓது மந்திரம்!..

கருப்பை என்னும் இருளுக் குள்ளே கட்டுண்டிருந்தவா! - மனிதா
கருப்பை என்னும் இருளுக்குள்ளே கட்டுண்டிருந்தவா! - உந்தன்
காலம் வந்தபோதே மண்ணில் வீழ்ந்து அழுதவா!-மனிதா
கருப்பை என்னும் இருளுக்குள்ளே கட்டுண்டிருந்தவா!- உந்தன்
காலம் வந்த போதே மண்ணில் வீழ்ந்து அழுதவா!
இயற்கை தன்னில் இன்பம்தேடி இடர்கள் சேர்த்தவா!- எல்லா
உயிர்க்கும் துன்பம் செய்துஉன் இன்பம் காணத் துடிப்பவா!
ஓம் நமச்சி வாய..

இளமை முதுமை என்றே வாழ்வின் வேடம் ஏற்றவா!- எல்லாம்
மாயை என்ற முடிவில் தானே மனது வெந்தவா! -
அழுது தெய்வ அருளுக் கேங்கி தோல்வி கண்டவா!- நீயே
ஆக்கி வைத்த விதியால் எங்கும் துயர்கள் சேர்த்தவா!
ஓம் நமசி வாய என்றே ஓது மந்திரம்!..

உந்தன் வாழ்வில் ஒளியே காண உறவு சேர்ப்பவர்!- சிவனே
இலிங்கமாகி கோயில் கொண்டே வரங்களீபவர்!-எங்கள்
இராமச் சந்ர லிங்கேஸ்வரரோ கருணையானவர்!- தன்றன்
கரத்தில் ஏந்திக் காக்கும் அவர்தாம்
கடவுளானவர்!- எங்கள்
கடவுள் ஆனவர்!!- என்றும் கடவுளானவர்!
ஓம் நமசிவாய!

மனித னாக தோன்றித்தானே மகிமை செய்த்தவர்- அன்று
மனித னாக தோன்றித்தானே மகிமை செய்தவர் -ஈழ
மக்கள் வாழ புனித மார்க்கம் காட்டி நின்றவர்- ஈழ
மக்கள் வாழ புனித மார்க்கம் காட்டி நின்றவர்!

கல்வி செல்வம் எல்லாம் தந்தே கருணைசெய்தவர் '!-வெள்ளை
அண்ணைஎன்ற உறவைச்சொல்லி ஊரைச் சேர்த்தவர்!
ஊரைச்சேர்தவர்! -என்றும்
வெள்ளை அண்ணைத் தெய்வம்தானே கருணையானவர்!-என்றும்
கருணையானவர்!

ஓம் நமச்சிவாய என்றே ஓது மந்திரம்!

மனிதர்போடும் சமர்களாலே உள்ளம் வெந்தவர்!- அன்றே
சமர சத்தில் வாழத்தானே வழிகள் சொன்னவர்!- தம்மை

நாடி வந்த பக்தர் வாழ வழிகள் செய்தவர்!- எங்கும்
சிறுமை கொண்டு சீறுவோரைக் கவரச் சொன்னவர்!
ஓம் நமச்சிவாய என்றே ஓது மந்திரம்..
வெள்ளை அண்ணை நாமம் சொன்னால்
வெற்றிவந்திடும்! - எங்கள்
இதயம்என்ற மலரில் தெய்வம் ஆட்சி செய்திடும்!
கள்ளமற்ற வெள்ளை உள்ளம் கடிதில் தோன்றிடும். - எம்மில்
கள்ளமற்ற வெள்ளை உள்ளம் கடிதில் தோன்றிடும் - எங்கள்
கறை இல்லாத கருணைத் தெய்வம் காட்சி சேர்த்திடும்!
ஓம் நமசி வாய என்றே ஓது மந்திரம்.
ஓம்! ஓம்!! ஓம்!!!
அன்பே சிவம்!

## சீர் பரவும் ஈழமணித் திருநாடு!

ராகம் : ராகமாளிகா தாளம் : ஆதி

எடுப்பு
சீர்பரவும் ஈழ மணித் திருநாட்டின் அவதாரம்!
சிறப்பிலங்கு வையமதன் சர்வமத அலங்காரம்!
பல்லவி
சற்குருவாய் உபதேசம், சகோதரமாய் அரவணைப்பு!
எப்புவிக்கும் கிட்டாத வெள்ளை அண்ணை திருக்காப்பு!
அனுபல்லவி
நல்லூர் அவதாரம் ஞாலமெங்கும் புகழாரம்!
ஸ்ரீராமச் சந்ரலிங்கேஸ் வரர் பாதம் ஆதாரம்!
கொழும்புத் துறைப் பதிதான் குவலயத்தின் விழியாகும்!
கொழும்புத் துறைச் சிவன்தான் குவலயத்து விழியாகும்!!
சரணம்
அன்பு, நம்பிக்கை, அடைக்கலம் கொண்டே
ஆண்டவன் சந்நிதி வேண்டிடுவோம்!-தெய்வம்
வசப்படும் வழியை எளிதென வகுத்தளம்
அவதார அண்ணலைப் பாடிடுவோம்!

வெள்ளை அண்ணையாய் ஈசன் தோன்றியே
வகுத்த மாண்புகள் தாம் தெளிவோம்! - அண்ணல்
வருகையால் ஈழ நல்லூர்ப் பெருமைதாம்
வையம் போற்றியது எனப் புகல்வோம்!

நல்லூர் தனில்தோன்றி கொழும்புத் துறையூரில்
கோயில் கொண்டவர் கருணை என்போம்!-குரு
வடிவில் ஆட்கொள்ள அண்ணன் உறவாக்கி
இலிங்க வடிவானார் இறைவன் என்போம்! - வெள்ளை
அண்ணை இலிங்கேசர் வடிவம் என்போம்!
அவதார இறை வந்த ஆசார குடும்பத்து
அன்னை தந்தையை போற்றிடுவோம்! - நல்லூர்
சடையம்மா சித்தர் மரபு தாங்கிய
சிவனார் வரவுகண்டு உவந்திடுவோம்!

இனமதசாதிய வேற்றமை நீங்க
இனசனம் எனவே இவ்வையம் ஆக
உலகெலாம் அமைதியில் ஆனந்தம் காண
உறவிட்டார் இறைதோன்றி உபதேசமாக!

எந்த மதம்மொழி எந்த ஊர் ஆயினும்
சொந்த சகோதரர் உறவிடுவீர் - உங்கள்
பிரிவினை பேதங்கள் ஒழித்திடுவீர்! - உங்கள்
வெள்ளை அண்ணையின் வாக்கினை ஏற்றே
வெற்றி நடையிங்கு போட்டிடுவீர்! - ஒரு
சமரச வாழ்வினை தேர்ந்திடுவீர்!
பிள்ளைகளே! எந்தன் பிள்ளைகளே! நீங்கள்
பிரியமாய் ஒருமார்க்கம் கேளுங்களே! - அந்த
திருமூலர் வகுத்த திருமந்திரம் எங்கள்
தமிழ் மந்திரம் என ஓதுங்களே! - ஒரு
சமத்துவ உலகத்தை தேருங்களே!

அன்பு நம்பிக்கை அடைக்கலம் தோன்றவே
ஆண்டவன் சந்நிதி வீழ்வீரகளே! - உம்மை
விசுவாசம் கொண்ட பக்தர்என்று இறைவன்
விரைந் தருள் தருவதை உணர்வீரகளே!
- என்றும்
அழுதுஅவன் கருணையை பெறுவீரகளே! - இனி
பாவம் செய்யேன் எனப் பணிவீரகளே!

பல கோயில் கொடைகள் யாகங்கள் பலிகள்
பல வேண்டு தல் யாவும் வேஷங்களாம்! - இவை

பாவம் செய்வோர் மேலும் தம்பாவம் தொடர
கையூட்டு இலஞ்சம் போல் அமைபவையாம்!
- அது
இறைவாழும் சந்நிதிக்கு இழுக்கெனுமாம்!-இறை
இரக்கமே சுரக்கின்ற முழுவடிவாம்!!-ஏதும்
இல்லாமல் இருப்பாரோடு இருப்பவராம்! - ஏழைத்
தொண்டு செய்வார்க்கு என்றும் அருள்பவராம்!!
எட்டாத இறைவன் கிட்டும்ஓர் மார்க்கம்
எல்லோரக்கும் அருளியே நின்றனராம்! - என்றும்
அன்பு நம்பிக்கை அடைக் கலம் இவைதாம்
ஆண்டவன் சந்நிதிக்(கு) ஆனவையாம்!

எளிமையாய் யாவர்க்கும் அண்ணாவாய் தோன்றி
ஏற்ற உபதேசம் புரிந்தவராம்!-அன்று
அவரவர்க்கு ஏற்றவை அருளினராம்!! - ஊரில்
ஏழைகள் எளியவர் குழந்தையர் தொண்டென
பாடங்கள் பலவும் பயிற்றினராம்!! - எங்கும்
பெரும் வித்தகர் தோன்ற அருளினராம்!

இல்லாதே வருகின்ற பிள்ளைகள் பயில
இலவச பாட நூல் வழங்கினராம்! - அங்கு
மருத்துவம், உணவு, உடைகளும் தானே
வள்ளலார் வழங்கியே நின்றனராம்!

படித்தவர் பாமரர் அனைவரும் வணங்கிய
நல்லூர் சுவாமியாய் ஆனவராம்! - தன்றன்
பிரமச் சாரியம் எனும் தூய்மை காத்த
பெம்மானை அகிலமே போற்றியதாம்!

சபா மாளிகைஎனும் அவர்பிறந்தகத்தே
சித்தாச் சிரமத்து போதனையாம்! - தன்றன்
சீடர்கள் அழைத்தே சமரச நெறியை
சிந்தை வைப்பீர் எனப் பணித்தனராம்!

அகந்தனில் வேற்றுமை உணர்வுகொண்டாலும்
அன்பான வார்தைகள் பேசிடுவார்! - சிலர்
அன்பான வார்த்தைகள் பேசிடுவார்! - மக்கள்

தொண்டர்கள் எனச் சொல்லி பதவிக்கு வந்தே
சாதி மதம் மொழிச் சண்டை செய்வார்! - அது
தருகின்ற தலைமையில் தாம் சுகிப்பார்!

அற்பர்கள் அவர்கள் பாவ ஆன்மாக்கள்
அவர்கள் வழிக்(கு)அஞ்சி விலகிடுவீர்! - உங்கள்
உள்ளத்தின் தூய்மை உணர்வுகளாலே
உலகத்தை சமரசம் ஆக்கிடுவீர்! - இறை
அருள்கின்ற அதிசயம் தாம் உணர்வீர்! - பாவ
ஆன்மாக்கள் உம்பாதை தேடச்செய்வீர்!
எந்தெந்தக் காலத்தே எதுஎது மாற்றம்
எல்லாமே இறை ஓதி நின்றனராம் - இந்த
உலகத்து மானிட ஒருங்கிணைவொன்றை
உத்தம சீடர்க்கு உணர்தினராம் -இறை
உத்தம சீடர்க்கே உணரத்தினராம்!- நல்லூர்
அவதாரம் நெறி ஒன்றை வகுத்தனராம்!

வெள்ளை அண்ணையாய் எளிமை உறவிட்டு
வாழ்ந்தே காட்டிய பேரிறைவன்!-இங்கு
தாம் வந்த காலம் போதும் என்றே தாம்
தக்கவோர் நேரமே குறித்தனராம்!

மானிட உடலத்து வேதனை எல்லாம்
மக்களுக்(கு) ஆங்கே உணர்த்தினராம்!!-இந்த
நிலையாமை உலகில் நிறைவான இறைவனை
நினைந்திட வகுப்பதாய் ஆகினராம்!

தம்பள்ளி அறையில் நிர்வாண நிலையில்
தம்பாதை உணர்த்திய சயனமதாம்!- பக்தர்
அவர்பாதம் பணிந்தே கண்ணீரில் மிதந்தே
இறைவா உன் அடைக்கலம் என்றனராம்!
- நல்லூர்
புனித சவேரியார் கிறித்தவ குருஅங்கே
பக்தர்கள் புடைசூழ விரைந்தனராம்!-முன்னர்
ஞானப்பிரகாசர் பணிஈந்த தலத்தின்
திருத் தந்தை ஜெயசீலன் வரவதுவாம்!

- அந்த
திருத்தந்தை சேர கிறித்து மெய்யடியார்
ஜெபம் ஓதி மண்டியிட்டு இறஞ்சினராம்! -தங்கள்
இறைதூதர் யேசுவாய் உலகத்தின் பாவம்
ஏற்றாராய் எம்சிவன் பார்த்தனராம்!- ஜெப
ஓலத்தால் ஊரேமெய் சிலிர்த்ததுவாம்!

யாழ்ப்பாண நகரின் இசுலாத்து இக்பால்
ஆசானை வணங்கவே வந்தனராம்!—வெள்ளை
அண்ணா என்றழைக்க இமை திறந்தவரை
கண்ணீர் மல்க இக்பால் கூப்பினராம்!
- பிள்ளாய்
சுகமா? என்றே அண்ணல் முனகினராம்! - இக்பால்
அல்லா என்றே கண்ணீர் மல்கினராம்!

அகிலத்தை அணைத்தே பேதங்கள் களைந்தே
அருள்மழை பொழிந்த அண்ணலவர்! - ஒரு
அணையாத தீபம் போலே தன் மறைவை
அன்பர்க்கே உணர்த்திட ஆயினராம்!

புண்ணிய காலம் பங்குனி உத்தரம்
பௌர்ணமி தினம் இறை தேர்ந்தனராம்!-வரும்
பங்குனி உத்தரம் தேர்ந்தனராம்!-இறை
பூரணை தினந்தனை தேர்ந்தனராம்!
- அந்த
புனிதமாம் நாளில் ஜோதியில் கலந்தே
பூரணம் உணர்த்தியே நின்றனராம்!! - வந்த
மானிட சரீரத்தை உதறினராம்! - எங்கும்
வியாபித்தே அருள்தர கொழும்புத் துறைப்பதி


சிவனாக நின்றருள் தருபவராம்!..தையல்
நாயகி சமேத சிறிராமச் சந்திர
இலிங்கேசர் எமைஎன்றும் காப்பவராம்.

உலகெங்கும்  வாழும் மானிடர் கூடி
உறவாக்கும் ஒரு தெய்வம் அவர்தானன்றோ! -சிவ
நாமத்தில் எமைக்காக்க அருள்தரும் இறைவன்
ஞாலத்தில் பல பெயர் பெறுவாரன்றோ! - எல்லா
மதத்தோர்க்கும் பொதுவான இறைதான் அன்றோ! - அவர்
எமக்காக சிவனாக வந்தாரன்றோ! - சிவன்
சமரச மார்க்கந்தான் தந்தாரன்றோ!








ஸ்ரீ இராமச்சந்திர லிங்கேஸ்வரர் ஆலய பழைய தோற்றம்




ஸ்ரீ இராமச்சந்திர லிங்கேஸ்வரர் ஆலயம் 2012 புனருத்தாரணத்தின் பின்னர்









2012 .03.25 ம் திகதி நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தின் போது எடுக்கப்பட்ட புகைப் படங்கள்



25.03.2012 ம் திகதி நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தின் போது எம்பெருமான் தலத்தை தரிசிக்க வந்த யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இந்து நாகரீகதுறை பேராசிரியர் மா.வேதநாதன் அவர்களுடன் நூலாசிரியர்



எல்லோரும் வாழ்க!

# இராமசந்திர மகரிஷி அருளிய

## சமரச சிவமகாவாக்கியங்கள்

1.மார்க்கங்களை இறைவன் படைக்கிறான்; மார்க்கங்களை காப்பதற்கென மதங்களை மனிதன் படைக்கிறான்.

2.மார்க்கத்தைக் காப்பதில் கவனம் ஊன்றும் போது மறைபொருளைத் தேடும் பயணம் தேக்கமடைகிறது; இந்த தேக்கத்தைப் போக்க இறைவன் புதிய மார்க்கத்தைப் படைக்கிறான்.

3.பழையதைக் காப்போர் மத்தியில் புதிய தொன்று புகும்போது மோதல் ஏற்படுதல் இயல்பே.

4.மோதலில் வெற்றி பெற்றவர் தோல்வி அடைந்தோரின் பொருட்செல்வத்தையும் அருட் செல்வத்தையும் தமதாக்கிக் கொள்வது வழக்கமே.

5.ஒன்றிலிருந்து பலவும்; பலவிலிருந்து ஒன்றும் ஆவது பரிணாம வளர்ச்சியின் இரு கிளைகள் ஆகும்.

6.இறைவன், இயற்கை, சமூகம், கல்வி, சிந்தனை, உறுதி, முயற்சி ஆகியன மனிதனை வழிநடத்தும் ஏழு காரணிகள் ஆகும்.

7.மனிதனுக்கு இறைவன் வழங்கிய எல்லா வற்றையும் பயன்படுத்தி மனிதன் பேதத்தை வளர்த்தானேயன்றி ஒருமைப்பாட்டை உருவாக்க வில்லை.

8.பேதங்களைத் தோற்றுவிக்கும் காரணிகளை விலக்கி மனிதனை நோக்கினால் எல்லா மனிதரும், மனிதம் எனும் ஒரே வித்தில் முளைத்த செடிகளே என அறியலாம்.

9.ஞானிகள் மனிதத்தை தாண்டி மெய்யை உணர்ந்தவர்கள்.

10.சொல்லையும் செயலையும் விலக்கி மனிதன் தன்னுடைய இலக்கு மரணத்தை தாண்டிய மெய்யே என உணரும்போது தானே உருவாகும் ஒரு நிலைதான் ஒருமை - ஒற்றுமை - சமரசம்

அருட்சீடர்



கலாநிதி ஜெ.குமாரசுவாமி

மகரிஷி பதிப்பகம்
55 ஆடியபாதம் வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம்.
இலங்கை.

